www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 70

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 21 சனிக்கிழமை (04/02/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily


## அணி நடையில் தமிழ் பொலிஸார்

அனுராதபுரத்தில் இன்று நடைபெறும் சுதந்திர தின நிகழ்வில் பொலிஸ் அணி வகுப்பில் கலந்து கொள்வதற்கென 50 தமிழ்ப் பொலிஸார் அனுராதபுரத்துக்குச் சென்றுள்ளனர். வடபகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இந்த 50 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு காங்கேசன்துறை பொலிஸ் தலைமையகத்தில் வைத்து அணிவகுப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. கடந்த 21ஆம் திகதி தொடக்கம் குருநாகலில் வைத்து 50 பேருக்கும் மேலதிக பயிற்சியளிக்கப்பட்டது. சில நாள்களுக்கு முன்னர் அனைவரும் அநுராதபுரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## சுப்பிரமணிய சுவாமி இலங்கை வருகிறார்

இந்தியாவிலுள்ள ஜனதா கட்சியின். தலைவரும் தமிழகத்தின் மூத்த அரசியல்வாதியுமான சுப்பிரமணிய சுவாமி எதிர்வரும் 7 ஆம் திகதி இலங்கைக்கு வருகிறார். கொழும்பு வரும் அவர், முக்கிய தலைவர் களைச் சந்தித்துப் பேசுவார் எனக் கூறப்பட்டாலும், அது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை. இது அவரது தனிப்பட்ட பயணம் என்று தெரிவிக்கப்பட்டாலும் அவரின் இலங்கைப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதப்படுகின்றது.

## 8,000 பொலிஸார் கடமையில்

இலங்கையின் 64ஆவது சுதந்திரதினம் மற்றும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்காக 8,000க்கும் அதிகமான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். சுதந்திர தினமான இன்று இடம் பெறும் பொலிஸ் வாகன தொடரணிக்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நிகழ்வுகள் இடம் பெறும் பிரதேசத்தில் அதிவேகமாக வாகனங்கள் செலுத்துபவர்ககள் மற்றும் சட்ட விதிகளை மீறி வாகனங்கள் செலுத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## சுதந்திரதின நிகழ்வில் இந்திய இராஜதந்திரிகள்

இலங்கையில் நடைபெறும் 64 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கேற்கப் புது டில்லியைத் தளமாகக் கொண்டியங்கும் தூதுவர்களும் இராஜதந்திரிகளும் கொழும்பு வந்துள்ளனர். அநுராதபுரத்தில் நடைபெறும் சுதந்திர தின நிகழ்வுகளில் இவர்கள் பங்கேற்கவுள்ளனர். கடந்த மாதம் புதுடில்லி சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவர்களுக்கான அழைப்பை விடுத்திருந்த தாகத் தெரிவிக்கப்படுகிறது.

## போதைப் பொருளுடன் தாய்லாந்து யுவதி கைது

கொகேயின் போதைப்பொருளை கடத்த முயன்ற தாய்லாந்து பெண்ணொருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். மீட்கப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி 2 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை விவகாரத்தில் ஐ.நா. பொறுப்புடன் நடக்க வேண்டும்

### ஜெனிவாவில் அதிக கவனம் தேவை எனவும் மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து



நியூயோர்க்,பெப்ரவரி 4

இலங்கையின் போர்க்குற்ற விவ காரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஜெனிவாக் கூட்டத் தொடரில் அதிக கவனம் செலுத்திப் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என்று மனித உரிமைகள்கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும் அதன் உறுப்பு நாடுகளுக்கும் கண்காணிப்பகம் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் மார்ச்சில் நடைபெறவுள்ளது. இலங்கையில்இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு இதுவரை உரிய வகையில் பொறுப்புக் கூறப்படவில்லை என்பதை இந்தக் கூட்டத் தொடரில்

23

# தீர்வை மறுத்து மமதை காட்டினால் ஆசியாவின் 'அழிவு' ஆகும் இலங்கை

## தமிழ்க் கூட்டமைப்பு எச்சரிக்கை



கொழும்பு, பெப்ரவரி 4

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேசம் வழங்கும் சந்தர்ப்பங்களை இலங்கை அரசு தொடர்ந்தும் தட்டிக்கழிக்குமானால், இந்த நாட்டை சர்வதேச சமூகம் உலகில் நிராகரிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் சேர்த்துவிடக் கூடும். அதுமட்டுமன்றி, தமிழர்களுடன் பேசி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயலாமல் அரசு தொடர்ந்தும் போர் வெற்றி மமதையில் இருக்குமானால், ஆசியாவின் ஆச்சரியமாக அன்றி 'அழிவு' ஆகவே இலங்கை தோற்றம் பெறும்.

23

## ஐக்கியத்துக்கான நடவடிக்கையை எடுப்பதற்கு இனியும் தயங்கோம்

### இன்று இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினம்



கொழும்பு, பெப்.4

தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்ப தற்கு நாம் இனியும் தயங்கப் போவதில்லை. ஒளிமயமான எதிர்காலத்திற்கு எனது வாழ்த்துகள்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் சுதந்திரதினத்துக்கான வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சுதந்திரம் குறித்த உண்மையான மதிப்புணர்வுடன் இலங்கையின் 64 ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடக் கிடைத்துள்ளமை எமது தேசத்தின் அதிர்ஷ்டமாகும்.

இன்று கம்பீரமாய்ப் பறக்கும் இலங்கையின் தேசியக் கொடி, புதியதோர் தேசத்திற்குக் கட்டியம் கூறுவதாகவுள்ளது. சுதந்திரப் பொருளாதாரத்திற்கான வழிகள் திறக்கப்பட்டுள்ளன. ஒரு சுபீட்சமான எதிர்காலத்திற்கான தேசத்தின் அபிலாஷைகளுக்கு அது தினந்

23

## ஆணைக்குழு பரிந்துரையை ஒரு வாரத்தில் பிரிட்டிஷ் நாடாளுமன்றில் விவாதிக்குக

### அந்நாட்டு எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு, பெப்.4

இலங்கையின் நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்து பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் முழுமையான விவாதம் நடத்த வேண்டும் - என்று பிரிட்டிஷ் தொழிற்கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட பணிக்கும், அதன் பரிந்துரைகளுக்கும் இடையில் வேறுபாடுகள் இருக்கின்றன எனக் கூறப்படுவதால் இன்னும் ஒரு வாரத்தினுள் விவாதம் நடத்தப்பட வேண்டுமென மனித உரிமைகள் தொடர்பான விவாதத்தின்போது அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கெரி மெக்கத்தி தெரிவித்தார்.

இந்தப் பிரேரணையை வலியுறுத்திப் பேசிய தொழில் மற்றும் கூட்டுறவு கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கேப்ஸ், இலங்கையின் பொறுப்புக் கூறல்

23

## இராஜதந்திரிகள் 100 பேர் நாளை வருகை

யாழ்ப்பாணம், பெப்.4

சுதந்திரதினத்துக்காக அனுராதபுரம் மாவட்டத்துக்கு வருகை தரும் வெளிநாட்டு ராஜதந்திரிகளில் 100 பேர் வரையில் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

இன்று அனுராதபுரத்தில் இலங்கையின் 64 ஆவது சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறது. அதற்காக வருகை தரும் வெளிநாட்டு ராஜதந்திரிகளில் 100 பேர் நாளை யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர் என யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

காலை 9.40 மணிக்கு பலாலி விமான நிலை

23

## கணவருக்கு எதிராக இப்படியும் வழக்கு

யாழ்ப்பாணம், பெப்.4

அறைக்குள் பூட்டி வைத்துத் தன்னை நிர்வாணக் கோலத்தில் வீடியோப் படம் பிடித்தார் என்று கூறிப் பெண் ஒருவர் தனது கணவன் உட்பட ஐந்து பேருக்கு எதிராக முறையிட்டுள்ளார்.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று

23

## கெஹலிய, படைத்தளபதிகள் உட்பட அறுவருக்கு நீதிமன்றம் அழைப்பு

### லலித், குகன் வழக்கில் உத்தரவு

கொழும்பு, பெப்.4

ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழுவைச் சேர்ந்த லலித், குகன் ஆகியோர் காணாமற்போனமை தொடர்பாக எதிர்வரும் 15ஆம் திகதி நீதிமன்றில் முற்பட்டு விளக்கமளிக்க வேண்டுமென அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர்,இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட ஆறு

23


50 W நிகரான ஒளியைத்தரும் எமது 3W -ECO LED ஐ 30 நாள்களுக்கு பாவித்தால் உங்கள் மின்சாரக்கட்டணம்

1 ரூபா 62 சதம் மட்டுமே!



(C18783) (6,7,10)

எமது LED மின்குமிழை நீங்கள் தெரிவு செய்வதன்மூலம்

- மின்சாரச் செலவை 80 வீதமாகக் குறைத்துக் கொள்ள முடியும்
- 3 வருடங்களுக்கான உத்தரவாதம்/10 வருடங்களுக்கு மேலான பாவனை உத்தரவாதம்
- சூழலை மாசுபடுத்தாத, பக்கவிளைவுகளை ஏற்படுத்தாது.

Global Business Network
231 Temple Road, Nallur, Jaffna.
Tel: 021 320 1771 / 077 85 35625.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடியாணைப் பத்திரத்தைக் காட்டி பட்டதாரிகளை மிரட்டிய பொலிஸ்

## சந்திக்கச் சென்றவர்களை பல மணிநேரம் காக்க வைத்தார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், பெப். 4

பிடியாணைப் பத்திரத்தைக் காண்பித்து வேலையற்ற பட்டதாரிகளைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் மிரட்டிய சம்பவம் நேற்று யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியில் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளில் சுமார் நூறுபேர் வரை நேற்று முற்பகல் வேளை யாழ். பெருமாள் கோயிலடியில் ஒன்று கூடினார்கள்.

பட்டதாரிகள் இவ்வாறு கூடி நிற்பதை அறிந்த யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்யப்பட்டவர்களை ஏற்றிச் செல்லும் வாகன சகிதம் அங்கு வந்தனர்.

பட்டதாரிகளிடம் சிங்கள மொழியில் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றைப் பிடியாணைப் பத்திரம் எனத் தெரிவித்துக் காண்பித்த பொலிஸார் பட்டதாரிகளை உடனடியாகக் கலைந்து செல்லுமாறும் இல்லையேல் அனைவரையும் கைது செய்யப் போவதாகவும் கடும் தொனியில் மிரட்டினார். கலைந்து செல்லத் தயங்கிய பட்டதாரிகளைக் கைது செய் யப் பொலிஸார் முயன்றபோது பட்டதாரிகள் அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்று விட்டனர்.

பின்னர் நண்பகல் வேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்கு பட்டதாரிகள் சென்றனர். மாவட்டத்திலுள்ள அதிக எண்ணிக்கையான பட்டதாரிகளுக்கு வேலை வழங்குமாறு கேட்பதற்காக ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு கோரவே அவர்கள் அமைச்சர் டக்ளஸிடம் சென்றனர்.

அமைச்சரின் அலுவலகத்தின் உள்ளே பட்டதாரிகள் நீண்ட நேரம் காத்திருக்க வைக்கப்பட்டனர். பிற்பகல் வரை அவர்கள் காத்திருந்தனர். பின்னர் பட்டதாரிகளை அமைச்சர் சந்தித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்த பிரதமர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு எதிராகப் பட்டதாரிகள் போர்க் கொடி தூக்கலாம் என்ற அச்சம் காரணமாகவே பொலிஸார் பட்டதாரிகளை விரட்டியதாகவும், இதனை அடுத்து அமைச்சரின் அலுவலகத்துக்குச் சென்ற பட்டதாரிகள் நீண்ட நேரம் காத்திருக்க வைக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

12.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை காத்திருப்பு தொடர்ந்தது. 5 மணிக்கு அலுவலகத்துக்கு வந்த டக்ளஸ் பட்டதாரிகளைப் பார்த்து நூறு பேருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்படுமெனவும் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வந்த செய்தி ஆத்திரமூட்டுவதாகவும் எரிந்து விழுந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-3-13-16)

# நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தில் மோசடி; பிணை மனு மீதான தீர்ப்பு திங்களன்று

## சந்தேகநபர்கள் இருவரும் விளக்க மறியலில்

கொழும்பு, பெப்.4

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற சீனி மோசடி வழக்கில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் இரண்டு சந்தேக நபர்களின் பிணை மனுக்கள் மீதான தீர்ப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளது.

2010ஆம் ஆண்டு சீனி விற்பனையில் மோசடி நடந்ததாகத் தெரிவிக்கப்பட்ட இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களாக ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் மற்றும் கிளை முகாமையாளர் ஆகிய இருவரையும் யாழ். குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படும் பணத்தின் பெரும்பகுதி திருப்பிச் செலுத்தப்பட்டிருப்பதால் விசாரணையின் பின்னர் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது கிட்டத்தட்ட ஒருவருடம் நிறைவடைந்த நிலையில் ப.நோ.கூ. சங்கத்தின் விற்பனையாளர் ஒருவரும் காசாளர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் நேற்றையதினம் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்கள் மீதான பிணை விண்ணப்பங்கள் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டன. முதலாவது சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவும், இரண்டாவது சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி திருமதி. சறோஜினி இளங்கோவனும் வாதாடி பிணை மனுக்களைச் சமர்ப்பித்தனர்.

பிணை விண்ணப்பங்களை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் ஆட்சேபித்திருந்தனர். அரச சொத்துக்களுக்கு எதிரான குற்றங்கள் சட்டத்தின் கீழ் இது தொடர்பான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், பிணை வழங்க ஏதுவான விசேட சூழ்நிலைகள் இவ்விரண்டு சந்தேக நபர்கள் தரப்பில் இருக்கின்றன என்று இருவரினதும் சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

இருதரப்பு சாட்சியங்களையும் பதிவுசெய்த பின்னர் பிணை விண்ணப்பம் தொடர்பான தீர்ப்பை நாளை மறுதினம் வழங்குவதாகத் தெரிவித்து நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார். (ஒ-4)



சென்னையில் இருந்து சட்டவிரோதமான முறையில் பெரிய வெங்காய விதைகளைக் கொண்டு வந்தவர் கட்டுநாயக்கா சுங்கத்திணைக்கள அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

## தொழில் தேடுவோர் விவரம் திரட்டல்

தென்மராட்சி, பெப்.4

தென்மராட்சிப் பிரதேசத்தில் தொழில் தேடுவோரின் விவரங்கள் பதிவுகள் மேற்கொள்ளும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேலை தேடுவோருக்குரிய படிவங்கள் பிரதேச செயலக திட்டமிடல் கிளையில் விநியோகிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# மக்கள் வங்கியின் சுதந்திரதினச் சிறப்பு

யாழ்ப்பாணம், பெப்.04

மக்கள் வங்கியினால் இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி 1ஆம் திகதி அதிகாலை 12.01 தொடக்கம் பெப்ரவரி 7 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் ரூபா 500 பரிசாக வழங்கப்படுகின்றது.

மக்கள் வங்கியின் ஸ்டான்லி வீதிக்கிளை ஆளணியினர் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் காங்கேசன் துறைக்கிளை ஆளணியினர் - தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும், யாழ். பிரதான வீதிக்கிளை ஆளணியினர், குருநகர் மகப்பேற்று மருத்துவமனைக்கும், ஹோலிகுரோஸ் வைத்தியசாலைக்கும் நேரடியாக வருகை தந்து பரிசில்களை வழங்குவர்.

அவ்வாறே ஊர்காவற்றுறை ஆளணியினர் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கும் வேலணைப் பிரதேச வைத்தியசாலைக்கும், அச்சுவேலிக்கிளை ஆளணியினர் அச்சுவேலி அரச வைத்திய சாலைக்கும் புத்தூர் அரச வைத்திய சாலைக்கும், சங்கானைக் கிளை ஆளணியினர் சங்கானை ஆதார வைத்திய சாலைக்கும் பண்டத்தரிப்பு மாவட்ட வைத்தியசாலைக்கும் சென்று வழங்குவர்.

மேலும் சுன்னாகம் கிளை ஆளணியினர் அளவெட்டி அரச வைத்தியசாலைக்கும், கோப்பாய் அரச வைத்திய சாலைக்கும், சாவகச்சேரி கிளை ஆளணியினர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கும், வல்வெட்டித்துறைக் கிளை ஆளணியினர் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கும், கன்னாதிட்டிக் கிளை ஆளணியினர் இணுவில் அரச வைத்திய சாலைக்கும், பருத்தித்துறைக் கிளை ஆளணியினர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் நேரடியாகச் சென்று பரிசில் களை வழங்குவர்.

குறித்த தினங்களில் பிறந்த குழந்தைகளுக்கான பரிசைப் பெறாதவர்கள் அருகில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து முகாமையாளரிடம் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். (ந-16)

# இரணைமடுக் குளத்தில் மூழ்கியவர் நேற்றுவரை மீட்கப்படவில்லை

கிளிநொச்சி, பெப்.4

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார். இவர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. நேற்று பல மணி நேரம் தேடியும் இவர் கிடைக்கவில்லை. சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான 9ஆம் வீதி, சாந்தபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த காலு குளோமற் ஜெயபாலன் (வயது 49) என்பவரே நீரில் மூழ்கியுள்ளார்.

நேற்று அதிகாலை குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற குறித்த நபர் 22 அடி ஆழமான பகுதியில் மூழ்கியுள்ளார். ஏனையவர்கள் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினரிடம் அறிவித்தனர். எனினும் குளத்தில் சுழியோடியே மூழ்கியவரை மீட்க வேண்டியுள்ளதால் கடற்படையினரே அதனை செய்ய வேண்டுமென இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (6-10)

## வயது குறைந்தோருக்கு சிகரெட் விற்றவர்கள் 13 பேருக்கு அபராதம்

21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த கடை உரிமையாளர்கள் 13 பேர் யாழ்.நீதிமன்றில் 52 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர். தவிர அனுமதியின்றி மேலதிகமாக 'கள்' வைத்திருந்த 5 பேரும் 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினர்.

யாழ்.மதுவரிப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் கோண்டாவில் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே இந்த 18 பேரும் அகப்பட்டுக் கொண்டனர். (ஒ-4)

# இரகசியமாக 'தேன்கூடு' பார்த்து கண்ணீர் விட்டு அழுத வைகோ

மீண்டும் விடுதலைப் புலிகளின் போர் தொடரும் என்ற கருத்துப்பட தயாரிக்கப்பட்டுள்ள 'தேன்கூடு' என்ற திரைப்படத்தை ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ சென்னையில் இரகசியமாகப் பார்த்தார்.

படத்தில் வரும் உருக்கமான காட்சிகளைக் கண்டு அவர் மனம் வெதும்பினார்; சில காட்சிகளின் போது கண்ணீர் விட்டு அழுதார்.

படத்தை தமிழகத்தில் திரையிடுவதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பும் என்றும், திரைப்படத் தணிக்கைக் குழுவின் அனுமதியும் கிடைக்காது எனவும் திரையுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் வாழும் தமிழர்களின் இயல்பான வர்ழ்க்கையில் காதல் காட்சிகளுடன் படம் ஆரம்பமாகிறது. இலங்கையில் நடந்த போர்க்களக் காட்சிகள், ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தம், இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த போர் சம்பவங்கள், பிரபாகரன் உயிரோடுதான் இருக்கிறார், அவர் இறக்கவில்லை, மீண்டும் விடுதலைப் புலிகளின் போர் தொடரும் என்ற ரீதியில் காட்சிகள் அமைக்கப்பட்டு 'தேன்கூடு' என்ற திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திரைப்படத்தில், மனிதவெடிகுண்டால் கொலை செய்யப்பட்ட ராஜீவ் மரணத்தை நியாயப்படுத்தியும் சில காட்சிகள் இடம்பெற்றுள்ளன. மேலும், இலங்கைக்கு இந்திய அரசு அனுப்பி வைத்த அமைதிப்படை பற்றியும் விமர்சிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் போரில் பிரபாகரன் இறக்கவில்லை; அவர் உயிரோடு தான் இருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டும் வகையில், படத்தின் கதையும் காட்சியும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் படத்தை, சென்னையில் உள்ள ஒரு பிரிவியூ திரையரங்கில் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ நேற்றுமுன்தினம் இரகசியமாகப் பார்த்தார். படத்தில் வரும் உருக்கமான காட்சிகளைக் கண்டு அவர் மனம் வெதும்பினார்; சில காட்சிகளில் கண்ணீர் விட்டு அழுதார்.

முழுக்க முழுக்க விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக எடுக்கப்பட்ட இந்தப் படம், புலிகளின் ஆதரவாளர்களுக்கு புதிய நம்பிக்கையைத் தரும் வகையில் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் படத்திற்குத் தணிக்கைக்குழு அனுமதி கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மேலும், ராஜீவ் மரணத்தை நியாயப்படுத்தும் காட்சியும் உருவாக்கப்பட்டதால் இந்தப் படத்தை தமிழகத்தில் திரையிடுவதற்கு அரசியல் கட்சிகளின் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் படத்திற்கு எதிர்ப்புக் கிளம்பினால், தமிழகத்தில் திரையிடாமல் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்காக திரையிடுவதற்குத் திட்டமிடப்பட்டு வருகிறது எனத் தெரியவருகிறது. (சி-10)

# வல்லையில் விபத்து இரு இளைஞர்கள் காயம்

யாழ்ப்பாணம், பெப். 4

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர்களைப் பின்னே சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்று மோதியதால் ஒருவர் தூக்கி வீசப்பட்டு மின்கம்பத்துடன் முகம் மோதுண்டு யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். மற்றையவர் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

இந்த விபத்துச் சம்பவம் வல்லை புறாப்பொறுக்கிப் பகுதிக்கு அருகில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் நேர் முகத்தேர்வு ஒன்றுக்குச் சென்று கொண்டிருந்தவர்களான கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ரி. கோகுலதாஸ் (வயது - 21) மற்றும் நி. நிகேதன் (வயது - 21) ஆகியோரே காயமடைந்தனர்.

இருவரும் உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் கோகுலதாஸ் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவ இடத்தில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். மோட்டார் சைக்கிளும் கடும் சேதத்திற்குள்ளாகியது. விபத்தில் சம்பந்தப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 'பிக்கப்' வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்கு நெல்லியடிப் பொலிஸார் எடுத்துச் சென்றனர். (ஒ-4-15-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தென்கிழக்கு மாகாண சபை கோரிக்கை வலுப்பெற்றால்...!

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களை ஒன்றிணைத்துத் தென்கிழக்கு மாகாண சபையை அமைக்க வேண்டும். இவ்வாறு ஒரு கோரிக்கையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துள்ளது. அந்த மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். இது விடயம் குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளது. தென்கிழக்கு மாகாண சபையை உருவாக்குவது என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே அரசுக்கு ஆதரவு வழங்கப்படும்.

இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும், அக்கட்சியின் நீண்டநாள் உறுப்பினரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவருமான ஹசன் அலி.

பல இனங்கள் வாழும் நாடுகளில், சமஷ்டி ஆட்சி முறை வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதும், அங்குள்ள மக்கள், குறிப்பாகச் சிறுபான்மை இன மக்கள் சகல வகையான ஜனநாயக உரிமைகளுடன் வாழ்வதும் பல ஆண்டுகளுக்கு முன்னரே, வழக்கிலிருந்து வருகிறது.

பென்னம்பெரிய நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, ஜேர்மனி, நைஜீரியா, பாகிஸ்தான் போன்றவற்றிலும் -

ஒஸ்ரியா, எதியோப்பியா, வெனிசுலா, சுவிற்சர்லாந்து, ஈராக், கமரூன் போன்ற சிறிய நாடுகளிலும் சமஷ்டி ஆட்சி முறை, வெற்றிகரமாகவும் இன சௌமியம் நிறைந்தும் விளங்குகின்றது.

இத்தகைய முன்னுதாரணங்களை வைத்தே, இலங்கை சுதந்திரம் அடைந்த (1948) ஒரு வருட காலத்தில் (1949இல்), தமிழர்கள் தரப்பில் சமஷ்டி ஆட்சிமுறையே உகந்தது; அதனை இந்த நாட்டிலும் நடைமுறையாக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அவ்வேளை கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களும் அதற்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள்.

ஐம்பது, அறுபதுகளில் எம்.எம். முஸ்தபா, ஏ.சி. அகமது போன்றோர் சமஷ்டிக் கட்சியின் - தமிழரசுக் கட்சியின் - நாடாளுமன்ற உறுப்பினர்களாக அங்கம் வகித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் கொழும்பு அரசுகள் தமது அரசியல் தகிடுதத்தங்களால், கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களைத் தமது பக்கம் ஈர்த்தும் அவர்களின் அரசியல் அபிலாசைகளின் வழித்தடத்தை மாற்றியும், மாற்றவைத்தமையும் இந்த நாட்டின் அரசியல் "கலாசாரத்தின்" ஓர் அங்கம் எனலாம்.

அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் ஒரு தரப்பிடம் இருந்து வந்துள்ள இந்த நிலைப்பாடு, அதற்கான ஆதரவு அல்லது சீரணிக்கமறுக்கும் போக்கு என்பன இனித்தான் தெரியவர வேண்டும்.

ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற சுலோகத்தை ஏந்திக்கொண்டு, சிறுபான்மையினரின் தனித்துவத்தையும், ஏன் அவர்களின் இருப்பையும் கூட இல்லாமல் செய்யவேண்டும் என்ற உள்ளார்ந்த நோக்கத்துடன் செயற்படும் சக்திகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய கோரிக்கையை ஏறெடுத்துத்தானும் பார்க்குமா என்பது, ஹசன் அலி வெளிப்படுத்தி உள்ள கருத்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டால் மட்டுமே வெளிக்கிளம்பும்.

எனினும், தேசிய பிக்குமார் முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்றவை இக்கருத்துக்கு எவ்வாறு சன்னதம் ஆடும் என்பதனை இலகுவில் அனுமானித்துக்கொள்ளலாம்.

அரசுடன் சேர்ந்து இயங்கும் அந்தக் குழுமங்கள் ஒரு புறமிருக்க, கிழக்கு முஸ்லிம்கள் மீது, அரசின் ஆக்ரோஷம் எவ்வாறு இருக்கும் என்பதனை எல்லோரும் அறிவர்.

ஏற்கனவே இயங்கும் கிழக்கு மாகாண சபைக்கோ, தேர்தல் நடத்தப்படாமல் வெறும் பெயர்ப்பதிவுடன் உள்ள வடக்கு மாகாண சபைக்கோ காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால், நாட்டில் இரத்த ஆறு ஓடும் என்று தேசிய பிக்குமார் முன்னணியின் தலைவர் ஏற்கனவே இனவாதம் கக்கிவரும் நிலையில்-

மேற்குறிப்பிட்ட அதிகாரங்களை மாகாணசபை களுக்கு வழங்குவது தமிழர்களுக்குத் தனிஈழ இராச்சியமொன்றைத் தாரைவார்த்துக் கொடுப்பதற்கு ஒப்பாகும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் மற்றொரு புறம் கொக்கரித்துக் கொண்டு புறப்பட்டிருக்கும் நிலையில் -

இவற்றுக்கும் மேலாக, -

பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்கினால், (தெற்கில் உள்ள) பெந்தரைக்கும் என்னால் போக முடியாது -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு தனிநாடு ஒன்றே தேவைப்படுகிறது. தனிநாடு ஒன்றுக்குரிய அதிகாரத்தை நாம் கொடுக்கவேமாட்டோம். அதுதான் எமது நிலைப்பாடு - என்று ஜனாதிபதியும் தெரிவித்துள்ளார்.

இத்தகு நிலையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைக்கு என்ன நடக்கும் என்பதனைப் பொறுத்திருந்து பார்க்க மட்டுமே முடியும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், வடக்கு, கிழக்கில் எந்த ஓர் அரசியல் தீர்வும் தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி, முஸ்லிம் மக்களுக்கும் உரியதே. தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் எங்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றே தேவை என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் -

முஸ்லிம் மக்களுடைய உரிமைகள், அவர்களுடைய தேவைகள் குறித்து நாம் கவனயீனமாக இருக்கமாட்டோம். ஒரு போதும் அவற்றை உதாசீனம் செய்யமாட்டோம் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் ஒரு செவ்வியில் கூறியிருந்தார்.

அரசாங்கம், வடக்கு, கிழக்கு மக்களுக்கு, நியாயமான அதிகாரப் பகிர்வை வழங்க முன்வருமானால்-

தென்கிழக்கு மாகாண சபை அமைப்பதைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா, அவர்களின் அரசியல் தலைமைத்துவம் என்ன நிலைப்பாட்டை மேற்கொள்ளும் என்ற வினா எழுவதற்கே இடமில்லை என்று சொல்லலாம்.

# கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தை தேடிய வெள்ளைக்கார அம்மையார்

யாழ்ப்பாணம், பெப்.4

வெளிநாடு ஒன்றில் இருந்து சுற்றுலாப் பயணியாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வெள்ளைக்கார அம்மையார் ஒருவர் யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தைத் தேடி யாழ். நகரப் பகுதி முழுவதும் அலைந்தார். இறுதியில் ஒருவாறு அதனைத் தேடிப் பிடித்து கறுத்தக்கொழும்பான் மாம்பழத்தையும் ருசித்து மகிழ்ந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

வெளிநாடு ஒன்றில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலாப் பயணியாக வந்துள்ளார் இந்த வெள்ளைக்கார அம்மையார். யாழ். நகரப் பகுதியில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் அவர் தங்கியுள்ளார். கடந்த சில வருடங்களுக்கு முன்னரும் தனது நண்பர் ஒருவருடன் இவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார். முன்னர் யாழ்ப்பாணம் வந்தபோது அவருடன் வந்த நண்பர் அவருக்கு யாழ். நகரப் பகுதிப் பழக்கடை ஒன்றில் மாம்பழத்தை வேண்டிக் கொடுத்துள்ளார். அந்த மாம்பழத்தை அவர்கள் சுவைத்து மகிழ்ந்தனர். அதன் சுவை அவர்களுக்கு நன்றாகப் பிடித்துவிட்டது. அவர்கள் அந்த மாம்பழத்தின் பெயரைக் கடைக்காரரிடம் கேட்டுள்ளனர். கடைக்காரரும் இதுதான் யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் என்று கூறியுள்ளார்.

இதன் பின்னர் இப்போது தனியாக யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள அந்த வெள்ளைக்கார அம்மையார் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தைத் தேடி யாழ். நகரப் பகுதி முழுவதும் அலைந்தார். வீதியில் செல்வோரிடம் அவர் பெயரைச் சொல்லி விசாரித்தார். எனினும் இந்தக் காலப்பகுதியிலி மாம்பழ சீசன் இல்லாமையால் பழக்கடைகளிலும் மாம்பழம் இல்லை. எனினும் இந்த வெள்ளைக்கார அம்மையாரின் மாம்பழ ஆசையைக் கேட்டறிந்த இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ஒருவர் எங்கோ தேடிச்சென்று கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தை வாங்கிக் கொடுத்தார். மாம்பழத்தைப் பார்த்த வெள்ளைக்கார அம்மையாரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர் உடனேயே அந்த மாம்பழத்தை சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்டார். (த-17)

# சில்லறை வர்த்தகர்களும் வரி செலுத்துவது அவசியம்

யாழ்ப்பாணம், பெப்.4

மருந்துப் பொருள்களைத் தவிர ஏனைய பொருள்களை மொத்தமாகவோ சில்லறையாகவோ விநியோகம் செய்யும் வர்த்தகர்கள், ஒருவீதம் விற்பனை வரியைச் செலுத்தியே ஆகவேண்டும் என்று யாழ்.பிராந்திய உள்நாட்டு இறைவரித் திணைக்களப் பிரதி ஆணையாளர் பா.சிவாஜி தெரிவித்தார்.

யாழ்.வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்தில் உள்ள பொருள் விநியோகம் செய்வோருக்கான கலந்துரையாடல் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விநியோகஸ்தர்கள் கலந்து கொண்டனர். இதன் போதே மேற்கண்டவாறு இறைவரித் திணைக்களப் பிரதி ஆணையாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மூன்று மாவட்டங்களிலும் உள்ள விநியோகஸ்தர்கள் மூலம் மாதாந்தம் சராசரியாக 4 லட்சம் சிமெந்து பைக்கற்றுகளும், 11 ஆயிரம் அங்கர் பைக்கற்றுகளும் விற்பனை ஆகின்றன என வர்த்தகர்கள் தெரிவித்திருந்தனர்.

கடந்த இரண்டு வருடங்களாக யாழ்.பிராந்திய அலுவலகத்தில் வருமானவரி, தேசத்தைக் கட்டி எடுப்புவதற்கான வரி, விருப்பத்துக்குரிய பெறுமதி வரி போன்ற வரிகள் அறவிடப்படுகின்றன. இந்த வரி அறவீட்டு நடவடிக்கைக்கு பொதுமக்கள், வர்த்கர்கள், வரி ஆலோசகர்கள், கணக்காளர்கள் ஆகியோர் பூரண ஒத்துழைப் பினை வழங்கி வருகின்றனர்.

இந்த வரிகள் ஒவ்வொன்றும் அந்தந்த வரிச் சட்டங்களுக்கு அமைவாக அறவிடப்படுவதால் வரிகளுக்குப் பொறுப்புடையவர்கள் தாமதமின்றி அவற்றைச் செலுத்த வேண்டும்.

தாமாக முன்வந்து செலுத்துவோருக்குக் கடந்த கால வருமான விவரங்கள் கேட்கப்படமாட்டாது. கடந்த வருடங்களில் தலைமையகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வரி சேகரிப்பு இலக்குகளை அடைந்து கொள்வதற்கு வர்த்தகர்கள் போதிய ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். வர்த்தகர்கள் தமக்குள்ள தேவையற்ற போட்டிகளைத் தவிர்த்து உரிய வரிகளை நியாயமான முறையில் செலுத்த வேண்டும். அதேபோன்று சிமெந்து விநியோகஸ்தர்களும் போட்டிகளைத் தவிர்த்து விநியோகப் பகுதிகளைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும்- என்றார். (த-13-16)

# யாழ்- தியத்தலாவை பஸ்ஸில் கடத்தப்பட்ட அம்மன் சிலை

### ஓமந்தையில் இராணுவத்தினர் மீட்டனர்

கொழும்பு, பெப்.4

யாழ்ப்பாணத்திலிருந்து தியத்தலாவை நோக்கிப் பயணித்த பஸ்ஸில் கடத்திச் செல்லப்பட்ட அம்மன் சிலையொன்று ஓமந்தையிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

20 கிலோ எடையுடன் ஒன்றரை அடி உயரமான பெறுமதிமிக்க இந்த அம்மன் சிலை வெண்கலத்திலானது என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயணிகளை இறக்கி, பஸ்ஸைச் சோதனை செய்தபோதே ஆசனமொன்றின் கீழ் உரப்பை ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த அம்மன் சிலை மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட அம்மன் சிலை மேலதிக விசாரணைகளுக்காக ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த இராணுவ அதிகாரி கூறினார். யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயம் ஒன்றில் இருந்தே இது களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சிலை தொடர்பான மேலதிக விசாரணை களை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-22)

# ஜனாதிபதி வருகை எங்கும் 'காப்பெற்'

யாழ்ப்பாணம், பெப்.4

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்.மத்திய கல்லூரியில் அமைக்கப் பட்டுள்ள நீச்சல் தடா கத்தைத் திறந்து வைப் பதற்காக நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ் வருகிறார். ஜனாதிபதியின் வருகையையொட்டி யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலும் புனரமைக்கப் பட்டுள்ளது. கூடைப்பந்தாட்டத்திடலின் ஆடு களத்துக்கு இரவிரவாகக் 'காப்பெற்' போடப்பட்டு அது புனரமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வருகைக்காக ஏற்கனவே மத்திய கல்லூரியைச் சூழவுள்ள வீதிகளுக்குக் 'காப்பெற்' போட்டுப் புனரமைக்கப்பட்டதுடன் மைதானமும் சீர் செய்யப்பட்டது. மத்திய கல்லூரியின் கட்டடங்களுக்கு வர்ணம் பூசும் பணிகளும் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டன. மத்திய கல்லூரியில் நீச்சல் தடாகத்துக்கு பின்புறமாக இருந்த பழைய கட்டடம் ஒன்றும் இடித்து அகற்றப்பட்டது.

தற்போது கூடைப்பந்தாட்ட ஆடுகளமும் 'காப்பெற்' போடப்பட்டுப் புனரமைக்கப்பட்டுள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இரவிரவாக இந்தப் பணிகள் இடம்பெற்றன. இந்தப் பணிகள் அனைத்தும் ஜனாதிபதியின் வருகையை ஒட்டியே மேற்கொள்ளப்பட்டன. (த-17)

## நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

வடஇலங்கைச் சுதேச மருத்துவ சபையின் அவசர கலந்துரையாடல் பிற்பகல் 2மணிக்கு 188 வி-மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடஇலங்கை சுதேச மருத்துவ சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14)

**மலர்வெளியீடு**

''குப்பிளான் தந்த விசுவம்பா விசாலாட்சி மாதாஜி அம்மையார்'' எனும் முத்துவிழாச் சிறப்புமலர் வெளியீட்டு விழா பிற்பகல் 2மணிக்கு குப்பிளான் சொக்கவள வுச் சோதி விநாயகர் ஆலயத்தில் ஆலயத் தலைவர் சீ. குணலிங்கம் தலைமையில் நடைபெறும். (த-14)

**தியான வகுப்புகள்**

சிவானந்த மகரிஷி யோக நிலையத்தின் புதிய யோகாசன தியான வகுப்புகள் காலை 6.30 மணிக்கு வேதாந்த மண்டபத்திலும் காலை 9 மணிக்கு காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. (த-14)

**கூட்டம்**

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் ஆளுநர் சபைக் கூட்டம் காலை 9.30 மணிக்கு கிளை மண்டபத்தில் கிளையின் தலைவர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை, பெரும்பான்மை வேறுபாடு நாட்டில் ஏதுமில்லை என்கிறார் பிரதமர்

## யாழ். நகரில் நடந்த நிகழ்வில் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.4

ஒவ்வொருவரும் தமது மதங்களையும் அவை காட்டும் வழிமுறைகளின் படியும் வாழ வேண்டும். பிற மதங்களை கௌரவமாக மதிக்க வேண்டும். இவ்வாறு எல்லோரும் இருந்தால் எந்தப் பிரச்சினையும் தலைதூக்க மாட்டாது.

ஒரு சிலர் தமது சுயலாபத்துக்காக மதங்களின் பெயரால் மதக் கோட்பாடுகளை மாற்றி நாட்டில் பிரச்சினையை உண்டு பண்ணுகின்றனர். மேலும் இந்த நாட்டில் சிறுபான்மையினம், பெரும்பான்மையினம் என்ற எந்த வேறுபாடும் கிடையாது. நாட்டை நேசிக்கும் வர்க்கம், நாட்டை நேசிக்காத வர்க்கம் என்ற இரண்டு மாத்திரமே உள்ளன.

இவ்வாறு பிரதமர் தி.மு. ஜயரத்ன தெரிவித்தார். யாழ். நகரில் பொலிஸ் நிலையம் அருகில் புதிய உல்லாச ஹோட்டல் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைவிட வடக்கு, கிழக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையை நாம் பார்க்க வேண்டும். யாழ்ப்பாணத்துக்கு பெருமளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தர விரும்புகின்றனர்.

எனவே அவ்வாறு வருபவர்கள் இங்கு தங்கியிருப்பதற்கு ஹோட்டல் தேவை. இங்கே இந்த ஹோட்டலை அமைப்பதன் மூலம் ஏராள மானவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர். அத்துடன் இந்தப் பிரதேசத்தில் வெளிநாட்டு முதலீடுகள் மேலும் அதிகரிக்கும். மூன்றாம் தர உலகநாடுகள் சுற்றுலாத்துறையினாலேயே வளர்ச்சியடைகின்றன.

**ஒரு சிலர் தமது சுயலாபத்துக்காக மதங்களின் பெயரால் மதக் கோட்பாடுகளை மாற்றி நாட்டில் பிரச்சினையை உண்டு பண்ணுகின்றனர்.**

இந்த நாட்டில் சிறுபான்மையினம், பெரும்பான்மையினம் என்ற எந்த வேறுபாடும் இல்லை. நாட்டை நேசிக்கும் வர்க்கம், நாட்டை நேசிக்காதவர்க்கம் என்ற இரண்டு வகை இனமே உண்டு.

பிறக்கும் போது யாருமே இனப்பிரிவினைவாதத்துடன் பிறப்பதில்லை. பிறக்கின்ற போது மனிதர்கள் சமம். ஒவ்வொரு இன மக்களும் தமக்குரிய மதத்தை சரியான விதத்தில் பின்பற்றினால் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படாது. ஏன் மற்றவர்கள் மீது நாங்கள் பொறாமை கொள்ள வேண்டும். அவரவர் மதத்தில் ஏற்பட்ட கொள்கையைப் பின்பற்றி நடந்தால் பிரச்சினை ஏற்படாது.

ஒருசிலர் தமது சுயலாபத்துக்காக மதங்களின் பெயரால் கோட்பாடுகளை மாற்றி நாட்டில் பிரச்சினையை உண்டு பண்ணுகின்றனர். பிற மதங்களைக் கௌரவிக்கப்பழக வேண்டும். தற்போதைய அரசு எந்தவொரு மதத்தையும் சிதைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாது என்றார். (ஒ-5)

# கச்சதீவை மீட்காது 'ஜெ' ஓயமாட்டாராம்

கச்சதீவை இலங்கையிடமிருந்து இந்தியா மீளப்பெறும் வரை தான் ஓயப்போவதில்லை - என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று சூளுரைத்தார்.

கச்சதீவை மீளப்பெறுவதன் மூலம் மாத்திரமே தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலை நிறுத்தமுடியும் என தமிழக சட்டசபையில் உரையாற்றுகையில் அவர் தெரிவித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஆறுமுகத்தின் உரைக்கு பதிலளித்த ஜெயலலிதா, கச்சதீவை மீளப்பெறுவது தொடர்பான தனது வழக்கு உச்சநீதிமன்றத்தில் உள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்த வழக்கை வலுவூட்டும் வகையில் தமிழக நிதியமைச்சும் ஆவணங்களை இணைத்துள்ளது. தமிழக மீனவர்களின் ஜீவனோபாயத்தை பாதுகாப்பதற்காக நான் செயற்படுகின்றேன். கச்சதீவை மீட்கும்வரை ஓயமாட்டேன் - என்றும் அவர் சூளுரைத்தார்.

# பிள்ளையானின் சுவிஸ் பயணம் பற்றி விசாரணை



கொழும்பு, பெப்.4

கிழக்கு மாகாண முதலமைச்சர் எஸ்.சந்திரகாந்தன் (பிள்ளையான்) சுவிற்சர்லாந்துக்கு மேற்கொண்டுள்ள இரகசியப் பயணம் தொடர்பாக புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்தி வருவதாக 'திவயின' சிங்கள நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது. ஐரோப்பிய பயணத்தின் போது அவர் யார் யாரைச் சந்திகிறார் என்ற தகவல்களை புலனாய்வுப் பிரிவு திரட்டி வருகிறது.

# ஆதரவு தேடி பீரிஸ் கமரூன் பயணம்

கொழும்பு, பெப். 4

இலங்கை வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆபிரிக்கா நாடான கமரூனுக்கு பயணம் செய்துள்ளார். நடைபெறவுள்ள ஜெனிவா

மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு ஆதரவு தேடும் நோக்கிலேயே அவர் அங்கு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இவ்வாண்டு அங்கம் வகிக் கின்ற ஆபிரிக்க நாடுகளில் ஒன்றாக கமரூன் உள்ள நிலையில், அமைச்சர் பீரிஸின் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கமரூன் அரச தலைவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜெனிவாவாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இலங்கைக்கு ஆதரவைத் திரட்டும் நோக்கில், அரச பிரதிநிதிகள் தொடர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆபிரிக்க நாடுகளில் புதிய நண்பர்களைத் தேடும் இலங்கையின் நகர்வுகளில் செனகல்,மாலி ஆகிய நாடுகளுக்கு கடந்த மாதம் பயணம் செய்திருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், தற்போது இரண்டு நாள் பயணமாகக் கமரூனுக்குச் சென்றுள்ளார். (த)

# நெடுந்தீவு நபருக்கு தொடர்ந்தும் விளக்க மறியல்

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் எனக் கூறி யாழ்.பல்கலைக் கழக மாணவனை விசாரணை செய்த நெடுந்தீவு இளைஞரைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளாார்.

யாழ்.கஸ்தூரியார் வீதியில் வைத்து கடந்த 12 ஆம் திகதி பிரஸ்தாப நபர் பல்கலைக்கழக மாணவனை விசாரணை செய்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். "போருக்குப் பின்னரான காலத்தில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அகிம்சை வழியே சிறந்தது" எனும் தலைப்பி லான ஒப்படையொன்றை வைத்திருந்த போதே குறித்த நபர் மாணவனை விசாரித் துள்ளார்.

மறுநாள் தொடக்கம் விளக்கமறியலில் வைக் கப்பட்ட இவர் தொடர்பான வழக்குநீதிமன்றில்பலதடவை எடுத்துக்கொள்ளப் பட்டது. நேற்றையதினம் இது தொடர்பான வழக்கில் சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்குமாறு அவர்கள் சார்பாக வாதாடிய சட்டத்தரணி கேட்டுக் கொண்ட போதும் சந்தேக நபரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-4)

# ஆணை பெற்றோர் ஒரு போத்தல் தண்ணீர் கூட தமிழ் மக்களுக்கு இதுவரை வழங்கவில்லை

## ஆனால் உலக நாடுகளிடம் போய் 'வேட்டு' வைக்கின்றனர்: பஸில்

கொழும்பு,பெப்.4

இந்தப் பிரதேச மக்களின் ஆணையைப் பெற்ற குறிப்பிட்ட தரப்பு இதுவரையில் இந்தப் பகுதி மக்களுக்கு ஒரு குடி தண்ணீர்ப் போத்தல்களைக் கூட வழங்கவில்லை. அவ்வாறு வழங்குபவர்களையும் நிறுத்தும் பொருட்டு உலக நாடுகளிடம் சென்று தவறான விம்பத்தை ஏற்படுத்த அந்தத் தரப்பினர் முயல்கின்றனர்.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார். யாழ். நகரில் புதிய ஹோட்டல் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மிகச் சிறப்பான எமது போர் வீரர்களால்தான் நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமாதானம் நிலைநாட்டப்பட்டால்தான் நாட்டை முன்னேற்ற முடியும். வடக்கின் வசந்தம் திட்டத்தினால் வடமாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசினால் வடக்கில் அதிகளவான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வடக்கின் வசந்தம் திட்டத்தினால் வடமாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசினால் வடக்கில் அதிகளவான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

வடபகுதி மக்களிடம் ஆணையைப் பெற்ற குறிப்பிட்ட தரப்பொன்று இதுவரையில் மக்களுக்கு ஒரு தண்ணீர்ப் போத்தலைக் கூட வழங்கவில்லை. அவ்வாறு வழங்குபவர்களையும் நிறுத்தும் பொருட்டு, உலக நாடுகளிடம் சென்று தவறான விம்பத்தை ஏற்படுத்த முயல்கின்றது அந்தத் தரப்பு. இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதால் தான் வடமாகாண மக்கள் 30 வருடங்கள் பின்தள்ளப்பட்டனர்.

மீண்டும் அவ்வாறானதொரு நிலையைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர். இவ்வாறானவர்கள் ஒத்துழைத்தாலும் சரி ஒத்துழைக்காது விடினும் சரி ஜனாதிபதியினால் இந்தப் பகுதி மக்களுக்காக வடக்கின் வசந்தம் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

மேலும் யாழ். நகர மேயருக்கு இந்த யாழ்ப்பாணத்தில் இன்னும் எத்தனை மாடிக்கட்டடங்கள் அமையப் போகின்றன என்பது தெரியும். யாழ்ப்பாணம் மாற்றமடைந்து வருகிறது. இதனை நான் வரவேற்கின்றேன் - என்றார். (ஒ-5)

# போதையில் சாகசம்; எரிகாயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் சாவு

மதுபோதையில் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீமூட்டிச் சாகசம் செய்ய முயன்றவர் உடல் முழுவதும் தீ பற்றிக்கொண்டதால் சிகிச்சை பயனளிக்காது ஐந்தாவது நாளான நேற்று மரணமானார்.

இந்தச் சம்பவம் ஆறுகால் மடம் பகுதியில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரான நவரத்தினம் சுரேஸ்கரன் (வயது - 30) என்பவரே மரணமானார்.

சம்பவதினம் மது போதையில் வீடுசென்ற அவர் மனைவிக்கு முன் சாகசம் காட்ட முயன்றுள்ளார். மண்ணெண்ணெய்யை தனது உடலில் ஊற்றிவிட்டு பீடியை வாயில் வைத்து அதனை மூட்டியபோது தீப்பற்றியதாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டபோதும் அது பயனளிக்காது நேற்று அவர் மரணமானார். (ஒ-4)

# கைதிகளை நிர்வாணப்படுத்தி சோதிப்பதை ஏற்கமுடியாது

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

தமிழ் அரசியல் கைதிகளை நிர்வாண சோதனைக்குட்படுத்துவதை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இது தொடர்பில் அரசுடன்பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் நேற்றுத் தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கையால் தமிழக் கைதிகள் உளரீதியாகவும் பாதிக்கப்படக்கூடும் என்றும் அவர் கூறினார்.

மகஸின் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தால் நிர்க்கதியான நிலையில் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை பார்வையிடுவதற்கு நேற்று சுமந்திரன் எம்.பி. அங்கு சென்றார்.

தமிழ்க் கைதிகளைச் சந்தித்துப் பேசிய அவர், கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

நிர்வாண சோதனை உட்பட சிறைச்சாலைகளுக்குள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து சுமந்திரனிடம் கைதிகள் எடுத்துரைத்துள்ளனர். அத்துடன், மகஸின் சிறைச்சாலைக் கலவரத்தால் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுகள் தொடர்பில் ஆவணங்களையும் கையளித்துள்ளனர். (சி)

# நடைபாதைக் கடைகள் ரூ.5 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ் நகர்ப்பகுதியில் நடை பாதைக்கு இடையூறாகக் கடைகளை வைத்திருந்த ஐந்து பேரைப் பொலிஸார் யாழ். நீதிமன்றில் முன்நிலைப்படுத்தினர்.

அவர்களுக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்தார் நீதிவான் மா. கணேசராஜா. பிரஸ்தாப நபர்கள் ஐவர் மீதும் நடைபாதைக்கு இடையூராக வியாபாரம் செய்தனர் என்று கூறி பொலிஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர். மன்றில் ஒவ்வொருவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்தே நீதிவான் இந்த அபராதத் தொகையை விதித்தார். (ஒ-4)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை தமிழருக்கு ஒருபோதும் வழங்காதீர்

## சிங்கள அமைப்புகள் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 4

காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில் அவற்றை ஒருபோதும் வழங்கக்கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து வலியுறுத்துவதற்கு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உட்பட முக்கியமான சில சிங்கள அமைப்புகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இந்த சிங்கள அமைப்புகளுக்கும் இடையே எதிர்வரும் 9ஆம் திகதி முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது. இதன் போது காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் தமது ஆட்சேபனையை இந்த அமைப்புகள் ஜனாதிபதியிடம் வெளியிடவுள்ளன.

அலரி மாளிகையில் நடைபெறும் இந்தச் சந்திப்பின் போது தீர்வு விடயம், ஜெனிவா கூட்டத்தொடர், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.


இதுதொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவரிடம் வினவிய போது, 9ஆம் திகதி அலரிமாளிகையில் சந்திப்பு நடைபெறும் என்றும் இதன்போது பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசப்படும் என்றும் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கோரி ஜனாதிபதி செயலகத்திடம் இவ்வமைப்புகள் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தன. (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 மாடிகள் கொண்ட ஹோட்டல் யாழ்.நகரில்

## அடிக்கல்லை நேற்று பிரதமர் நட்டு வைத்தார்



யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்.நகரின் மத்தியில் 14 மாடி கொண்டதாக 750 மில்லியன் ரூபா செலவில் புதிய ஹோட்டல் கட்டப் படுவதற்கான அடிக்கல், பிரதமர் டி.எம்.ஜயரத்னவால் நேற்று நடப்பட்டது.

யாழ்.நகரின் மகாத்மா காந்தி வீதியில் (மணிக் கூட்டுக் கோபுரத்தின் முன் பாக) உள்ள இடத்திலேயே இந்த ஹோட்டல் கட்டப் படவுள்ளது.

ஜெட்லில் மற்றும் எம்.எம்.பி.எல். ஆகிய நிறு வனங்களின் கூட்டாகவே இந்தக் ஹோட்டல் அமைக் கப்படவுள்ளது.

இந்த ஹோட்டல் 14 மாடிகளைக் கொண்டதாக 750 மில்லியன் ரூபா செலவில் 18 மாதங்களில் கட்டி முடிக்கப்படவுள்ளது. அத்துடன் யாழ்ப்பாண மக்க ளுக்கே முன்னுரிமை அடிப் படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதமர் டி.எம். ஜயரத்னவும் பொரு ளாதார அபிவிருத்தி அமைச் சர் பஸில் ராஜபக்ஷவும் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச தரப்பு நாடாளுமன்ற உறுப் பினர் மிலிந்த மொறகொட ஆகியோரும் யாழ்.மாவட்ட அரச . அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராஜா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந் திரசிறி, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜய லக்ஷ்மி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-5)

## தேசியக் கொடியேற்றலுடன் இன்று சுதந்திர தின நிகழ்வுகள்

வலி வடக்கு பெப்.4

இலங்கையின் 64 ஆவது சுதந்திரதினத்தை முன் னிட்டு இன்று சனிக் கிழமை காலை 8.50 மணிக்கு தேசியக்கொடி ஏற்றும் நிகழ்வுகளுடன் தேசிய தினக்கொண்டாட்ட நிகழ் வுகள் ஆரம்பமாகவுள்ளன.

சுமார் 28 வருட இடை வெளியின் பின்னர் யாழ்ப் பாணத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் பல்வேறு நிகழ்வு களுடன் நடத்தப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலத்தில் இத் தகைய நிகழ்வுகள் இடம் பெற்றாலும் கூட இந்த நிகழ்வுகளில் படையினரின் பிரசன்னம் காணப்பட்டது டன் பொது மக்கள் அமைப் புக்களால் இதற்கான ஏற் பாடுகள் செய்யப்படாத நிலைமை காணப்பட்டது.

இன்று நடைபெறும் சுதந் திர தின நிகழ்வுகளை முன் னிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதேச செயலகங் கள் மற்றும் உதவி அரச அதிபர் அலுவலகங்கள் மற் றும் அரச திணைக்களங் களில் நேற்று பெரிய அள வில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

> கடந்த காலத்தில் இத் தகைய நிகழ்வு கள் இடம் பெற்றாலும் கூட இந்த நிகழ்வுகளில் படையினரின் பிரசன்னம் காணப்பட்டது

பாடசாலைகளில் இன்று மாணவர்களின் நிகழ்வு களுடன் தேசியக் கொடிகள் ஏற்றல் நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரியான ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் முஸ்லிம் மக்களின் ஏற்பாட் டில் விளையாட்டுப் போட்டி களும் நடைபெற ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-86)

## மாணவர்களின் நலன்கருதி இலங்கையில் மும்மொழித் திட்டம்

### காரைநகர் நிகழ்வில் பிரதமர் உரை

காரைநகர், பெப்.4

இலங்கையில் மும் மொழி நிகழ்ச்சித் திட் டத்தை ஆரம்பித்துள்ளோம். மாணவச் செல்வங்கள் மூன்று மொழிகளையும் கற்று எங்களுக்குள் ஒற்று மையாக இருக்க வேண்டும்.

இந்த நாட்டை சிங்கள வருடைய நாடு என யாரும் கருதிவிடக் கூடாது. இந்த நாடு சிங்களவர், தமிழர் அதாவது இலங்கைத் திருநாட்டில் பிறந்த அனை வருக்கும் உரிய நாடு. எனவே நாம் அனைவரும் இந்த நாட்டில் ஒற்றுமை யாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ஜயரத்ன.

காரைநகருக்கு வருகை தந்த பிரதமர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆல யத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்துகொண்ட பின் மணற்காட்டில் அமைந் துள்ள மகேஸ்வரன் தர்ம சுரபி மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றி னார்.

நாடாளுமன்ற உறுப்பி னர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் தொடர்ந்து உரை யாற்றும் போது கூறியதா வது:

இராம்யண காலத்தில் இருந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கலாசார தொடர்புகள் காணப்பட்டன. இன்றும் அந்தத் தொடர்புகள் சிறப் பாகப் பேணப்படுகின் றது.

நாங்கள் வேறுபாடு எதுவும் காட்டாது இலங் கைத் திருநாட்டின் மக்களாக ஒற்றுமையாக வாழ்வோம்.

> இராமயண காலத்தில் இருந்து இலங் கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கலாசார தொடர்பு கள் காணப்பட் டன. இன்றும் அந்தத் தொடர்புகள் சிறப் பாகப் பேணப்படுகின் றன. நாங்கள் வேறுபாடு எதுவும் காட்டாது இலங் கைத் திருநாட்டின் மக்களாக ஒற்றுமையாக வாழ்வோம்.

நாட்டின் அபிவிருத்தி யில் அக்கறையுடன் செயற் படுபவர் எமது ஜனாதிபதி. அவர் இரண்டு நாள்கள் இங்கு தங்கியிருந்து இந்தப் பிரதேசத்தின் அபிவிருத் திகளை முன்னெடுத்து செல்லவுள்ளார்.- என்றார்.

முன்னதாக காரைநகர் சிவகௌரி விளையாட்டு மைதானத்தில் உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய பிரதமர் ஈழத்துச் சிதம்பரம் சென்று விசேட பூசையில் கலந்து கொண்டார்.

ஈழத்துச் சிதம்பர தேவஸ் தானத்தில் கோகிலம், பிருந் தாவனம் திட்டத்துக்கான நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்து வைத்தார். (ம- 250)




*காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை சென்று பிரதமர் ஜயரத்ன ஈழத்துச் சிதம்பரத்தில் பிருந்தாவனம் திட்டத்துக்கான நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்து வைக்கிறார்.* (ம-250)

## சளிப் பரிசோதகர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு

யாழ்.மாவட்டத்தில் சளிப் பரிசோதகர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை விரைவில் நிவர்த்தி செய் யப்படவுள்ளதாக மாவட்டக் காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.யமுனானந்தா தெரி வித்தார். மாவட்டக் காசநோய் தடுப்பு வைத்தியசாலையில் தற்போது ஒரே ஒரு சளிப் பரிசோதகரே கடமையாற்றி வருகின்றார்.

தனி ஒருவரால் நோயா ளர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியவில்லை.

இந்த நிலையில் மேலும் இருவரை நியமிக்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வரு கின்றது என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

# மதுபான நிலையம் அமைக்க சிந்தித்து அனுமதியுங்கள்

## வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் உருக்கமாகக் கோரிக்கை

வடமராட்சி, பெப்.4

மதுபான விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்கும் திணைக்களங்கள் மற்றும் பொலிஸார் மக்கள் நலன் பேணும் நடவடிக்கை களிலும் இளைஞர்களின் ஒழுக்கம் கலாசாரத்தைப் பேணும் வகையில் இதய சுத்தியுடன் செயற்பட வேண் டும் என்று வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் அனுமதி பெறாது இயங்கிவரும் மதுபான மொத்த, சில்லறை விற் பனை நிலையங்களால் [illegible] வருகின்றனர்.

இது குறித்து தெரி விக்கும் போதே மேற்கண்ட வாறு சுட்டிக்காட்டினார்.

> மதுபான விற்பனை நிலையத்தை மக்கள் நட மாட்டம் செறிவாக உள்ள பகுதியிலிருந்து அகற்றி மூடிவிட வேண்டும் என நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

மதுபான அனுமதிக்குப் பொறுப்பான திணைக் களங்களுக்கும் பொலி ஸாருக்கும் இந்தக் கோரிக் கையை விடுத்தார்.


வல்வை நகரில் உள்ள மதுபான விற்பனை நிலை யத்தில் குடித்துவிட்டு மதுபோதையில் வெளியே வந்து வீதியால் போகும் மாணவிகள் மீது சேட்டை கள் விடுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றும் மதுபானகுதத்தை மூடிவிட வேண்டும் என்றும் பிரதேச பொதுமக்களும் மாணவர்களும் பல தட வைகள் வல்வெட்டித்துறை நகர சபைக்கு கோரிக்கை களை விடுத்திருந்தனர்.

மதுபான விற்பனை நிலையத்தை மக்கள் நட மாட்டம் செறிவாக உள்ள பகுதியிலிருந்து அகற்றி மூடிவிட வேண்டும் என நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக குறித்த மதுபான விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு எழுத்து மூலமாகவும் நேரிலும் அறி வித்தும் அவர் அதனை அகற்ற மறுத்து வருகின்றார். இத னால் பொதுமக்கள் மத்தி யில் அதிருப்தி நிலவுவதாக அவர் மேலும் கூறினார்.

மதுபான விற்பனை நிலைய உரிமையாளருக்கு அதனை மூடிவிடுவதற்காக இம்மாதம் 28 ஆம் திகதி வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நெடுந்தீவு துறைமுகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலம் இது. இப்பாலம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-7)

# பெரிய சத்தத்தில் கட்டடத்தில் வெடிப்பு

## அச்சத்தில் உறைந்த வேம்படி மகளிர் மாணவிகள்

**வகுப்பறையை நேரில் பார்வையிட்ட பொறியியலாளர் குழு, நிலநடுக்கத்தால் ஏற்பட்ட வெடிப்பாக இருக்க வாய்ப்பு இல்லை எனக் கூறியது.**

யாழ்ப்பாணம், பெப்.4

குண்டு வெடித்தது போன்ற பெரிய சத்தத்துடன் வகுப்பறைக் கட்டடத்தில் ஏற்பட்ட திடீர் வெடிப்பு காரணமாக யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள் மத்தியில் பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தின் மேல் தளத்திலுள்ள வகுப்பறையின் சுவரிலேயே வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

உயர்தர மாணவிகளின் வகுப்பறையிலேயே சம்பவம் இடம்பெற்றுள்ளது. கலைப்பிரிவு மாணவிகள் வகுப்பறையில் இருந்த போது குண்டு வீழ்ந்து வெடிக்கும் சத்தத்தை ஒத்த தான பெரிய சத்தத்துடன் வகுப்பறைக் கட்டடம் அதிர்ந்துள்ளது.

சடுதியாக மேலே உயர்த்திப் பின்னர் கீழே போட்டது போன்ற உணர்வு ஏற்பட்டதாக அந்த வகுப்பறையில் இருந்த மாணவி ஒருவர் தனது அனுபவத்தைக் கூறினார்.

வகுப்பறைக் கட்டடத்தின் நில மட்டத்திலிருந்து சுமார் ஐந்து அங்குல உயரத்திலிருந்து கூரை நோக்கியதாக மெல்லிய வெடிப்பு சுவரில் ஏற்பட்டதாலேயே இந்தச் சத்தம் கேட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பாடசாலைஅதிபரைத்தொடர்பு கொண்டு கேட்ட போது,

பெரிய சத்தத்துடன் வெடிப்பு ஏற்பட்டதை தொடர்ந்து வகுப்பறையிலிருந்து மாணவிகளை வெளியேற்றிவிட்டோம். கல்வித் திணைக்களம் ஊடாக பொறியியல் பிரிவுக்கு உடனடியாகத் தகவலை வழங்கினோம்.

வகுப்பறையை நேரில் பார்வையிட்ட பொறியியலாளர் குழு, நிலநடுக்கத்தால் ஏற்பட்ட வெடிப்பாக இருக்க வாய்ப்பு இல்லை எனத் தெரிவித்தது.

வகுப்பறைக் கட்டடத்தின் வெடிப்பு தொடர்பாக அடையாளப்படுத்தப்பட்டு பொறியியலாளர் குழு தமது அவதானத்துக்காக விட்டுள்ளது. அதுவரையும் மாணவர்களை வகுப்பறைக்கு அனுமதிப்பதில்லை என முடிவெடுத்துள்ளோம்.- என்றார். (ம-3-16)

## பிணையில் விடப்பட்டார் சிப்பாய்

**தற்கொலை செய்து கொண்டார் என முதலில் தெரிவிக்கப் பட்டது. எனினும் விசாரணையின் போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது தெரிய வந்தது**

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்.அரியாலையில் உள்ள இராணுவ முகாமில் சிப்பாய் ஒருவரைச் சுட்டுக் கொன்ற சந்கேத்தில் கைது செய்யப்பட்ட சக சிப்பாய் யாழ். மேல் நீதிமன்றால் ஒரு லட்சம் ரூபாவுக்குச் சமமான இரண்டு ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த ஜூன் மாதம் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது. கொல்லப்பட்ட சிப்பாய் தற்கொலை செய்து கொண்டார் என முதலில் தெரிவிக்கப் பட்டது. எனினும் விசாரணையின் போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது தெரிய வந்தது. இது தொடர்பாக வழக்கு கடந்த வாரமும் யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கென எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேக நபர் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம-4)

## கொழும்புத்துறையில் சந்தை காணி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.4

கொழும்புத்துறையில் மீன் சந்தை ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கு இட வசதி தேவைப்படுவதாக யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பகுதியில் மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களைச் சந்தைப்படுத்துவதற்கும், அவற்றைக் கூறி விற்பதற்கும் சந்தை வசதி அவசியமானது. அதனை அங்கு அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

புதிதாகச் சந்தையை அமைப்பதற்குக் காணி வசதி தேவைப்படுகிறது. இதற்கான காணியை யாராவது முன்வந்து அன்பளிப்புச் செய்தால் சந்தை அமைக்கப்படும்.- என்றார் ரவீந்திரன்.

கொழும்புத்துறை மீன் சந்தை துறைமுகச் சந்தியில் உள்ள கட்டடம் ஒன்றில் தற்போது தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இந்தக் கட்டடத்தில் போதிய வசதிகள் இல்லாமையால் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. (த-17)

## குருநகர் இயங்குதுறை கட்டுமானம் விரைவில்

யாழ்ப்பாணம், பெப்.4

குருநகர் இறங்குதுறைக்கான கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது.

தற்போது இறங்குதுறை மற்றும் கரையோரப் பாதுகாப்பு அணைகள் ஆகியவற்றை அமைப்பதற்கு முன்னோடியாக அதற்கான மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெற்று வருவதாகக் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டென்மார்க் அரசின் நிதி உதவியுடன் இந்த இறங்குதுறை நிர்மாணப் பணிகள் இடம்பெறவுள்ளன என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, பாஷையூர் இறங்குதுறை அமைப்பதற்கான பணிகள் தொடர்ந்தும் தாமதமடைந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த இறங்குதுறை மற்றும் கரையோர பாதுகாப்பு அணைகள் ஆகியவற்றை அமைப்பதற்கு கற்கள் குவிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்டது.

எனினும் பணிகள் எவையும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (த-17)

## நீர்வேலிக் கந்தனுக்கு மீண்டும் பூசை வழிபாடு

திருடர்களின் கைவரிசைக்கு இலக்கான நீர்வேலிக் கந்தசுவாமி ஆலயத்தில் மீளவும் வழிபாடுகள் ஆரம்பமாகியுள்ளன என்று ஆலய பிரதம குரு சுவாமிநாதக் குருக்கள் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் மூலவிக்கிரகத்தின் யந்திரத் தகடு, பித்தளைப் பொருள்கள், உண்டியல் பணம் என்பவற்றைத் திருடர்கள் திருடியுள்ளனர். இதன் போது மூல விக்கிரகம் புரட்டப்பட்டதால் ஆலயத்தின் பூசை வழிபாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை பிராயச்சித்த அபிஷேகம், சாந்தி வழிபாடு என்பன இடம் பெற்றன. இனி வழமை போல ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ங)

## குற்றச்செய்தி

யாழ்ப்பாணம், பெப்.4

சட்டவிரோத மது விற்பனைக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளின் உரிமையாளருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

கடந்த வாரம் வேலணையில் சட்ட விரோதமாக மது விற்பனை செய்தவரை பொலிஸார் பிடித்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அந்த விற்பனைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை இன்னொருவரிடமிருந்து வாங்கிச் சென்ற வேலணை நபர் இவ்வாறு அபராதம் செலுத்தினார்.

இதற்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை தவறான வகையில் பயன்படுத்துவதற்காக மற்றையவருக்குக் கொடுத்திருந்தார் என்ற குற்றத்திற்காகவே மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு நீதிவான் ஆர்.எஸ்.எம் மகேந்திரராஜா இந்த அபராதத் தொகையை விதித்தார்.

குற்றத்தை ஒப்புக் கொண்ட நபர் அபராதம் செலுத்தினார். (ம - 4)

## இருபாலை மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், பெப்.4

இருபாலைப் பிரதேச மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இந்த வாரத்தில் துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் குடிதண்ணீர் விநியோகத்துக்காகத் தற்போது இராச வீதி ஊடாக நிலத்தடிக் குழாய்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கெனக் கனரக வாகனத்தின் உதவியுடன் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் குழாய்கள் பொருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இருபாலையில் இருந்து கோண்டாவில் வீதி இராச வீதி ஊடாக இந்த நிலத்தடிக் குழாய்கள் பொருத்தப்படுகின்றன.

ஊரெழுபொக்கணைவரை இந்தக் குழாய்கள் அமைக்கப்பட்டு அங்கிருந்து குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (த-17)

## யாழ்.நகர வீதிகளில் நேற்று மக்களை விரட்டிய பொலிஸார்

வீதியோரங்களில் மக்களைக் கூடி நிற்க வேண்டாம் என்றும் வாகனங்களை நிறுத்த வேண்டாம் என்று பொலிஸார் நேற்று விரட்டியடித்தனர்.

யாழ். நகரில் கே. கே.எஸ். வீதியில் சத்திரச் சந்தியில் இருந்து பண்ணை வீதிப் பக்கமாகவும் முற்றவெளிப் பக்கமாகவும் வாகனங்களை நிறுத்தக் கூடாது என உத்தரவிட்ட பொலிஸார் மக்களைக் கூட்டமாக நிற்க வேண்டாம் எனக் கூறி விரட்டினர்.

பிரதமர் டி.எம்.ஜயரட்ண யாழ்.நகருக்கு வருகை தருவதற்காக பொலிஸாரின் வீதிப் பாதுகாப்புப் பணிகள் நேற்று அதிகரிக்கப்பட்டிருந்தன.

பிரதமரின் வருகைக்காக மக்களை வீதியோரத்தில் நிற்கக் கூடாது என்றும் வாகனங்களை நிறுத்தக் கூடாது எனவும் பொலிஸார் விரட்டினர். பொலிஸாரின் இந்த நடவடிக்கையால் வாகனங்களை வீதியோரத்தில் நிறுத்த முடியாது வாகனச் சாரதிகள் சிரமப்பட்டனர். (த-17)

## இணுவிலில் பெருமஞ்சம்

வலி வடக்கு பெப்.4

வரலாற்றுப் புகழ் மிக்க இணுவில் கந்தசுவாமி கோவிலின் தைப்பூசத்தின உலகப் பெருமஞ்சத் திருவிழா செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் முருகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் 1008 சங்குகளால் விசேட அபிஷேகம் இடம் பெறும்.

மாலை 6.00 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 7 மணிக்கு முருகப் பெருமான் வள்ளி தெய்வயானை சகிதம் பெரு மஞ்சத்தில் வெளி வீதியுலா வரும் காட்சி இடம் பெறும்.

இதன்போது ஈழத்தில் பிரசித்திபெற்ற நாதஸ்வரக் கலைஞர்களின் கச்சேரி நிகழ்வும் இடம்பெறும்.

வழமைபோல் பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்பதால் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



பக்தர்களின் வசதி கருதி சாரணர் மற்றும் செஞ்ஜோன்ஸ் படையணிகளின் சேவைகளுக்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பாதுகாப்புக்காகப் பொலிஸாரின் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மௌனம் தொடர்ந்தால் போராட்டமே ஒரே வழி

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கேள்வி

அம்பாறை,பெப்.4

''கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆசிரியர் சமப்படுத்தல் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பேச்சு ஒன்றுக்கு நாள் ஒதுக்குமாறு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு மௌனம் சாதிக்கப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.''

இவ்வாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் எம்.அனஸ் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

தொழிற் சங்கங்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில் தொடர்ந்தும் மௌனம் சாதிக்கப்படுமானால், ஆசிரியர்களின் போராட்டங்கள் நடைபெறும்.

கல்வி அமைச்சு தகவல்களின்படி சேவையிலுள்ள மொத்த ஆசிரியர்களில் 15,488 பேர் மேலதிகமாக இருக்கையில் நாட்டின் எந்த ஒரு மாகாணத்திலும் இடம்பெறாத, கிழக்கில் மாத்திரம் இடம்பெற்றுவரும் மேலதிக ஆசிரியர்களைச் சமப்படுத்தல் இடமாற்றத்திட்டம் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், வலயக்கல்வி அதிகாரிகள், பணிப்பாளர்கள் எனத் தொடங்கி கல்வித் துறைசார் ஆர்வலர்கள் மத்தியிலும் பெரும் பரபரப்பையும் சர்ச்சையையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, குடும்பத் தலைவர்களாகியுள்ள ஆண் ஆசிரியர்கள் மாத்திரமன்றி, குடும்பப் பொறுப்புள்ள பெண் ஆசிரியைகளும் அதிகளவில் இந்த இடமாற்றத் திட்டத்தில் மிக நீண்ட தூரங்களுக்கான கட்டாய இடமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டமையானது அனைத் துத் தரப்பினரையும் கவலைக்குள்ளாக்கி இருக்கின்றது.

இந்த இடமாற்ற சர்ச்சைக்குத் தீர்வுகாண கிழக்கு மாகாணக் கல்விஅமைச்சில் கடந்த டிசெம்பர் 22ஆம் திகதி கிழக்கு கல்வி அமைச்சர் தலைமையில் கூட்டப்பட்ட, அமைச்சர் உதுமாலெப்பை உட்பட மாகாண சபை உறுப்பினர்கள், தமிழ்மொழி வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதான தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீறி, செயலாளர் தன்னிச்சையாகச் செயற்பட்டுவருகின்றார். இந்தக் கூட்டத்தில் உங்கள் கோரிக்கைகளை எழுத்து மூலம் சமர்ப்பியுங் கள். செயலாளர் ஒரு வாரத்துக்குள் பதிலளிப்பார் என்ற அமைச்சரின் பணிப்புரைக்கேற்ப இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் அமைச்சர்கள் முன்னிலையில் சமர்ப்பித்த கோரிக்கைகளுக்கு இது வரை பதிலளிக்கப்படவில்லை.

இதேவேளை, மூதூர், திருகோணமலை வடக்கு, கந்தளாய் கல்வி வலயங்களில் 184 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறையும் அம்பாறை, தெஹியத்கண்டிய கண்டி வலயங்களில் 356 ஆசிரியர்கள் மேலதிமாக உள்ள நிலையில், எந்த ஓர் ஆசிரியரும் கட்டாய இடமாற்றத்துக்கு உட்படுத்தப்படாமையினால் அமைச்சரின் கூட்டத்துக்கு சிங்களமொழி வலயக் கல்விப் பணிப்பாளர் அழைக்கப்படவுமில்லை.

இவ்வாறு தீர்வின்றித் தொடரும், தமிழ்மொழி ஆசிரியைகளை மனநோயாளிகளாக்கும் கட்டாய இடமாற்றத் திட்டத்துக்கு பேச்சு மூலம் தீர்வு காணவேண்டும்.

இந்த நிலைமை இவ்வாறு தொடருமாயின் ஆசிரியர்களைவீதியில் இறக்கி கவனயீர்ப்புப் போராட்டமாக ஆரம்பித்து, தீர்வுபெறும் வரை தொடரும் சுகயீனப் போராட்டமாக்குவது தவிர்க்க முடியாது போகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# கிழக்குக்குத் தனியாக மாகாணசபைக் கீதம்!

மட்டக்களப்பு,பெப்.4

கிழக்கு மாகாணத்துக்கு என தனியான மாகாண சபைக் கீதமொன்றை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் தனித்துவமான அம்சங்களைப்பிரதிபலிக்கும்வகையில், மாகாணசபைக் கீதத்தை உருவாக்குவதற்கு கிழக்கு மாகாண சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண சபையில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய ஆர்வமுடையவர்களிடமிருந்து அதற்கான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன என்று மாகாணப் பேரவைச் செயலகத்தின் தலைவர் தெரிவித்தார்.

கீதம் இயற்றுவதில் ஆர்வமுடைய கலைஞர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கிழக்கு மாகாணப் பேரவைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அவர் தெரிவித்தார். (ச)

# தொழிலில் ஈடுபட்ட இந்தியர்கள் கைது

மட்டக்களப்பு,பெப்.4

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு வந்து தொழிலில் ஈடுபட்ட ஆறு இந்தியர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த திங்கட்கிழமை, கொக்கட்டிச்சோலை பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பட்டிப்பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்த நபர்கள் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகைதந்து பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்றுவரும் விவசாய அறுவடையின் போது அறுவடை இயந்திரத்தின் சாரதிகளாகப் பணியாற்றி வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# காணிப் பிரச்சினையை ஆராய உயர்மட்டக்குழு

மட்டக்களப்பு,பெப்.4

கிழக்கு மாகாணத்திலுள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கும், அதைத் தீர்த்து வைப்பதற்குமாக உயர் மட்டக் குழுக்களை நியமிப்பதற்கு கிழக்கு மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபை அமர்வு கடந்த புதன்கிழமை மாகாணசபையின் தவிசாளர் எம்.எச்.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்றபோது மாகாணசபை உறுப்பினர்கள் பலரும் காணிப்பிரச்சினை தொடர்பில் சுட்டிக் காட்டினர். அத்துடன், அதைத் தீர்த்து வைப்பதற்கான அவசியம் குறித்தும் தெரிவித்தனர்.

இதையடுத்து, கிழக்கு மாகாண மட்டத்தில் மாகாணக் காணி ஆணையாளர், முதலமைச்சர், மாகாண அமைச்சர்கள் மற்றும் மாகாணக் காணித் திணைக்கள அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றையும் நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்திலுள்ள 3 மாவட்டங்களிலும் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி அதிகாரிகள் உள்ளடங்கலாக மாவட்டங்களுக்குத் தனித்தனிக் குழுக்களை நியமிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் யு.எல்.எம்.என்.முபீன் தெரிவித்தார்.

கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாணசபை அமர்வின்போது கிழக்கு மாகாணசபை உறுப்பினர் முபீன் கிழக்கு மாகாணத்துக்கான காணி அதிகாரங்களை மாகாண சபைக்கு மத்திய அரசு வழங்க வேண்டுமெனவும், தற்போது கிழக்கில் ஏற்பட்டுள்ள காணிப்பிரச்சினை தொடர்பில் தெளிவான முடிவுகள் எடுக்கப்படல் வேண்டுமெனவும் தெரிவித்து பிரேரணையொன்றை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)




கிழக்கு மாகாணத்தில் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான நியமனங்கள் கடந்த புதன்கிழமை திருக்கோணமலை முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்களத்தில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம ஒருவருக்கு நியமனக் கடிதம் வழங்குகின்றார். (31)

# நோர்வூட்டில் மீண்டும் தீ

நோர்வூட்,பெப்.4

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நியுவெலி பகுதியிலுள்ள பற்றைக் காட்டில் மீண்டும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் கரையில் காணப்பட்ட இந்தப் பற்றைக்காட்டில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக சுமார் 2 ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து சேதமடைந்துள்ளது.

வரட்சியை தமக்கு சாதகமாக்கிக் கொண்ட சிலர் நிலத்தினை அபகரிக்கும் நோக்கில் இந்தத் தீ வைப்பை மேற்கொண்டிருக்கலாம் என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# ஆயுள் தண்டனைக்கு அஞ்சப் போவதில்லை

## அரியநேத்திரன் எம்.பி.கூறுகிறார்

மட்டக்களப்பு,பெப்.4

இனவாதக் கட்சியான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூறுகின்ற ஆயுள் தண்டனையைக் கண்டு நாம் அஞ்சப்போவதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலர் மரணதண்டனையும் பெற்றுள்ளார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அமிர்தகழி மெதடிஸ்த முன்பள்ளியின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனவாதக் கட்சியான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எமக்கு ஆயுள் தண்டனை என்று பிரசாரம் செய்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மரண தண்டனையும் பெற்றுள்ளார்கள். எனவே, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூறுகின்ற ஆயுள் தண்டனையைக் கண்டு நாங்கள் ஒரு போதும் அஞ்சப்போவதில்லை.

கிழக்கில் ஜோசப் பரராசசிங்கம், வடக்கில் ரவிராஜ் போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பேரினவாதம் இல்லாதொழிக்கலாம். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தமிழ் மக்களின் தேசிய உணர்வையும் யாராலும் ஒரு போதும் அழிக்க முடியாது. இவற்றை முதலில் இந்த இனவாதக் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும். இறுதிப் போரில் புலிகளை முற்றாகவே அழித்து விட்டோம் என்று பெருமிதம் கொள்கின்ற இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,புலிகளை மறப்பதற்கும் மனம் இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளை விட கடும்போக்காக நடந்துகொள்கிறார்கள் என்று அடிக்கடி கூறுகின்றார்.

இதேவேளை, தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வை வழங்காமல் இழுத்தடிக்கும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அரச தரப்பினரும் செயற்படுகின்றனர். மேலும், தமிழ் மக்கள் கல்வியில் முன்னேற்றமடைய வேண்டும். இதற்காக மாணவர்களை முன்பள்ளி தொடக்கம் பல்கலைக் கழகம் வரை பெற்றோர்கள் கண்காணித்து வழி நடத்த வேண்டும். ஒரு மாணவன் முன்பள்ளியில் கற்றுக் கொள்கின்ற நற்பண்புகளே அவனை ஒரு தலை சிறந்த நபராக மாற்றுகின்றது.

எமது கலாசாரம் திட்டமிட்ட வகையில் சீரழிக்கப்படுகின்றது. இதைக் காப்பாற்ற சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். குறிப்பாகப் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளிடத்தில் அதிக கவனம் செலுத்தி அவர்களை நன்றாக வழி நடத்த வேண்டும். இன்றைய பிள்ளைகள் நாளைய தலைவர்கள் என்பதை பெற்றோர்கள் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும் - என்றார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீராம ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்

## பிரதம குருக்கள் (பிராமண குருக்கள்) தேவை

மட்டக்களப்பு மயிலம்பாவெளி இராம்நகரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற காமாஷி அம்பாள் தேவஸ்தானத்திற்கு பிரதமகுருக்கள் (பிராமண குருக்கள்) தேவை. விண்ணப்பங்களை 15.02.2012 க்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


தலைவர்/ செயலாளர்,
ஸ்ரீ காமாஷி அம்பாள்தேவஸ்தானம்,
இராம்நகர், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு.
மின்னஞ்சல்: ramnagarba@yahoo.com (13854 )(6-7-8)

## வலி. வடக்கில் கல்வி நிலையம்

மீளக்குடியமர்ந்த க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் நலன் கருதி, வித்தகபுரம், தெல்லிப் பழை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கல்வி நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளனர். (16)

# மூன்றாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

பிறப்பு
20 - 06 - 1945



இறப்பு
06 - 02 - 2009

## அமரர் சண்முகராசா இலங்கைநாதன்

(ஸ்தாபகர்: அன்னராஜா ஸ்ரோர்ஸ்)

திதி: துவாதசி

ஆண்டுகள் மூன்று சென்றுதான் விட்டது
ஆனாலும் நீங்கள் எப்போதும் எம்முடன்தான்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த உத்தமரே
வானுறைந்த தெய்வமாய் என்றும் வழிகாட்டுங்கள்

25/3, ஒடை லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(13845) (6,7,10)

நகராட்சிமன்றம், சாவகச்சேரி

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 21.02.2012 ஆம் திகதி மு.ப. 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே தினம் மு.ப. 11 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையின் பொருட்டு, நிர்மாண பயிற்சி நிலையத்தில், 30.04.2012 வரை வலுவுள்ள (ICTAD) தரம் C 10 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மட்டுமே கேள்வி கோருவதற்கு தகைமையுடையவராவர்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT.NBT நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் அமைய வுள்ள திண்மக்கழிவு பரிகரிப்பு நிலையத்திற்கான இணைப்பு ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 10,000.00 | 1000.00 |

கேள்விப்பத்திரங்கள் சாவகச்சேரி நகராட்சிமன்றத்தில் 17.02.2012ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறிப்பட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி தலைவர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என முகவரியிடப்பட்டு நேரடியாகப் பெட்டியில் இடப்படல் வேண்டும். இணைப்பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாண்ம் என்ற முகவரிக்கு 21.02.2012ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சிமன்றம் சாவகச்சேரி
03.02.2012.

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

(C\2939) (6,7,2)

சாவகச்சேரி நகராட்சிமன்றம்

# பொது அறிவித்தல் 2012

### வியாபார / தொழில் உரிமம் - 2012

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குள் தொழில்/வியாபாரம் செய்வோர் 2012 ஆம் ஆண்டிற்கான உரிமம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தினை நகராட்சி மன்ற அலுவலகத்தில் பெற்று பூர்த்திசெய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தையும் செலுத்தி உரிமத்தினை 15.02.2012 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

### துவிச்சக்கரவண்டி, வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் - 2012

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்டோர் தமது துவிச்சக்கரவண்டிகளுக்கும், வளர்ப்பு நாய்களுக்கும் 2012 ஆம் ஆண்டிற்குரிய உரிமத்தை 31.03.2012ஆம் திகதிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் உரிய கட்டணங்களைச் செலுத்தி பெற்று மன்றத்துடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### சூழல் பாதுகாப்பு உரிமம் - 2012

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 ஆம் இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை / தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் சாவகச்சேரி நகராட்சி மன்றத்துடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2012 ஆம் ஆண்டு மேற் குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

### விளம்பரங்களை அமைத்தல்/ காட்சிப்படுத்தல்

எமது நகராட்சிமன்றத்தின் எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இருமருங்கிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணங்களை நகராட்சிமன்றத்தில் செலுத்தி அதற்கான அனுமதியினை 15.02.2012 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் முகப்புக்களில் அந்நிறுவனத்திற்குரிய ஒரு விளம்பரம் மட்டும் கட்டணமின்றி நகராட்சிமன்ற அனுமதியுடன் பொருத்தப்படமுடியும். மேலதிகமாக காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்கள் ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய கட்டணத்தினைச் செலுத்தி நகராட்சி மன்றத்தின் அனுமதியை 15.02.2012 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/ வர்த்தக நிலைய உரிமையாளர்கள் / நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் 16.02.2012 ஆம் திகதிக்குப் பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சிவகைகள், உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடைசெய்தல்.

சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் பொதுச்சந்தை, இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 500 மீற்றர் வரையான சுற்றாடலில் மரக்கறிகள், கடலுணவுகள், இறைச்சி வகைகள், உயிர்க்கோழிகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது மன்றத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

### படவரைஞராகப் பதிவு செய்தல்

2012ம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது மன்றத்தில் பதிவு செய்துள்ளவர்களும் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்துகொள்ளவும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச்சட்டம் பிரிவு - 268 இன் பிரகாரமான அறிவித்தல்

எந்த ஒரு கட்டுமான வேலைகள் அல்லது புனரமைப்பு வேலைகள் மேற்கொள்வதாயினும் வீடுகள், கிணறுகள், மலசலகூடங்கள், மதில்கள், கடைகள், திணைக்களகட்டடங்கள், பாடசாலைகள், கோவில்கள், ஆலயங்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள் போன்றவை நகராட்சிமன்றத்தில் கட்டட விண்ணப்பத்தைப் பெற்று பூரணப்படுத்தி காணி அளவிடைப்படம் (survey plan), கட்டட வரைபடம், காணி உறுதி என்பவற்றுடன் சமர்ப்பத்து நகராட்சிமன்ற திட்டமிடல் குழுவின் அனுமதியினைப் பெற்ற பின்னரே அவ் வேலைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

கட்டடங்கள் அமைப்பதற்கு முன்பாக நகராட்சிமன்ற முன் அனுமதி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். தவறின் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன் அங்கீகாரம் மேவிய கட்டணம் தண்டப்பணமாக செலுத்த நேரிடும்.

நகராட்சிமன்றத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட உரிய காலத்திற்குள் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யத்தவறும் பட்சத்தில் கட்டட அனுமதி காலநீடிப்பினை நகராட்சி மன்றத்தில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

கட்டட வேலைகள் பூர்த்தியானதும் நகராட்சிமன்றத்தில் அமைவுச்சான்றிதழ் பெற்ற பின்னரே கட்டடம் பயன்படுத்தப்படல் வேண்டும். இவ்வாறு சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத புதிய கட்டடம் ஒன்றினைப் பயன்படுத்துவது குற்றமாகும்.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்படும் கட்டடநிர்மாணங்கள், குடியிருப்பு மனைகள், எல்லைச்சுவர்கள், கிணறுகள், மலகூடங்கள் தொடர்பான முறைப்பாடுகளை உரிய தருணத்தில் நகராட்சிமன்றத்திற்கு தெரியப்படுத்தி நகர அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் நகராட்சிமன்றத்தின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு பங்காளிகளாகவும் செயற்படுங்கள்.

### காணி உபபிரிவிடுதல்

ஆதனம் பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு அதில் ஒரு துண்டினைக் கொள்வனவு செய்வதாயின் பிரிவிடல் (அனுமதி வழங்கப்பட்ட) நிலஅளவைப்படத்திற்கு அமைவாக எழுதப்பட்ட உறுதி பெயர் மாற்ற நடவடிக்கைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்ட விதிமுறைகளுக்கமைவாக காணி பிரிவிடல் செய்யப்படுதல் வேண்டும். இவ்விடயம் தொடர்பான மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

நகராட்சிமன்றம்
சாவகச்சேரி
03.02.2012.

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலைத் தாக்குவதற்கு ஈரானிடம் அணுகுண்டுகள்

ஜெருசலேம்,பெப்.4
தமது நாட்டின் மீது தாக்குதல் நடத்த நான்கு அணுகுண்டுகளை ஈரான் தயாரித்துள்ளதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது.

ஈரான் அணு சோதனை நடத்துவதாகவும், அணு ஆயுதங்களை தயாரிப்பதாகவும் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகள் குற்றம் சாட்டி வருவதுடன் ஈரான் மீது பொருளாதாரத் தடையையும் விதித்துள்ளது. கடந்த 29ஆம் திகதி ஐ.நா. சார்பில் சர்வதேச அணுசக்தித் தொடர்பாகக் குழு, ஈரான் சென்று ஆய்வையும் மேற்கொண்டுள்ளது.




இந்த நிலையில் ஈரானின் பரம எதிரியான இஸ்ரேல் , ஈரான் நான்கு அணு குண்டுகளைத் தயாரித்துள்ளதாகக் கூறியுள்ளது. இது தொடர்பாக, இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில் சர்வதேச பாதுகாப்பு உச்சி மாநாடு நடந்தது.

இதில் அந்த நாட்டு ராணுவ உளவுத் துறைத் தலைவர் ஜெனரல் அவிவ் கோச்சாவி கூறியதாவது;

இஸ்ரேலை ஈரான் தாக்கும் நோக்கில், 2 லட்சம் ரொக்கெட்டுகள், ஏவுகணைகள் உள்பட சுமார் 100 கிலோ எடை கொண்ட யுரேனியம் செறிவூட்டப்பட்ட 4 அணு குண்டுகளைத் தயாரித்துள்ளது. இதன்மூலம் எந்த நேரமும், இஸ்ரேலின் முக்கிய நகரங்களைத் தாக்க சிரியா, லெபனான் நாடுகள் வாயிலாகத் திட்டமிட்டுள்ளது என்று அவர் கூறினார். (ந)

## பாக். பிரதமருக்கு 'ஆந்திராக்ஸ்' பொதி



இஸ்லாமாபாத்,பெப்.4
பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள பிரதமர் கிலானியின் அலுவலகத்துக்கு நோயைப் பரப்பும் ஆந்த்ராக்ஸ் என்ற கொடிய கிருமி பவுடர் அடங்கிய பொதி ஒன்று அனுப்பி வைக்கப்பட்ட விவகாரம் தெரிய வந்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் பிரதமர் கிலானியின் அலுவலகத்துக்கு ஒரு மர்ம பொதி வந்தது. அது சிந்து மாகாணத்தில் இருந்து அனுப்பப்பட்டிருந்தது. அதை பொலிஸார் சோதனை செய்ததில் கால்நடைகளுக்கு நோயை பரப்பும் 'ஆந்த்ராக்ஸ்' என்ற கொடிய கிருமிப் பவுடர் பொதி எனத் தெரியவந்தது.

அதனால் யாருக்கும் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படவில்லை என்றாலும் அந்த பொதியை அனுப்பியது யார் எனப் பொலிஸார் விசாரணை நடத்தினர். அதில் பொதி அனுப்பியது ஜாம்ஷாரோ பெண்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர் எனத் தெரியவந்துள்ளது. ஆனால் அவரது பெயர் வெளியிடப்படவில்லை. அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகப் பாகிஸ்தான் அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். (ந)

## சீனாவின் அத்துமீறல் ஜப்பான் கடும் கண்டனம்

டோக்கியோ,பெப்.4
இதுவரை, தென் சீனக் கடலில், தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் தீவிரம் காட்டி வந்த சீனா, தற்போது கிழக்கு சீனக் கடலிலும் தனது தலையீட்டைத் ஆரம்பித்துள்ளது. இந்த நடவடிக்கைக்கு ஜப்பான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சீனாவுக்கும் ஜப்பானுக்கும் ஏற்கனவே சென்காகு தீவுகள் தொடர்பான எல்லைப் பிரச்சினைகள் இருந்து வருகின்றன. அந்தத் தீவின் மீது இரு நாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன.

கடந்த 2010இல், இந்தத் தீவுகளை ஒட்டிய கடல் எல்லை பற்றி, இரு நாடுகளுக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டது. இந்த நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லையில் இருந்து மேற்குப் பகுதியில் உள்ள கஷி என்ற இடத்தில் சீனா இயற்கை எரிவாயு எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

சர்வதேச சட்டப்படி அந்தப் பகுதியில் இரு நாடுகளும் இணைந்து, இயற்கை எரி வாயு எடுக்க வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஜப்பான் அமைச்சரவைத் தலைமைச் செயலர் ஒசாமு புஜிமுரா, நேற்று அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது;

'கஷி பகுதியில், வாயு எடுக்கும் முயற்சி நடப்பதாகத் தெரியவந்துள்ளது. சீனாவின் இந்தப் போக்கு கண்டிக்கத்தக்கது.

இது குறித்து, விரைவில் பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும்' எனத் தெரிவித்தார். (ந)

## சோமாலியாவுக்கான பிரிட்டன் தூதர் நியமனம்



*சோமாலியாவுக்கு 19 ஆண்டுகளுக்குப் பின், வந்த பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர் வில்லியம் ஹேக், அந்த நாட்டில் புதிய தூதரகம் அமைப்பது, அதற்கான வாய்ப்புகள், பாதுகாப்பு போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்து, அந்தநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அதைத் தொடர்ந்து, சோமாலியா நாட்டின் தலைநகர் மொகாதீஷுவில் புதிய தூதரை நியமிப்பது என்றும், அதற்கான புதிய தூதரகம் அமைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து, புதிய தூதராக, மார் பவுகண் நியமிக்கப்பட்டுள்ளதாக, பிரிட்டன் அறிவித்தது. மொகாதீஷுவில் புதிய தூதரகம் அமைக்கப்படும் வரை, தற்காலிகமாக கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில், இத்தூதரகம் செயற்படும். தற்போது, சோமாலியத் தலைநகரில், லிபியா, எத்தியோப்பியா, சூடான், துருக்கி, ஏமன் போன்ற, சில நாடுகளின் தூதரகங்கள் மட்டுமே செயற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ந)*

## செர்பியாவில் கடும் பனிப் பொழிவு



பெல்கிரேட்,பெப்.4
செர்பியாவில் வரலாறு காணாத அளவில் பனி பொழிந்து வருகிறது. இதனையடுத்து, அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வெப்பநிலை -30 டிகிரிக்கு கீழ் சென்றுள்ளது. இதனையடுத்து, செர்பியா மற்றும் போஸ்னியாவில் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் கடுமையாகப் பாதிக்கப் பட் டுள்ளனர். 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அந்தப் பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டு, பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## டைட்டானிக் கப்பலில் மூழ்கிய வயலின் கண்டுபிடிப்பு



100 வருடங்களுக்கு முன்னர் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் இருந்து அரிய வகை வயலின் ஒன்று கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வயலினை அந்தக் கப்பலில் இருந்த பாண்ட் மாஸ்டர் வாலஸ் ஹார்ட்லி பயன்படுத்தி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

வாலஸ் ஹார்ட்லி என்ற இசைக் கலைஞர், தனது வயலினை அணைத்த நிலையிலேயே கடலில் மூழ்கினார். அந்த நிலையிலேயே அவரது உடல் மீட்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. அந்த வயலின் தான் தற்போது கிடைத்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

பிரிட்டனைச் சேர்ந்த ஒருவரிடம் இந்த வயலின் இருந்துள்ளது. வோலஸுக்கு திருமண நிச்சயம் செய்யப்பட்டிருந்த பெண் மரியா ராபின்சன், டைட்டானிக் விபத்து நடந்த சில ஆண்டுகளில் இதைத் தன்னிடம் கொடுத்ததாக அவர் கூறியுள்ளார். (ந)

## ஐ.நா.பொதுச் செயலர் மீது காஸாவில் செருப்பு வீச்சு



காஸா, பெப்.4
இஸ்ரேல்-பலஸ்தீன எல்லையில், ஐ.நா. பொதுச் செயலர் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் செருப்பு மற்றும் கற்களை வீசி தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளனர். இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சினை கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகத் தீர்வு எட்டப்படமால் உள்ளநிலையில், ஐ.நா. பொதுச்செயலர் பான்கீமூன், நேற்றுமுன்தினம் இஸ்ரேல் பலஸ்தீனத்தின் எல்லைப் பகுதியான காஸா பகுதிக்கு வருகை தந்திருந்தார். காஸா பகுதியில், ஜப்பானின் நிதி உதவியுடன் எல்லைப்பகுதியில் கட்டப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இதில் கலந்து கொள்ளவே பான்கீ மூன் வந்தார்.

அப்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் பான் கீ மூன், கார் வரும் கன்வாய் வழியாக அவருக்கு எதிராக 50 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கோஷங்கள் எழுப்பினர், சிலர் அவர் சென்ற கார் மீது செருப்பு மற்றும் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர். இதில் பான் கீ மூனுக்கு எந்த வித காயமும் ஏற்படவில்லை.

இது தொடர்பாக 50 பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட இவர்கள், இஸ்ரேல் இராணுவத்தினரால் சிறைப்பிடிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எனவும், இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சினையில் ஐ.நா.வின் செயற்பாட்டைக் கண்டித்தும் இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்ததாகவும் கூறப்படுகிறது.


## சிரியாவிலுள்ள கனடா பணியாளர்கள் திருப்பி அழைப்பு

சிரியாவில் உள்ள கனேடிய தூதரகத்தில் பணியாற்றும் ஒரு சில பணியாளர்களைத் தவிர ஏனையவர்கள் அனைவரையும் தாய்நாட்டுக்குத் திரும்புமாறு கனேடிய அரசு அறிவித் துள்ளது.

சிரிய அரசு பல்வேறு போக்குவரத்துத் தடைகளை அறிமுகப்படுத்தியுள்ளதால் தலைநகர் டமாஸ்கஸ் தவிர ஏனைய பகுதிகளில் உள்ள கனேடியர்களுக்கு உதவி புரியும் தன்மை கடுமையமாகப் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவிலுள்ள தூதரகம் திறந்துள்ளதெனவும், விசா மற்றும் குடிவரவுப் பிரிவுகள் மூடப்பட்டுள்ளதாகவும், மட்டுப்படுத்தப்பட்ட அளவு சேவைகள் மட்டும் வழங்கப்படுவதாகவும் கனேடிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் [illegible] கூறியுள்ளார். (ந)

## கண், மூளையை சாப்பிட்ட அதிசய நபர்



அமெரிக்காவின் கனெடிகட் மாநிலத்தில் நபரொருவரைக் கோடரியினால் தாக்கி அவரது மூளை, கண் ஆகியவற்றை உட்கொண்ட நபருக்கு மனநல பரிசோதனை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி ஏஞ்சல் கொன்சாலிஸ் என்பவரைக் கொலை செய்து அவரது மூளையையும், கண்களையும் உண்டுள்ளார் டரி லிங்கோன் ஸ்மித் என்ற நபர் நகருக்கு அருகில் உள்ள சுடுகாடொன்றில் வைத்தே இவற்றை உட்கொண்டுள்ளதாகக் குற்றவாளி தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட குற்றவாளி ஸ்மித்தை மனநல பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமென இவர் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் வாதிட்டதாலேயே நீதிபதி இந்த உத்தரவை வழங்கியுள்ளார். அத்துடன் இவ்வழக்கு இந்த மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் இவருக்கு 60 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்படலாம். அதே வேளை இவரை விடுதலை செய்ய நேர்ந்தால் அது சமூகத்துக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமையும் என அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் படைகள் மீது நேட்டோ இனி தாக்காது

## அமெரிக்கா உறுதி

கடந்த வருடம் நடத்தப்பட்ட தாக்குதல் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. அந்தச் சம்பவத்துக்காக அமெரிக்க மக்கள் மிகவும் வருந்தினர். அதைப்போன்று எதிர்காலத்திலும் நிகழாமல் தடுப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

இஸ்லாமாபாத், பெப்.4

கடந்த ஆண்டு நேட்டோ தாக்குதலில் பாகிஸ்தான் எல்லைப் படையினர் 28 பேர் உயிரிழந்தது திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. அது போன்ற விபத்துகள் இனி நடக்காது என்று பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் கமரூன் முன்டர் தெரிவித்துள்ளார்.

தெற்கு சிந்து மாகாணத்தில் உள்ள மொஹஞ்சதாரோ நகரில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சலலெய்ன் மொஹமது பழங்குடியினப் பகுதியில் உள்ள இரண்டு எல்லைச் சாவடிகளில் நிகழ்ந்த வான் தாக்குதல் ஒரு பயங்கரமான சம்பவமாகும். அதுபோன்று மீண்டும் நடைபெறக் கூடாது. அந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. அந்தச் சம்பவத்துக்காக அமெரிக்க மக்கள் மிகவும் வருந்தினர். அதைப்போன்று எதிர்காலத்திலும் நிகழாமல் தடுப்பதை உறுதிசெய்ய வேண்டும். எனவே இது தொடர்பாக அமெரிக்கா, பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த விரும்புகிறது. பேச்சு விரைவில் தொடங்கும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி நிகழ்ந்த இந்தத் தாக்குதலை அடுத்து பாகிஸ்தான் கடுமையாக நடந்து கொண்டது. ஆப்கானுக்குச் செல்லும் அனைத்து வீதிகளையும் பாகிஸ்தான் மூடிவிட்டது. இதனால் அங்குள்ள தனது படைகளுக்கு இராணுவ உதவி பொருள்களை அமெரிக்காவால் அனுப்ப முடியாமல் போனது. மேலும் ஷாம்ஷி விமானத் தளத்திலிருந்து வெளியேறுமாறும் அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் உத்தரவிட்டது. இதனால் இருதரப்பு உறவிலும் பின்னடைவு ஏற்பட்டது.

இருநாட்டு இராணுவத்தினருக்கும் இடையே தொடர்புகளில் ஏற்பட்ட தோல்வியே இதற்குக் காரணம் என்று அமெரிக்க இராணுவம் அறிக்கை வெளியிட்டது. ஆனால் அதை நிராகரித்த பாகிஸ்தான், அந்தத் தாக்குதல் ஒரு திட்டமிட்ட செயல் என்று குற்றம் சாட்டியிருந்தது.(ந)

# மூழ்கிய கப்பலிலிருந்து இதுவரை 238 பேர் மீட்பு




பப்புவா நியுகினியாவில் 350 பேருடன் மூழ்கிய கப்பலில் இருந்து 238 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்று ஆஸ்திரேலிய மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்தக் கப்பலில் பயணித்த 100க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என்றும், அவர்களில் பெரும்பாலானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாகவும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மீட்புப் பணியில் ஹெலிகொப்டர்களும், உயிர்காக்கும் படகுகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று ஆஸ்திரேலிய கடலோரப் பாதுகாப்பு ஆணையகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். அவர்கள் தொடர்ந்தும் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.(ந)

# கொலம்பியாவில் குண்டு வெடிப்பு; 6 பேர் சாவு

போகோடா, பெப்.4

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் உள்ள டுமேகோ நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 3 பொலிஸார் உள்ளிட்ட 6 பேர் உயிரிழந்துள்ளனர். 35 பொலிஸார் உள்ளிட்ட 71 பேர் காயமடைந்தனர்.

நாட்டின் தென்மேற்கில் அமைந்துள்ள பசிபிக் துறைமுக நகரம் டுமேகோ நகரில் உள்ள குடியிருப்புப் பகுதியில் நண்பகல் உணவு இடைவேளையின்போது குண்டு வெடித்தது. மக்கள் நெருக்கம் உள்ள இடத்தில் மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடிக்கச் செய்யப்பட்டது. இது ஒரு மூர்க்கத்தனமான செயல் என்று அதிபர் ஜிவான் மானுவெல் சன்டாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இடதுசாரி ஆயுத இயக்கங்களே இதற்குக் காரணம் என்று பொலிஸ் அதிகாரி ரோடால்ஃபோ பாலோமினோ குற்றம் சாட்டியுள்ளார். (ந)

# தங்கைகளை முத்தமிட்ட சிறுவன் சிறையில்

## அபுதாபியில் சம்பவம்

அபுதாபியில் தனது தங்கைகள் இருவருக்கு முத்தமிட்ட 15 வயது சிறுவனொருவன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த சிறுமிகளின் தந்தையே இந்தச் சிறுவனை பொலிஸில் ஒப்படைத்துள்ளார். அச்சிறுவன் சிறுமிகள் உள்ள வீட்டினுள் அத்துமீறி நுழைந்துள்ளதாகவும், துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும் சிறுமிகளின் தந்தை குற்றஞ்சாட்டியுள்ளார்.

சம்பவத்தின் போது குறித்த சிறுவன் 13 வயதான தங்கைகளின் அறையிலே இருந்துள்ளான். எனினும் சிறுமிகளின் அனுமதியுடனேயே தான் அங்கு சென்றதாகச் சிறுவன் தெரிவித்துள்ளார்.

அச்சிறுவனுக்கு 3 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவம் குறித்து சிறுமிகள் கருத்துக் கூற மறுத்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(ந)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்புரண்டது ரயில்

## 3 பேர் சாவு 50 பேர் காயம்



கவுகாத்தி, பெப்.4

அசாம் மாநிலத்தில் நேற்றுக் காலை பயணிகள் ரயில் தடம் புரண்டதில் 3 பேர் உயிரிழந்தனர், 50 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

பொங்கைகான் - கவுகாத்தி எக்ஸ்பிரஸ் ரயில் சென்று கொண்டிருந்தபோது தடம் புரண்டு பயங்கர சப்தத்துடன் விழுந்தது. இதில் 3 பெட்டிகள் ஒன்றோடு ஒன்று முட்டி மோதிச் சரிந்தன. பயணிகள் பலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். இவர்களை மீட்க தீயணைப்பு மற்றும் பாதுகாப்புப் படையினர், ரயில் திணைக்கள அதிகாரிகள் விரைந்து சென்றுள்ளனர். ஆள் இல்லா ரயில் திணைக்கள கேற்றில் ஒரு ஜே.பி.சி,. இயந்திர வாகனம் மீது ரயில் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக முதல்கட்ட தகவல் தெரிவிக்கிறது.

அண்மைக்காலமாக இந்த மாநிலத்தில் நக்சல்களின் தாக்குதல் சம்பவம் எதுவும் இல்லாமல் இருந்து வந்த நிலையில் நேற்று ரயில் விபத்து இடம்பெற்றுள்ளது. நக்சல்கள் சதி இருக்குமோ என்ற கோணத்திலும் விசாரிக்கப்பட்டு வருகிறது. காயமுற்றவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. (வ)

# எரிபொருள் இல்லை: ஏர் இந்தியா தாமதம்

சென்னை, பெப்.4

எரிபொருள் இல்லாத காரணத்தால் சென்னையிலிருந்து பல்வேறு நகரங்களுக்குச் செல்ல வேண்டிய ஏர் இந்தியா விமானங்களை இயக்குவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்தியன் ஏர்லைன்ஸ் சார்பில் ஏர் இந்தியா நிறுவனத்துக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் எண்ணெய் நிறுவனத்துக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையில் கால தாமதம் ஏற்பட்டது.

இதனையடுத்து, விமானத்துக்குத் தேவையான எரிபொருள் விநியோகம் செய்வது நிறுத்தப்பட்ட காரணத்தினால் விமரனங்கள் புறப்படுவதில் கால தாமதம் ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# விஜயகாந்துக்கு விதித்த முடிவை பரிசீலனை செய்க

## தமிழக காங். தலைவர் கோரிக்கை



உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உணர்ச்சிவசப்பட்டு பேசினாலும், பின் அமைதி திரும்பியவுடன் பரஸ்பர நட்புறவுடன் இருப்பதும், அந்த உறுப்பினர்களைத் தொடர்ந்து பணியாற்ற அனுமதிப்பதும், இந்திய நாடாளுமன்ற நடைமுறை வழக்கமாக இருக்கிறது.

சென்னை, பெப்.4

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தை 10 நாள்கள் சபையை விட்டு நீக்கம் செய்ய எடுக்கப்பட்ட முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சட்டசபை என்பது வாத, பிரதி வாதங்களுக்கான இடம். நாடாளுமன்ற நடைமுறையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோபப்படுவதும், அதன் பிரதிபலிப்பால் ஆளுங் கட்சியினர் ஆவேசப்படுவதும் அல்லது ஆளுங்கட்சி உறுப்பினர்களின் வார்த்தைகளால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோபம் கொள்வதும் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் நிகழ்வு தான். மக்கள் பிரச்சினைகளை விவாதிக்கின்ற இடமாக சட்டசபை இருக்க வேண்டும்.

உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாலும், பின் அமைதி திரும்பியவுடன் பரஸ்பர நட்புறவுடன் இருப்பதும், அந்த உறுப்பினர்களைத் தொடர்ந்து பணியாற்ற அனுமதிப்பதும், இந்திய நாடாளுமன்ற நடைமுறை வழக்கமாக இருக்கிறது.

வெளியே இருந்து பார்க்கிற எமக்கு, யார் தவறு, யார் சரி என்ற வாதத்தை விட, எதிர்க்கட்சித் தலைவரை சபையை விட்டு நீக்கி விடுவது என்பது ஒரு தவறான முன்னுதாரணமாகி விடும். எனவே, விஜயகாந்தை 10 நாள்கள் சபையை விட்டு நீக்கம் என்ற முடிவை மறுபரிசீலனை செய்து, அவரை ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு வழி வகுக்க வேண்டும் - என்றார் அவர். (வ)

# சசிகலாவின் தம்பி பொலிஸாரால் கைது

திருவாரூர், பெப்.4

சசிகலாவின் தம்பி திவாகரன் நேற்று அதிகாலை திருச்சியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இதனையடுத்து நீதிபதி முன் முன்னிலைப்படுத்தப்பட்டார். இந்த நிலையில் அவரை எதிர் வரும் 16 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

ரிஷியூரைச் சேர்ந்த கஸ்தூரி என்பவர், திவாகரன் மீது வீடு இடிப்பு முறைப்பாடு அளித்தார். கடந்த மாதம் 21ஆம் திகதி இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இது தொடர்பாக ரிஷி யூர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து கடந்த சில நாள்களாகத் தேடி வந்தனர். இந்தநிலையில், திவாகரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர், நீடாமங்கலம் மாவட்ட குற்றவியல் நீதிபதி செல்லபாண்டி முன்பு திவாகரன் முன்னிலைப் படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை காவலில் வைக்க உத்தரவிட்டார். இதையடுத்து திருச்சி சிறையில் அவர் அடைக்கப்பட்டார்.



அறிஞர் அண்ணாவின் 43 ஆவது நினைவு தினமான நேற்று சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் முதல்வர் ஜெயலலிதா மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

# பாக். நீதித்துறை இந்தியா வரவில்லை

மும்பை தாக்குதல் தொடர்பாக குற்றவாளிகளின் வாக்குமூலத்தை பதிவு செய்வதாகத் தெரிவித்த பாகிஸ்தான் நீதித்துறைக் குழுவினர் இந்தியா வரவில்லை.

கடந்த 2008 ஆம் ஆண்டு மும்பையில் பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 160 இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக அஜ்மல் கசாப் கைது செய்யப்பட்டு அவனுடைய வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்தநிலையில் மும்பை தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணையை மேற் கொள்ள பாகிஸ்தான் நீதித்துறை ஆலோசனைக் குழுவினர் இந்தியா வருவதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சகம் அறிவித்திருந்தது.

மேலும் அந்தக் குழு உறுப்பினர்கள் நேற்று இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை மேற்கொண்டு வரும் இந்திய அதிகாரிகளான ர்மேஷ் ம்காலே, சவந்த்-வாகல் ஆகியோரின் அறிக்கையையும், நீதிபதி முன் அஜ்மல் கசாப் தனியாக அளித்த வாக்கு மூலம் ஆகியவற்றையும் பதிவு செய்ய உள்ளதாகவும் பாகிஸ்தான் உள் துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் உள்துறை அமைச்சகம் கூறியபடி நேற்று இந்தியா வரவில்லை என்றும் இதுகுறித்து பாகிஸ்தான் அதிகாரிகள் இதுவரை எந்தக் காரணத்தையும் தெரிவிக்கவில்லை என்றும் அரசு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கறுப்பு நிற உடையுடன் சட்டசபையில் தே.மு.தி.க



சென்னை,பெப்.4

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் பேரவை நடவடிக்கைகளில் இருந்து 10 தினங்கள் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அந்தக் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் கறுப்புச் சட்டை அணிந்து பேரவை நடவடிக்கைகளில் பங்கேற்றனர்.

சட்டப்பேரவையில் கையை நீட்டிப் பேசியதற்காக விஜயகாந்தை உரிமை மீறல் குழு நேற்றுமுன் தினம் 10 தினங்களுக்கு பேரவை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்குத் தடை விதித்திருந்தது தெரிந்ததே.

# சிதம்பரத்தை ராஜினாமா செய்ய வற்புறுத்தல்

டில்லி, பெப்.4

அலைக்கற்றை ஒதுக்கீட்டு உரிமங்களை இரத்துச் செய்து உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இடது சாரி, பகுஜன் சமாஜ் உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் வரவேற்றுள்ளன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி. ராஜா தெரிவித்ததாவது:

தவறான கொள்கையை, தவறான வழிகளைப் பின்பற்றி அமுல்படுத்தியதால் நாட்டுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதை உச்சநீதிமன்றத் தீர்ப்பு உறுதிப்படுத்துகிறது. அரசின் கொள்கையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கொள்ளை லாபம் அடைந்த தொலைத் தொடர்பு நிறுவனங்களின் 122 உரிமங்களையும் நீதிமன்றம் இரத்துச் செய்துள்ளது.





இதைத்தான் மத்திய கணக்குத் தணிக்கையாளரும் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அதை இப்போது உச்ச நீதிமன்றமும் உறுதிப்படுத்திவிட்டது. மத்திய நிதியமைச்சராக ப. சிதம்பரம் பணியாற்றிய போது உரிமங்கள் வழங்கப் பட்டதால், அவரது பங்களிப்பு என்ன என்பதையும் ஆராய வேண்டும்.

அதுபற்றி ஆராய்ந்து தீர்ப்பு அளிக்குமாறு சி.பி.ஐ. நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனால் இந்த விவகாரத்தில் ப.சிதம்பரத்துக்குத் தொடர்பு இல்லை என்ற முடிவுக்கு இப்போதே வந்து விடக்கூடாது. இது போன்ற சூழ்நிலையில் ப. சிதம்பரம் மத்திய உள்துறை அமைச்சர் பதவியில் நீடிப்பதும் கேள்விக்குறியே. ஒரு கட்சி ஆட்சியானாலும் சரி, கூட்டணி ஆட்சியானாலும் சரி, அரசில் நடைபெறும் அனைத்துத் தவறுகளுக்கும் தலைவர் என்ற முறையில் பிரதமர் தார்மிக ரீதியாகப் பொறுப்பேற்க வேண்டும் - என்றார்.

இதேவேளை உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி தெரிவித்ததாவது:

உச்சநீதிமன்ற தீர்ப்பை நான் வரவேற்கிறேன். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மிகப்பெரிய ஊழல் கூட்டணி என்பதை நீதிமன்ற தீர்ப்பு உறுதிப்படுத்திவிட்டது. எனது தலைமையிலான அரசை விமர்சித்து வருவதை காங்கிரஸ் கட்சி வழக்கமாகக் கொண்டுள்ளது. தங்களின் ஊழல் கறையை மறைக்கவே, அத்தகைய செயலை காங்கிரஸ் தலைவர்கள் செய்தனர் என்பதை உச்ச நீதிமன்றத் தீர்ப்பு தெளிவாக்கி விட்டது - என்றார்.

# மேல்முறையீட்டுக்கு தயாராகும் நிறுவனங்கள்

டில்லி,பெப்.4

2ஜி வழக்கில் நேற்று உச்சநீதிமன்றத்தால் உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்ட தொலைத் தொடர்பு நிறுவனங்கள் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்துள்ளன. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் வாடிக்கையாளருக்கு ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு இந்த முடிவை எடுப்பதாக அந்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இருப்பினும், வாடிக்கையாளர்கள் தங்கள் தொலைபேசி எண்ணை மாற்றாமல் விரும்பிய நிறுவனத்துக்கு மாற்றிக் கொள்ளும் எம்.என்.பி. வசதி உள்ளதாக டிராய் தெரிவித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

41/6, மாவிட்டபுரம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய யோகநாதன் கஜேந்திரன் என்பவரது தே.அ.அ. (872353860V) மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

பிள்ளையார் கூல் ஸ்போர், இல.5, பேருந்து நிலையம், யாழ்ப்பாணம். 0772231144

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



29.01.2012 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வெளிவாரிப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A.) பட்டம் பெற்ற

திருமதி தாரணி கபிலன்

அவர்களைக் கல்வியில் சிறந்து விளங்கி மேன்மேலும் பட்டங்கள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கமலா சின்னராசா குடும்பத்தினர்,
கௌசிகன் - ஜெயபாரதி குடும்பத்தினர்,
சீ.திரவியமலர் (அக்கா).
"திரவிய பவனம்"
மனோகரா, அல்வாய்.

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ"

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 24 ★ 06 ★ 1938



விண்ணுலகில் 16 ★ 01 ★ 2011

### அமரர் இராசையா கோபாலகிருஷ்ணன்

*வாழ்க்கை எனும் பாதையிலே*
*நீங்கள் காட்டிய பாசமெல்லாம்*
*எமைவிட்டுப் பிரிந்து ஓராண்டானதோ!*
*உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட*
*உங்கள் நினைவலைகள் என்றென்றும்*
*எம்முடன் நிலைத்திருக்கும்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாலி சந்தி,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

உங்கள் நினைவுகளுடன்:
மனைவி,
பிள்ளைகள்.

(13741) (6,7,10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண மதிய போசன அழைப்பும்

மலர்வு 1954 ★ 08 ★ 17



உதிர்வு 2012 ★ 01 ★ 05

### அமரர் சோமசுந்தரம் செல்வரத்தினம்

(செல்வம் மின்னிணைப்பு, குழாய் பொருத்துநர்)

05.01.2012 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் நினைவாக இன்று (04.02.2012) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப 10.30 மணிக்கு ஆரம்பமாகும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையைத் தொடர்ந்து மதிய போசனமும் இடம்பெறும்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1ஆம் கட்டை வீதி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(11586) (6,7,10)

# இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.4

கொற்றை பி.கிருஸ்ணானந்தனின் 'இன்னுமோர் உலகம்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை காலை 9.30 மணிக்கு கொற்றாவத்தை செட்டிதறை சித்தி விநாயகர் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெணியான் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வாழ்த்துரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும், வரவேற்புரையை க.வேலும்மயிலும், வெளியீட்டுரையை தி.ஞானசேகரனும், மதிப்பீட்டுரையை எழுத்தாளர்கள் செல்வி ச.தாட்சாயினி, இ.இராஜேஸ் கண்ணன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ம-14)

## விவசாயக் குடும்பங்களுக்கு விதைகள்

யாழ்ப்பாணம்,பெப்.4

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட பத்து விவசாயக் குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்டத்துக்கான விதைகள் நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. ஊர்காவற்றுறை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் இவற்றை வழங்கினார். இதேவேளை திவநெகும திட்டத்தின் கீழ் ஆயிரத்து 500 பயனாளிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு தென்னங்கன்றும் வழங்கப்பட்டன. (த-7)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 4ம் கட்டை, ஆனைக்கோட்டை
T.P. 077 3095801

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி வடக்கு, சரஸ்வதி வீதியில் 2 ¾ பரப்பு அளவிலான (வருமானத்துடன் கூடிய) காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு. 077 7637692, 077 4002286

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், குருவிகள், புதியவகைக் கூடுகள், நாய்க்குட்டிகள்,புதியஇனங்களில் பூக்கன்றுகள் மற்றும் பல இன கோழிக்குஞ்சுகள் அனைத்தும் ஒரே இடத்தில் விற்பனைக்கு உண்டு.
யாழ் அக்குவாரியம்
941, K.K.S றோட், யாழ்ப்பாணம்

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.
(13823) (45-6-7)

## மோட்டார் சைக்கிள், கார் விற்பனைக்குண்டு

CD 200 Road Master மோட்டார் சைக்கிள் தொடர் இல.wy xxxx,Toyota Coralla Car 12 சிறி xxxx ஆகியவை உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 937 0255
(13820) (45-6-7)

## காணி விற்பனைக்குண்டு

கொக்குவில், நந்தாவில் அம்மன் கோயிலிற்கு எதிர்பக்கமாக இரயில்றோட்டிலிருந்து எதிர்ப்பக்கமாக 200 யார் தூரமளவில் (13¾) பதின்மூன்றே முக்கால் பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் 2 துண்டுகளாகப் பிரித்துக் கொடுக்கலாம். விவரங்களுக்கு - 077 6089353
078 5272106

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம், வலிகாமம் கல்வி வலய அலுவலகத்துக்கு அருகில் கிணற்றுடன் கூடிய 11 பரப்புக் காணி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 7110513

## தவறிவிட்டது

NPW C8660 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன திருநெல்வேலி, கோண்டாவில் இராச வீதி ஊடாக நிலாவரைக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: 077 7066487

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1980ஆம் ஆண்டு, பரணி, 7ல் செவ்வாய் கிரகபாவம் 40. பட்டதாரி ஆசிரியருக்கு பெற்றோர் பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
(13730)(6-7-8)
தொடர்பு : 075 0434199

## தேவை

விற்பனைப் பிரதிநிதிகள்:
புடைவை வியாபாரத்தில் அனுபவம்மிக்க இருபாலார்க்கும் உடனடி வேலைவாய்ப்பு உண்டு. சம்பளமும், கமிஷனும் ஆக ரூபா 30,000 அளவில் பெறமுடியும். அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

டிறைவர்:
அனுபவம் மிக்க வயதான கார் டிறைவர் உடனடியாகத் தேவை. இவர் விற்பனைப் பிரதிநிதியாகவும் கடமையாற்ற முடியும்.
மேற்படி இருபதவிகளுக்கும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் நாளை (05.02.2012) ஞாயிறு காலை 9.30 மணிக்குக் கீழ் குறிப்பிடும் விலாசத்துக்கு நேரில் சமுகம் தரவும்.

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்,
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P:021 2219393

## வாழ்த்துகின்றோம்

### இராசநாயகம் ராஜ்கலிஸ்ரஸ்

*(வணிக ஆசிரியர் யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரி)*



கொழும்பு பண்டாரநாயக்கா மண்டபத்தில் HNDA பட்டம் பெற்று கடந்த 29-01-2012 அன்று யாழ்/பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் B.Com பட்டம் பெற்றுக்கொண்ட எமது நிறுவனத்தின் ஆசான் இ.ராஜ்கலிஸ்ரஸ் அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று கல்விப் பணியில் சிறப்புறவேண்டுமென வாழத்துகின்றோம்.

இல.11,
சென்.ஜேம்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

போசகர்
ஆசிரியர்கள், மாணவர்கள்
நியூபிறைற் கல்வி நிலையம்
95, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(13741) (6,7,10)

## முக்கிய அறிவித்தல்

### சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம் (வ-து)

### வாக்காளர் இடாப்பு முடிவுறுத்தல்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாக்காளர் இடாப்பு 31.12.2011 உடன் முடிவுறுத்தப்பட்டு கிளை நிலையங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இணைக்கப்பட்ட கிளை நிலையங்களான 02, 16, 17 என்பவற்றின் வாக்காளர் இடாப்பு பின்வரும் இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் 18.02.2012 ஆம் திகதிக்கு முன்பதாக எழுத்து மூலம் சங்கச் செயலாளருக்கு அறியத்தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

| கிளை இலக்கம்: | வாக்காளர் இடாப்பு தொங்கவிடப்பட்ட இடம் |
|---|---|
| 02 | முன்னர் இக்கிளை இயங்கிய கண்டி வீதியில் உள்ள கல்லடி மூட்டு (விஜயன் கடை) கட்டடத்தில் |
| 16 | இக் கிளை இணைக்கப்பட்ட டச்சு வீதியிலுள்ள தென்மராட்சிக் கிளை இலக்கம் 01இல் |
| 17 | இக் கிளை இயங்கிய வேம்பிராய் சந்தியிலுள்ள கட்டடத்தின் அருகில் உள்ள பாரதி சனசமூக நிலையத்தில் |

(இக் கிளை மூன்றினதும் வாக்காளர் இடாப்பை தலைமைக் காரியாலயத்திலும் பார்வையிடலாம்)

இ. இராசாராம்
தலைவர்

(சி/2931) (45-7-6)

## 32 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 ★ 08 ★ 1937



உதிர்வு 04 ★ 01 ★ 2012

### திருமதி சலாக்கினி அரியரட்ணம்

*"வாழ்வின் வழியை நான் அறியச் செய்தீர் உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு"*
*(தி.ப. 2:28)*

நம்ப முடியவில்லை நீங்கள் எம்முடன் இல்லை
என்பதை,நம்புகிறோம் இன்னமும்
எம் மத்தியில் உள்ளீர்கள் என்று
நீர் தேடிய உறவனைத்தும் உம் பிரிவால்
கதிகலங்கி மக்களுடன் மருமக்களும்
பெருந்துயருற்றுநீர் வளர்த்த பேரப்பிள்ளைகள்
உம் முகம்தேடித் தவித்து செய்வதறியாமல் திசை
தடுமாறி நிற்கமறைந்தும் மறையாமல் எம்
நெஞ்சினுள் நிலையாய் நிலைத்துள்ளீர்
மறக்க நினைக்கிறோம் முடியவில்லை
யாராலும் ஈடுசெய்யவும் முடியவில்லை
உம் இழப்பை வாழ்ந்தது போதும் என்று
புகுந்து விட்டீர் வான் வீடு
எம்முடன் வாழ்ந்தது போதாதென்று
கலங்குகின்றோம் இப்போது

40/1, அன்னாள் வீதி
பாண்டியன் தாழ்வு
யாழ்ப்பாணம்.

உம் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பில் வடக்கே முன்மாதிரி

**யாழ்.மாவட்ட மக்கள் மற்றும் அதிகாரிகள் இரவு, பகல் பாராமல் மேற்கொண்ட அயரா முயற்சியால் டெங்கு ஒழிப்பு அங்கு அதிக வெற்றியை அளித்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமவீர பாராட்டியுள்ளார்.**

கொழும்பு,பெப்.4

டெங்கு ஒழிப்பு விடயத்தில் யாழ் மாவட்டம் மற்றும் வவுனியா முன்மாதிரியாகத் திகழ்வதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமவீர பாராட்டுத் தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் நோக்கில்நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பிரதேச மக்கள் மற்றும் அதிகாரிகள் இரவு, பகல் பாராமல் மேற்கொண்ட அயரா முயற்சியால் டெங்கு ஒழிப்பு அங்கு அதிக வெற்றியை அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்புக்காக சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு இடர் முகாமைத்துவ அமைச்சும் ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் நாட்டில் டெங்கு நோய் பரவுவது அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். 2500 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபை பிரதேசங்களான கொலன்னாவை மற்றும் தெஹிவளைப் பிரதேசங்களிலேயே கூடுதலான நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த வருடம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு அரசு 300 மில்லியன்ரூபாவை ஒதுக்கி உள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளர் பாலித மஹீபால தெரிவித்தார். (ச)

## வரலாறு பாடத்தின் பெயர் மாற்றம்

### கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு,பெப்.4

இலங்கையின் கல்வித் திட்டத்தில் அடுத்த ஆண்டு முதல் வரலாறு பாடத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட உள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பத்தரமுல்ல வோட்டர் எஜ் ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் வரலாறு என்ற பாடத்துக்குப் பதிலாக தேசிய உரிமைகள் மற்றும் சுற்றாடல் என்னும் பாடம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

தேசிய உரிமைகள் மற்றும் சுற்றாடல் தொடர்பில் மாணவர்கள் மத்தியில் போதிய தெளிவின்மை காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

கிராமப் புற மாணவர்களுக்கு வளங்களைப் பகிர்ந்தளிக்க கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## கல்வியில் வீழ்ச்சி



**இலவசக்கல்வி அரசியல் அமைப்பில் உறுதி செய்யப்பட்டும் தற்போது மாணவர்களிடமிருந்து அந்த உரிமை பறிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்.**

கொழும்பு,பெப்.4

நாட்டின் கல்வித்துறை வீழ்ச்சியடைந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இலவசக் கல்வி முறைமையை இல்லாமல் செய்ய முயற்சி எடுக்கப்படுகின்றது. இஸட் புள்ளி பிரச்சினை அதிக குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்

பத்தரமுல்ல வோட்டர் எஜ் ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்..

இலவசக்கல்வி அரசியல் அமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள போதிலும், தற்போது மாணவர்களிடமிருந்து அந்த உரிமை பறிக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட போதிலும்தற்போது அந்த நிலைமை காணப்படுகின்றதா? என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (ச)

## அதிவேக வீதியில் முதல் மரணம்

கொழும்பு,பெப்.4

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஏற்பட்டுள்ள வாகன விபத்து ஒன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

25 வயதான ஒருவரே இவ்வாறு விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நிகழ்ந்த முதல் விபத்து மரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இந்த வீதி திறக்கப்பட்டது முதல் கடந்த இரண்டு மாத காலப் பகுதியில் பல விபத்துக்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## எரிவாயு விலை உயரலாம்

கொழும்பு,பெப்.4

உலக சந்தையில் திரவ பெற்றோலிய வாயுவின் விலை உயர்வை அடுத்து எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு இரு பிரதான எரிவாயுக் கம்பனிகள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய விரைவில் எரிவாயுவின் விலை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றது.

எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு ஏற்கனவே வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், இந்த விலை அதிகரிப்புக்கான இறுதித் தீர்மானம் இன்னமும் எடுக்கப்படவில்லை என்று வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

எரிவாயுவின் விலையை உடனடியாக அதிகரிக்கப்படும் சாத்தியத்தை நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் ரூமி மர்சூக் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



பிரதமர் டி.எம்.ஜயரத்னவால் விமர்சனங்களைத் தொகுத்து தயாரிக்கப்பட்ட கிருவா பத்துவே மகா மஹிந்த நூலின் முதல் பிரதியை பிரதமர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கையளித்தார்.

## மாணவன் மீது தாக்குதல்

கொழும்பு,பெப்.4

ஜயவர்தனபுர மாணவர் ஒருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 11.15 மணியளவில் பல்கலைக்கழகத்திலிருந்து தனது தங்குமிடத்துக்கு செல்லும் வழியில் இவர் கடத்தப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்தின் இரண்டாம் வருடத்தில் கல்வி பயிலும் இந்த மாணவன் மாணவர் சங்க பிரதிநிதி என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இரு மாணவ தரப்பினருக்கிடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளது. இதன் பின்னணியிலேயே இந்த மாணவன் கடத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு இலங்கான மாணவனான சஜித் சந்துருவன் தற்போது களுபோவில வைத்தியசாலையில் அனுமதிப்பட்டுள்ளார். (ச)

## நீதிமன்றத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு,பெப்.4

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கஞ்சா வைத்திருந்த நிலையில் இவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பின்னர் 10 மணிக்கு நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றனர்.

குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டிருந்த இந்த நபர் திடீரென உயிரிழந்துள்ளார். மாரடைப்பின் காரணமாகவே அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த உதுமாலெப்பை மௌயுதீன் (வயது-40) என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபரின் சடலம் தற்போது அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

## இந்திய ஊடகர்களை வெளியேற்ற உத்தரவு

### தடுத்தார் கோத்தபாய

**இந்த இரண்டு ஊடகவியலாளர்களை வெளியேற்றுவதனால் இலங்கை– இந்திய நாடுகளுக்கிடையே உறவுகளில் பிரச்சினைகள் உருவாகுவதற்கு வழியமைக்கும்.**

கொழும்பு,பெப்.4

இலங்கையின்நிலைமை தொடர்பாக ஆவணப்படம் ஒன்றைத்தயாரிக்க கொழும்பு வந்துள்ள இந்தியாவின் புதிய தலைமுறை தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் இருவரை உடனடியாக நாட்டில் இருந்து வெளியேறுமாறு இலங்கை அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண உத்தரவிட்ட விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருப்பது குறித்து குற்றப்புலனாய்வு பொலிஸார் இராணுவப் புலனாய்வுப் பிரிவுத் தலைமைக்கு அறிவித்துள்ளனர்.

இதையடுத்து, இவர்கள் இருவரையும் கொழும்பு தாஜ் சமுத்திரா விடுதியில் தடுத்து வைக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து, தனக்கு அறிவிக்காமல் தனது கட்டுப்பாட்டிலுள்ள அதிகாரிகள் செயற்பட்டமை குறித்து கோபமடைந்த பாதுகாப்புச் செயலர் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவரைக் கண்டித்துள்ளார் என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற தேவையற்ற நடவடிக்கைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் பிரச்சினைகளை ஏற்படுத்தி விடும் என்று அவர் தெரிவித்தார்.

இதனால் இந்த இரண்டு ஊடகவியலாளர்களும் கோத்தபாய ராஜபக்ஷவின் அனுமதியுடன் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று தமது ஆவணப்படத்துக்கான படப்பிடிப்பை மேற்கொண்டதாக அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

## படகு செலுத்திய இளைஞன் மாயம்

பதுளை, பெப். 4

கந்தேகட்டிய லொக்கல் லாவ வாவியில் படகு செலுத்திக்கொண்டிருந்த நிலையில் இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

பதுளை பகுதியைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை லொக்கல் லாவ வாவியில் படகு செலுத்த சென்றிருந்தனர் எனவும், இதன்போது ஏற்பட்ட அனர்த்தத்தில் இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வாவியில் காணாமல் போனார் எனக் கூறப்படும் இளைஞரை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொருள்களுக்கான தடை தற்காலிகமானதே

### வர்த்தகப் பணிப்பாளர் தெரிவிப்பு

தமிழகத்தில் இலங்கைப் பொருளுக்கானதடைதற்காலிகமானது என்று இலங்கை வர்த்தகப் பணிப்பாளர் பிஜிபெர்ணாண்டோதெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் நாட்டில் இலங்கையின் உற்பத்திப் பொருள்களைப் புறக்கணிக்கும் வகையில், விதிக்கப்பட்டுள்ள தடையால் ஏற்பட்டுள்ள பின்னடைவு தற்காலிகமானதுதான். இது நீண்டகாலத்துக்குத் தொடர வாய்ப்பில்லை.

பிஸ்கட் மற்றும் இனிப்பு வகைகளின் ஏற்றுமதிக்கு தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து புதுடில்லியிலும் சென்னையிலும் உள்ள இலங்கைத் தூதரகங்களுடன்தொடர்பு கொண்டோம்.

இதேவேளை, முன்னரை விட அதிகளவில் இலங்கையின் உற்பத்திப் பொருள்கள் தென்னிந்திய சந்தைகளில் இனிவரும் காலங்களில் இடம்பிடிக்கும் என்றும் இலங்கையின் உற்பத்திகளைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு ஒரு மிகச்சிறிய சந்தை தான் என்று இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இது ஒரு தற்காலிக பின்னடைவு. சர்வதேச ரீதியில் லிபியா ஈரான், ஈராக் போன்ற விவகாரங்களினால் இலங்கையின் வர்த்தகத்துக்கு பெரியளவில் பாதிப்புகள் ஏற்பட்டன.

இவற்றுடன் ஒப்பிடும் போது, இது ஒன்றும் பெரிய விவகாரம் அல்ல. இலங்கையின் ஏற்றுமதி 11 மில்லியன் டொலராகும். இந்த வருடத்தில் இது மேலும் விரித்தியடையும்.

இலங்கைஉற்பத்திகளைப்பொறுத்த வரையில் தமிழ்நாடு ஒரு மிகச்சிறிய சந்தை தான்- என்றார் அவர். (வ)

# கனடாவில் காணாமற் போன தமிழ்ப்பெண் மீட்கப்பட்டார்

கனடாவில் காணாமற் போன தமிழ்ப் பெண் மீட்கப்பட்டார் என்று கனேடியப் பொலிஸார் தெரிவித்தனர்.

கனடா ரொறன்ரோவில் தமிழ்ப் பெண் ஒருவரைக் காணவில்லை என கனேடியத் தமிழ்க் காங்கிரஸ் ஊடாக ரொறன்ரோ பொலிஸார் வேண்டுகோள் விடுத்த தமிழ்ப் பெண் பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் உள்ளதாக கனேடியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண் காணாமற் போன செய்தியை உலகளாவிய வாசகர்களின் கவனத்திற்கு இணையத் தள ஊடகங்கள் கொண்டு வந்ததையடுத்து, காணாமற்போன குறிப்பிட்ட பெண் மீட்கப்பட்டார் என்றும் அவர் பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் இருப்பதாகவும் அதற்காக தாங்கள் நன்றியைத் தெரிவிப்பதாகவும் ரொறன்ரோ நகரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண் கனடாவிலுள்ள ஒரு நகரத்திலா அல்லது வேறு எந்த நாட்டிலா கண்டுபிடிக்கப்பட்டார் போன்ற விவரங்கள் எதையும் பொலிஸார் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# சாயி நிறுவனத்தின் ஒன்றுகூடல்

வடமராட்சி, பெப்.4

பருத்தித்துறை ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் அன்பு வார ஒன்றுகூடல் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆரம்ப உரையை வடமராட்சி சாயி நிலையங்களின் இணைப்பாளர் ஸ்ரீ வே.சேனாதிராசாவும், வாழ்த்துரையை வட பிராந்திய சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுத் தலைவர் டாக்டர் ஸ்ரீ ஆர். கணேசமூர்த்தியும் சிறப்புரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும் நிகழ்த்துவர்.

சாயி சங்கல்ப்ப வீடியோ படக் காட்சியும் நிகழ்வில் இடம்பெறும். (வ-8)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.4

கோண்டாவில் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று காலை 6.28 மணி தொடக்கம் 7.50 மணிவரை இடம்பெறவுள்ளது. (வ)

***

திருநெல்வேலி பத்திரகாளி அம்பாள் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பஷ மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆம் திகதி காலை 9.15 மணி தொடக்கம் 10 மணிவரை இடம் பெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும். (வ)

***

தென்மராட்சி, பெப்.4

சாவகச்சேரி நுணாவில் மத்தி ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தில் அமையப்பெற்ற அன்னை பராசக்தி மனோன்மணி அம்பாள், பூமிதேவி ஸ்ரீதேவி சமேத மகா விஷ்ணு மூர்த்தி ஆகிய ஆலயங்களின் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி 8ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணி தொடக்கம் இரவு 7மணி வரை இடம் பெறும்

பாலகுருமணி சிவப்பிரம்ம ஸ்ரீ க.பரராஜசேகரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறும். (வ-207)

***

யாழ்ப்பாணம், பெப்.4

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலய நவகுண்ட பட்ச சஹித ஜீர்ணோத்தாரண சுவர்ண பந்தன அட்ட பந்தனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணி வரை நடைபெறும்.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். (வ)

***

வடமராட்சி, பெப்.4

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவ குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.14 மணிமுதல் 8.23 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் கடந்த 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 3 மணிவரை இடம்பெறும்.

நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோயில் முதல்வர் ஆகம கிரியா ஜோதி சிவஸ்ரீ சதா. மகாலிங்க சிவக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (வ-8-253)


## வட இலங்கை சுதேச மருத்துவசபை

அவசர கலந்துரையாடல்

சகல சித்த, ஆயுள்வேத வைத்தியர்கள் அனைவரும் (BSMS,BAMS,DAMS, DAM பட்டதாரிகள், பரம்பரை வைத்தியர்கள்-RIMP) தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

இடம்: வட இலங்கை சுதேச மருத்துவசபை மண்டபம் 188 B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: இன்று (04.02.2012) சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 2 மணி

Dr. சு. ஸ்ரீவிக்னேஸ்வரா
தலைவர் - வ.இ.சு.ம.ச

Dr. ஜெ.ஜெயலன்
செயலாளர் - வ.இ.சு.ம.ச

(13735) (6,7,10)

குறிப்பு: தற்போது சுதேச மருத்துவர்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் தீர்க்கும் முகமாக இதில் சில முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## Cambridge Management College

அண்ணாமலை பல்கலைக்கழகம்
தொலைநிலைக் கல்வி 2012/2013

கல்விக் கருத்தரங்கு


05-02-2012 பல்கலைக்கழக அனுமதியினை தவறவிட்ட மாணவர்களிற்கு அரிய சந்தர்ப்பம்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் மற்றும் பல்வேறு துறை சார்ந்த இளமாணி, முதுமாணிப் பட்டங்களை பெறக்கூடிய அரிய சந்தர்ப்பம், மேலதிக விவரங்களை அறிந்துகொள்ளவும், அனுமதிகளை நேரடியாக பெற்றுக் கொள்ளவும் கல்விக்கருத்தரங்கு நாளை 05.02.2012 மு.ப. 9.30 மணிக்கு

Cambridge Management College
23,கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(கச்சேரி பஸ் நிலையம் அருகில்)
தொ.பே: 0777740999 / 021 2221818

(13820) (6,7,10)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06 - 04 - 1950

மறைவு 06 - 02 - 2009

**தியாகராஜா தேவகுருநாதன்**

திதி: பூர்வபக்க துவாதசி

ஆண்டுகள் மூன்றென்ன
மூந்நூறே ஆனாலும்
மாறாது உம் நினைவு
எம் மனங்களில் இருந்து

தற்காலிக முகவரி:
அல்லாரை வீதி, மீசாலை.

மனைவி தே.அரியதேவி,
அல்லிப்பளை, பளை.

(C8752) (6,7,10)


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, பூநாறிமரலேனில் இரண்டு பரப்பு காணியில் கிணறு, சுற்று மதில் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள வீடொன்று விற்பனைக்கு உண்டு.

தொ.பே. 0212222537/0750413579/ 0262220259
(தரகர் தேவையில்லை) (13716)

## மணமகன் தேவை

யாழ்.இந்து உயர்குலம், பட்டதாரி, ஆசிரியை, வயது 31 கிரகபாவம் 90, அழகிய தமது ஏக புத்திரிக்கு நிரந்தர வருமானமுடைய அழகிய மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புகளுக்கு : 077 3949786

## வீடு கடை விற்பனைக்குண்டு

இல.33, கண்ணபுரம், நாவாந்துறை தெற்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடு, கடையுடன் கூடிய மொட்டைமாடி S.L.T இணைப்புடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு - வேலன் சின்னத்தம்பி J.P
021 2223230, 077 7111110, 077 6166275

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் குடியுரிமை உள்ள, மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
nice talk, 2012 @yahoo.com
011 6475322773

## மணமகள் தேவை

77 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 12 பாவம் உடைய கனடா பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

82 இல் பிறந்த 1 இல் செவ்வாய் 20¼ பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்குபடித்த அழகான மணமகள் தேவை.

83 இல் பிறந்த 2இல் செவ்வாய் 21 பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்குசைவ போசனமுள்ள படித்த அழகான மணமகள்தேவை.

81இல் பிறந்த 12இல் சூரியனும் செவ்வாயும் உள்ள 26 பாவமுடைய முகாமைத்துவ உதவியாளருக்கு சைவபோசனமுள்ள அரச பணிபுரியும் மணமகள் தேவை.

81இல்பிறந்த8இல்சூரியனும் செவ்வாயும் 97¼ பாவமுடைய (BSC.MSC) அரச நிறுவனத்தில் சேவையராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

78இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 37¼ பாவமுடைய அக்கு பங்சர் டாக்டருக்கு படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு: [illegible] மணச்சேவை
இல 320, கோயில் வீதி, நல்லூர். T.P - 077 6070862


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும்(09.02.2012) விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

தொடர்பு:

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944 | நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944 | சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085 |


## நன்றி மறவா நினைவுகளுடன் நினைந்துருகும் இதய வணக்கம்



**எந்திரி வைத்திலிங்கம் சந்திரபாலன்**

(முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர், மனோகரன் அன் வெற்றிவேல் கம்பனி)

எமது சபையுடன் நெருக்கமான உறவைப் பேணி எமது கட்டட அமைப்பு வேலைகளுக்கான பட அமைப்புக்களையும் ஆலோசனைகளையும் அன்பின் அடிப்படையில் பகிர்ந்துதவிய ஏந்தலை இந்நாளில் நினைவில் ஏந்தி அவரின் நித்திய அமைதிக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவாயஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகள் கலாசார நிலையத்தினர்.

அளவெட்டி மகாஜன சபையினர்.

(13825) (6,7,10)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 - 07 - 1959

மறைவு 25 - 01 - 2002

அமரர்

**நாகேந்திரம் ஜெகதீஸ்வரன்**

திதி: 04.02.2012

இவ்வுலகை விட்டு மறைந்து
ஆண்டுகள் பத்து ஓடிவிட்டாலும்
நீங்கள் எம்முடன் என்றும்
வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

சந்தை வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(13809) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணத்தில் ஓரளவு மேகக்கூட்டத்துடன் கூடிய கால நிலை நிலவும். ஏனைய நான்கு மாவட்டங்களிலும் வழமைக்கு மாறாகக் காற்று வீசலாம்.

# குருநாகல் பகுதியில் தண்ணீர்த் தட்டுப்பாடு

**பிரதான நீர் நிலையான குருநாகல் குளம், வென்னறுவை குளம் மற்றும் கெம்பாத்த நீர்த்தேக்கமும் இவற்றுக்கு மேலதிகமாக நீரை வழங்கும் தெதுரு ஓயாவும் வற்றியுள்ளன**

இந்த வாரத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் குருநாகல் நகரை அண்டியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் கடும் தண்ணீர்த் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

குருநாகல் நகருக்கு நீரை வழங்கும் பிரதான நீர் நிலையான குருநாகல் குளம், வென்னறுவை குளம் மற்றும் கெம்பாத்த நீர்த்தேக்கமும் இவற்றுக்கு மேலதிகமாக நீரை வழங்கும் தெதுரு ஓயாவும் வற்றிப் போயுள்ளதால் நீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்கு பின்னர் இந்த முறை குருநாகல் குளம் வற்றிப் போயிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்பட்டுள்ள நீர்த் தட்டுப்பாட்டுக்குப் பரிகாரமொன்றாக வற்றிப் போயுள்ள குருநாகல் குளத்தின் ஒரு பகுதியில் தற்காலிக கிணறொன்றை நிர்மாணித்து மக்களின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யப்படுமென குருநாகல் நகர முதல்வர் அனுராத காமினி பெர முணகே தெரிவித்துள்ளார். (ந-22)

## கைப்பொருள் கண்காட்சி



வலி வடக்கு,பெப்.4

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கைப்பொருள் கண்காட்சி அண்மையில் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பப் பிரிவுப் பொறுப்பாசிரியர் சி.தேவகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர் சி.சயந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நாடாவெட்டி கண்காட்சியைத் திறந்து வைத்தார். (ம-86)

## அதிக சம்பளம் பெறுவோருக்கே பிரிட்டனில் இனி அனுமதி

லண்டன்,ஜன.4

தகுதியும் நல்ல திறமையும் உடையவர்களுக்கே இனி பிரிட்டனில் தங்க இடம் என அந்நாட்டு புதிய குடியேற்ற சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள், ஐரோப்பிய யூனியன் அல்லாத நாட்டைச் சேர்ந்தவர்கள் கல்வி கற்க, தொழில் விஷயமாகப் பிரிட்டன் வருகின்றனர். பின்னர் அவர்கள் குடியுரிமை கோருகின்றனர். இந்த நிலையில் அந்த நாட்டுக் குடியேற்றச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த நாட்டுக் குடியேற்றத்துறை அமைச்சர் டேமின்கிரீன் தெரிவித்ததாவது:

பிரிட்டனில், ஐரோப்பிய யூனியன்அல்லாத நாட்டைச் சேர்ந்தவர்கள், ஆண்டு வருமானமாக 31 ஆயிரம் பவுண்ஸ்கள் அதற்கு மேலாகச் சம்பளம் பெறுபவர்கள் மட்டுமே பிரிட்டனில் நிரந்தர குடியுரிமை பெறத் தகுதியானவர்கள், மேலும் பிரிட்டன் நாட்டைவரைச் சேர்ந்தவர்கள், வெளிநாட்டினரைத் திருமணம் செய்து பிரிட்டனுக்கு அழைத்து வந்தால் அழைத்து வருபவரது (பிரிட்டன் வாசி) ஆண்டு வருமானம் 25 ஆயிரம் பவுண்ஸ்களுக்குமேல்இருக்கவேண்டும்.

இதற்காக குடியேற்றச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும். அமைச்சரின் இந்த அறிவிப்பு, இந்தியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது. (ந)

## புனரமைப்புக்கு நிதி மதிப்பீடு

வடக்கு கிழக்கு'' கமநெகும'' உள்ளூர் பிரதேச கிராமிய சிறுநகர அபிவிருத்திக்கான செயற்பாடுகளின் கீழ் யாழ். மாநகர சபைக்குட்பட்ட சில இடங்களைப் புனரமைக்க நிதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி திருநகர் வடிகால் தியோகு பாலர் பாடசாலையில் இருந்து கடற் கரை வீதிவரை புனரமைப்புச் செய்யப்பட 4.45 மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளது. நல்லூர் துர்க்கா வீதிக்கு ரூபா 5.5 மில்லியனும் அச்சுதன் குளம் பூநாறி மடத்தடி பாலம் புனரமைத்தல், அணைச் சுவர் கட்டுதல் போன்ற வற்றுக்கு 4.6 மில்லியனும் மதிப்பிடப்பட்டுள்ளன. மேலும் விதானையார் வீதிப் புனரமைப்புக்கு ரூபா.4.17 மில்லியனும் மதிப்பிடப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்தப்புனரமைப்புக்கள் இடம்பெறவுள்ளன. (ந-7)

## அநுராதபுரத்தில் சுதந்திர தினம்

இலங்கையில் 64ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இன்று அனுராதபுரத்தில் நடைபெறும் என்று அரச நிறுவனங்களுக்கு சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 8.50 மணிக்கு அரச திணைக்களங்களில் தேசியக் கொடி ஏற்றுமாறும் இந்தச் சுற்றிக் கையினூடாக திணைக்களத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.(வ-300)

## சனசமூக நிலையத்துக்கு மதில் அமைப்பு

கனடா கனடாவில் புலம்பெயர்ந்து வழ்கின்ற குப்பிளான் விக்னேஸ் வரா மக்கள் மன்றத்தின் ஆதரவுடன் குப்பிளான் விக்னேஸ்வரா சன சமூக நிலையத்தின் முன்பக்க மதில்கள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ந-313)

## நுண்நிதியியல் கற்கைநெறி

யாழ்ப்பாணம், பெப்.04

பல்கலைக்கழகத்தின் 'முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் 'நுண்நிதியியல் டிப்ளோமா'' கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கற்கை நெறிக்கு நுண்நிதியியல் பகுதியில் தமது பங்களிப்பைச் செலுத்தும் வங்கி ஊழியர்கள், சமுர்த்தி நிறுவன ஊழியர்கள், சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் போன்றோர் விண்ணப்பிக்க முடியும்.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 15ஆம்திகதி புதன்கிழமைக்கு முன்னதாக விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில்பெற்றுக் கொள்ளலாம் எனக் கற்கை நெறியின் இணைப்பாளர் ஆ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ந-14)

**பணிநிலை வெற்றிடம்**

கல்விசார் நடவடிக்கையில் ஈடுபடுவதற்குபெண்பணியாளர்கள்தேவை கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், ஆகிய இடங்களில் பாலர் பாடசாலைக்கு அனுபவமும் தமிழ் ஆங்கிலம் கற்பித்தல் திறமையும் உடைய 20-35 வயதுக்கு உட்பட்ட பெண்பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் தகுதியானவர்கள் தங்கள் சுயவிபரப்படிவங்களை கீழ்காணும் முகவரிக்கு 10-02-2012 முன் அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல: 4218
மே.பா உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

**10ஆம் ஆண்டு நினைவு நாள்**



அன்னை மடியில்
05-11-1953

இறைவன் அடியில்
04-02-2002

**அமரர் கந்தையா சத்தியசீலன்**
(முன்னாள் முகாமையாளர், எரிபொருள் விற்பனை நிலையம் - மானிப்பாய்)

ஐ இரண்டு ஆண்டுகள் ஆகிறது
அன்பர் உம் பிரிவைக் கண்டு!
அன்பின் உறைவிடமாய்
அமைதியின் புகலிடமாய் - வாழ்ந்த
எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
சாந்தமான குணமும்
சத்தியமான பேச்சும் கொண்ட நீங்கள்
சடுதியில் எம்மை விட்டு பிரிந்ததேனோ?
ஆணிவேராய் எமக்கிருந்து
ஆறுதல் வார்த்தை பேசி
அரவணைத்த உங்களை மீண்டும் காணக் காத்திருக்கிறோம்.
இறைவனின் வருகையில் - தங்களைச் சந்திக்க!

Dutch Rd, Sanguwali North,
Manipay.
(13851) (6,7,10)

மனைவி,
பிள்ளைகள்.

**அறிவிப்பு Spectra Skills**

இன்று (04.02.2012) நடைபெற இருந்த New Era Academy வழங்கும் சிறுவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான நேர்முகத்தேர்வும் பயிற்சியும் 18.02.2012 (சனிக்கிழமை) இற்கு பிற்போடப்பட்டுள்ளது

**விற்பனைக்கு**

253-XXXX தொடரிலக்கமுடைய (DUAL PURPOSE VEHICLE) TOYOTA வான் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0775717385

**தவறிவிட்டது**

சண்முகமூர்த்தி செங்கீரன் என்பவரது தே.அ.அ. (801031900V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் கொடிகாமத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0772251262 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

**விசேட விலைக்கழிவு**

கல்பேட் கோழி முழு எடை கிலோ
290/= மொத்தமாகப்
பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட
விலைக்கழிவு உண்டு. இன்றும்
நாளையும் மட்டுமே இச் சலுகை
வழங்கப்படும்.
தொ.பே.இல.0776144030

**கண்ணீர் அஞ்சலி**



யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்
தேசிய பாடசாலையின் பழைய
மாணவியும், மூத்த ஆசிரியருமான
**திருமதி மகேஸ்வரி இராமலிங்கம்**
(மகேஸ் ரீச்சர்)
அவர்கள் லண்டனில் காலமான
செய்தியறிந்து கவலையடைந்தோம்.
அவரது ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்தித்து எமது இதய அஞ்சலிகளைச்
சமர்ப்பிப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்து நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
திருக்குடும்ப கன்னியர்மடம். தேசிய பாடசாலை, யாழ்ப்பாணம்.
(13745)(2-6-7)

**மரண அறிவித்தல்**

**கந்தையா விக்னேஸ்வரன்**
(நிர்வாகி - சாய் கல்வி நிறுவனம்)



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விக்னேஸ்வரன் (சாயி கல்வி நிறுவன நிர்வாகி) (01.02.2012) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (பொலிஸ் உத்தியோகத்தர்) - தங்கரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் விநாயகமூர்த்தி (ஓய்வுபெற்ற அதிபர்) - பரமேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை) தம்பதியரின் அன்பு மருமகனும் சுபாசினியின் அன்புக் கணவரும் ராஜ் சஜீவன் (மாணவன், இந்துக்கல்லூரி கொழும்பு), கல்யாணி (மாணவி, இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி- கொழும்பு) ஆகியோறின் தந்தையும் மகேஸ்வரன் (ஜேர்மனி),லோகேஸ்வரி (ஆசிரியை, கோப்பாய் றோ.க.த பாடசாலை), அழகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரரும் ஜெயரத்தினம் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சோதிநாதன்(கனடா), சுகிர்தினி (லண்டன்),உருத்திரன் (லண்டன்), சுந்தரேசன் (அவுஸ்திரேலியா), பத்மப்பிரியா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் பவித்திரா, அனோகரன் (சாரதி, M.O.H.உடுவில்), ராஜ்திலக் (லண்டன்), அயன்(கனடா), மிதுரா (அவுஸ்திரேலியா), ஹரிஷ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/8785(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கடன் விவகாரங்களில் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய நாள். நண்பர்களை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். வீட்டை அழகாக வைத்துக் கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். பெண்கள் குடும்பப் பெரியவர்களின் அன்பைப் பெறுவர். உத்தியோகத்தர்கள் பணிச்சுமையால் அவதிப்படலாம்.

**இடபம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். குழந்தைகள் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர்களின், சக ஊழியர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும்.

**மிதுனம்:** கௌரவம், மதிப்பு அதிகரிக்கும். தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். வேலையாள்களால் சிரமங்களைச் சந்திக்கலாம். பயணங்களால் அலைச்சல் உண்டு. உங்களை மனம்நோகும் வகையில் சிலர் பேசலாம். சிலர் உதவி செய்ய முன்வந்தும், அதை வேண்டாம் என்று, மறுத்து விடுவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள்.

**கடகம்:** மறக்க முடியாத நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட உறவினர் ஒருவர் ஆதரவாக நடந்து கொள்ளலாம். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் உருவாகலாம். இது வரை வராத நண்பர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். புதிய அனுபவம் பெறலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

**சிங்கம்:** பெரிய மனிதர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். வர்த்தகர்கள் எதிலும் அகலக்கால் வைக்காமல் யோசித்துச் செயற்பட வேண்டும். சில தவறுகளைச் செய்ய முற்பட்டு அதனால், பதற்றம், படபடப்பு அடையலாம். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். ஊக்கம், உற்சாகம் கூடும்.

**கன்னி:** ஆரோக்கியத்தில் அக்கறைகாட்ட வேண்டிய நாள். திடீரென நிகழும் மாற்றங்களால் வியப்படையலாம். எதிரிகள் தொல்லைகள் குறைந்து ஏற்றம் பெறுவீர்கள். உடன்பிறப்புகள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். திடீர் பயணங்கள் செல்ல நேரிடலாம். முன்பின் பார்த்திராத சிலருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம்.

**துலாம்:** எதிர்பாராத சம்பவங்கள் நடக்கும் நாள். சோர்வு,சோம்பலால் திட்டமிட்ட சில வேலைகளை மாற்றி அமைப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். மாமன், மைத்துனர்களின் அன்புத் தொல்லை உண்டு. சிலரின் விமர்சனங்களை எதிர்கொள்ளலாம்.

**விருச்சிகம்:** எதிர்கால நலன் கருதி புதிய திட்டம் போடுவீர்கள். சில நாள்களுக்கு முன்னர் உருவான பிரச்சினை ஒன்று, இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். அதிகரிக்கும் செலவுகளால் கையில் திடீர் பணத்தட்டுப்பாடு உண்டாகலாம். நண்பர்கள் சிலரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

**தனுசு:** சிக்கலான பிரச்சினை ஒன்றை சாமர்த்தியமாகச் செயற்பட்டு முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். பணியில் நிம்மதியற்ற சூழ்நிலை விலகி அமைதி உண்டாகும். பொதுவாழ்வில் உள்ளோர் முன்னேற்றம் காண்பர். புதியவர்களின் நட்பைப் பெறலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடிப்பீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு, சந்தோஷம் அதிகரிக்கும். எளிதில் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்றில் இழுபறி ஏற்படலாம். அடுத்தவர்களுக்காக சில காரியங்களைச் செய்வீர்கள். குடும்ப விவகாரங்களில் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். மற்றவர்களைப் பார்த்து ஆதங்கம் அடையலாம்.

**கும்பம்:** தொழிலில் எதிர்பார்த்த உழைப்பைப்பெற கடுமையாக உழைப்பீர்கள். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். மாற்று மத நண்பர்களை நம்பி எந்த முயற்சியிலும் இறங்க வேண்டாம். தேக ஆரோக்கியத்தில் சிறு தொந்தரவு ஏற்படலாம். பல நாள்களாகப் பார்க்காத ஒருவரைத் திடீரென பார்க்கலாம். நீண்ட தூரப் பயணம் செல்லலாம்.

**மீனம்:** தொட்ட காரியங்கள் துளிர் விட்டு வளரும் நாள். வசதி படைத்தவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். குடும்பத்தினர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பல வேலைகளைச் செய்ய திட்டமிட்டாலும், அதில் சில வேலைகள் முடியாமல் போகலாம். உறவுப் பெண்கள் வழியில் சில செலவுகளைச் சந்திக்கலாம்.

**நாளை**

தை 22 ஞாயிற்றுக்கிழமை 05.02.2012
திதி: திரயோதசி பி.இ. 05.10 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப. 01.17 வரை
சுபநேரம்: 09.35 - 11.05 வரை,
ராகு காலம்: 05.05- 06.35 வரை

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | 3 | 5 | 2 | |
| | | | 1 | | 2 | 9 | | |
| | 8 | | 4 | | 5 | | | 1 |
| 8 | 4 | 3 | | | | | | |
| | 9 | 1 | 8 | | 6 | 3 | 4 | |
| | | | | | | 2 | 8 | 9 |
| 4 | | | 2 | | 8 | | 6 | |
| | | 8 | 6 | | 1 | | | |
| | 3 | 9 | 5 | | | | 1 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 4 | 3 | 2 | 5 | 1 | 9 | 7 |
| 9 | 5 | 1 | 8 | 4 | 7 | 3 | 2 | 6 |
| 2 | 7 | 3 | 6 | 9 | 1 | 8 | 4 | 5 |
| 3 | 1 | 2 | 9 | 7 | 8 | 5 | 6 | 4 |
| 8 | 4 | 7 | 5 | 6 | 2 | 9 | 3 | 1 |
| 5 | 9 | 6 | 1 | 3 | 4 | 7 | 8 | 2 |
| 7 | 6 | 5 | 2 | 8 | 9 | 4 | 1 | 3 |
| 4 | 3 | 9 | 7 | 1 | 6 | 2 | 5 | 8 |
| 1 | 2 | 8 | 4 | 5 | 3 | 6 | 7 | 9 |

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## ருக்மணி நடராசா



எம் அன்புத் தெய்வமே! அம்மா!
பாசத்தின் வடிவமாகப் பாரினில்
எமையெல்லாம் பண்பு சொல்லி
பரிவுகாட்டிப் படிக்க வைத்து
பாதியிலே உன் செல்வங்கள் பரிதவிக்க
தாயில்லாப் பிள்ளையோ காலனவன்
தாய் மடிக்கேங்கி உனைக் கவர்ந்தானோ?
மௌனத்துயர் அமர்ந்து நம் இதயம்
விம்மித் துடிப்பதென்ன?
அலைபாயும் மனமும் நிலைசோரும்
உடலும் உனைப்பார்க்கத் தவிக்கின்றதே
உங்கள் முகம் ஆங்கீங்கு எல்லாம்
கண்டு அகமெல்லாம் கலங்குகின்றதே!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்புக்கு ஈடாகுமா! அம்மா
அன்போடு எமை அரவணைத்து
பண்போடு எமை வழிநடத்திய
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து
இரண்டு ஆண்டுகள் உருண்டோடி
விட்டதே அம்மா
இன்னும் எத்தனை எத்தனை ஆண்டுகள்
உருண்டோடினாலும் உங்கள்
நினைவுகள் என்றுமே எம்மை விட்டுப்பிரியாது
மீண்டுமொரு புனர் ஜென்மம் எடுத்திங்கு
எமதுயிரை விடுவிக்க வேண்டுமம்மா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 01.06.1946 உதிர்வு 10.02.2010

திதி: 04.02.2012

138, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம் என்பது எங்கே?

சொந்த ஊரில், சொந்தக் காணியில் சொந்த வீட்டில் குடும்பத்துடன் ஒன்றாகக் குடியமர வானத்தைப் பார்த்துப் பெருமூச்சுவிடும் மக்களுக்கு எங்கிருந்து சுதந்திரம் கிடைக்கப் போகின்றது.

இன்று இலங்கை சுதந்திரம் அடைந்து 64 ஆண்டுகள் கடக்கின்றன. நாடு சுதந்திரம் அடைந்தும் மக்களுக்கான சுதந்திரம் என்பது முற்றுமுழுதாகக் கிடைக்கவில்லை என்று தான் கூற வேண்டும்.

இலங்கையில் இன, மொழி வேறுபாடு காணப்படுவதே முக்கிய காரணமாக உள்ளது. ஆரம்பகாலம் தொட்டு தமிழினம் '' வந்தேறு குடிகள்'' என சிங்கள இனத்தவர்கள் தமிழர்களை அடிமைகளாக்கி ஆட்சிப் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொண்டனர்.

இனவாதக் கொள்கையை அடிப்படையாக வைத்து சிங்கள இனம் தமிழினத்தை தலைமைத்துவத்தில் இருந்து அகற்றி நாடே தமக்குரியதாக நினைத்து தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தனர்.

தமிழர்களின் உரிமைகளைப் பறித்து ஆட்சிப் பொறுப்பில் காலகாலம் தொட்டு சிங்கள இனத்தைச் சார்ந்தவர்களே தலைவர்களாக நியமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இன்று தமிழர்களின் இருப்பிட நிலங்களைக் கூட பலாத்காரமாக கைப்பற்றிக் கொண்டு அரியாசனத்தில் சிம்மாசனம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியவில்லை இருப்பதற்குக் கூட நிலத்தைக் கொடுத்தது தமிழர்கள் என்பது.

அராஜகப் போக்கில் தமிழினத்தை மடக்க நினைப்பது கோழைத்தனமான ஓர் செயல் தான். இவர்களின் பிடிக்குள் சிக்குண்ட மக்கள் வந்தவனை வாழ வைத்து விட்டு தாம் எப்போதும் ஏதிலிகளாகவே இருக்கின்றனர்.

இந்த மக்களுக்கு ஏது சுதந்திரம் கிடைத்து விட்டது. சொந்த ஊரில், சொந்தக் காணியில் சொந்த வீட்டில் குடும்பத்துடன் ஒன்றாகக் குடியமர வானத்தைப் பார்த்துப் பெருமூச்சுவிடும் மக்களுக்கு எங்கிருந்து சுதந்திரம் கிடைக்கப் போகின்றது.

ஆனால் பேரளவில், உலகின் பெயருக்காக இலங்கை சுதந்திரம் அடைந்து விட்டதாகக் கூறுகிறார்கள்.

தமிழினம் இப்படியிருக்கும் போது சிங்களத் தலைமைக்குள் தமது சுதந்திரங்களைப் பறிகொடுத்து விட்டு இனத்துக்கிடையிலேயே அடிமைகளாக ஆக்கப்பட்டுள்ளார்கள். நாட்டுப்பற்றான சில சிங்கள இன மக்களும் தான்.

அடிமை ரீதியாகவும் சரி, ஆயுதம் மூலமாகவும் சரி எத்தனை போராட்டங்கள் நடத்தினாலும் சரி இன்றும் ஏமாந்து கொண்டிருப்பது ஏமாற்றப்பட்டுக் கொண்டிருப்பது தமிழர் இனம் தான் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

1958 ஆம் ஆண்டு சிங்களவர்கள் தமது ஆதிக்கத்தை, அடக்குமுறையினை தமிழ் மக்கள் மீது திணித்து பலரை சாகடித்தமையும் வரலாற்றுச் சம்பவங்கள் ஆகும்.

'' கறுப்பு ஜூலை '' என வர்ணிக்கப்பட்ட மாபெரும் இனப் படுகொலையும் தமிழினத்தின் சுதந்திரத்தை மென்று தின்றுவிட்டதை நீக்கி நினைவுபடுத்துகின்றது.

அதனைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தை நடத்தி வகைதொகையாக தமிழ் மக்களை துவம்சம் செய்தது சிங்களம்.

வீறு கொண்ட தமிழினம் வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தமது இனத்தின் பாதுகாப்பினைத் தக்க வைக்க அடிப்படை ரீதியாக கொடியேற்றிப் பல தலைவர்களின் வழிகாட்டல்களில் நடத்தினார்கள்.

தமது உரிமைகளைத் தாம் தக்க வைக்க வேண்டும் எனும் கொள்கைப்பாடே தமிழ் மக்களிடம் ஆளமாகப் பதிந்து இருந்தது. சுதந்திர தினங்களன்றே தமிழர்களின் உயிர்களைப் பறியெடுத்த நாள்களும் சிங்களத்தின் காட்டேரித்தனத்தை வெளிப்படுத்துகிறது.

இன்று இலங்கையை சிங்களவர்கள் ஆட்சியில் '' மஹிந்த சிந்தனை'' எனும் கொள்கை அடிப்படையில் தமிழ் மக்களை ஆட்டிப்படைத்து கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திரம் என்பது சீனமொழி. வேறுபாடுன்றி நாடு முழுவதும் பெரு விமர்சையாகக் கொண்டாடப்பட வேண்டிய ஓர் விழாவாக உள்ளபோது தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் எங்கே சுதந்திரம் தினம் கொண்டாடப்படுகிறது.

இருப்பிடங்களையும், உயிர்களையும் பறியெடுத்தது மட்டுமல்லாது மனித சுதந்திரம் கூடக் கிடைக்க முடியாமல் சிறையிலும் தமிழ் மக்களை அடைத்து வைத்திருக்கிறது சிங்கள இனம். கடந்த அறுபத்தி மூன்று வருடகாலமாகவே தமிழினம் போராடியிருக்கிறது. பல்வேறு வடிவங்களில், பல்வேறு தியாகங்களைச் செய்து, போராடிய வேளையில் தமிழர் சுதந்திரப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில், துயரத்தையும், அவமானத்தையும், வேதனையையும், கொடூரத்தையும் சுமந்தே தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

போர் முடிந்து இன்றைக்கு முப்பத்திரண்டு மாதங்களாகிய நிலையில் இன்றும் தமிழ் மக்கள் தங்கள் மனங்களில் ஆறாத காயத்தோடும், தீராத வலிகளோடும், கனத்த சுமைகளோடும், ஏக்கப் பெரு மூச்சோடும் கேள்விக் குறியோடும் இருக்கின்றார்கள். வரலாற்றுத் துயரங்கள் பாதிக்கப்பட்ட தமிழர்களிடமிருந்து மறைய வேண்டும்.

இவை எல்லாம் விரைவில் மறையுமா? தமிழர்களிடம் இருந்த மிச்ச வாழ்வாதார சுதந்திரத்தையும் பறித்து விட்டு வருடாவருடம் சுதந்திர தினக்கொண்டாட்டத்தையும், போர் வெற்றிக் கொண்டாட்டத்தையும் சிங்களத் தலைமை கொண்டாடுவதில் என்ன அர்த்தமுள்ளது.

19.11.2010 அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ் தனது இரண்டாவது பதவியினை ஏற்றபோது ஒரே நாடு, ஒரே மக்கள், நாம் அனைவரும் ஒரே குடும்பம், அனைத்து இன மக்களும் சமத்துவத்துடனும், சமாதானத்துடனும் வாழவேண்டும் என்பதே எனது நோக்கமும் இலட்சியமும் என்று வீர முழக்கமிட்டிருந்தார். ஆனால் இத்தகைய கருத்துக்கள் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நேர் எதிர் மாறான கருத்துக்களே அவையாகும். சிங்கள மக்களைப் பிரதி பலிப்பதற்காகக் கூறப்பட்டவையே.

நீண்ட போரைச் சந்தித்த மக்கள் இப்போது சுதந்திரக் காற்றை சுவாசிப்பதாகவும், நிம்மதியான வாழ்வு வாழ்வதாகவும் அரசும், படையினரும் கூறிக்கொண்டு வருகின்றனர். ஜனாதிபதி கூறிய கருத்தின் பிரகாரம் தமிழர்கள் எந்த விதமான சுதந்திரக் காற்றை அனுபவிக்கின்றனர். வடக்கு கிழக்கில் தமிழர்கள் இன்று அனுபவிக்கின்ற சுதந்திரமான வாழ்வு இதுதானா?

சுதந்திரம், சுதந்திரதினம் என்பது இலங்கை நாட்டில் தமிழர்கட்கு உரியதல்ல. இது எழுதப்படாத தீர்ப்பாகும். இதனை 1948 ஆம் ஆண்டே சிங்களத் தலைமை முடிவு செய்ததொன்றாகும்.

இந்த நாட்டின் தமிழர்கள் சமஉரிமை பெற்று வாழ்வதற்கான சுதந்திரம்..... என்றுமே தொடர்ச்சியாக நீளுகின்றதொரு கேள்விக் குறியே. அதுவரைக்கும் சுதந்திரம் சிங்கள மக்களுக்கேயானதாகும். இதனையே ஆண்டு தோறும் நடாத்தப்படுகின்ற சுதந்திர தினங்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

மூனாத்தானா

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி
செவ்வந்தி இரத்தினவேல்
B.A (Hons) HNDM
கொழும்பு BMICH இல் SLIATE
இன் HNDM பட்டம் பெற்று
29.01.2012 இல் யாழ்.
பல்கலைக்கழக
பட்டமளிப்புவிழாவில் B.A(Hons),
பட்டம் (2nd Class, lower div)
பெற்ற செல்வி இ. செவ்வந்தி
அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: உறவினர்கள், நண்பர்கள்.
(13748) (6,7,45)

அன்னையை வாழ்த்துகின்றோம்

இன்று சனிக்கிழமை
முத்துவிழாக்காணும்
குப்பிழான் அன்னை
விசுவம்பா
விசாலாட்சி
மாதாஜி
அம்மையாரை பல பிறை கண்டு அறிவொளி பெருக்கி நிறை நெறிமிக்க சைவச் சமூகத்தை தோற்றுவித்து ஆழி சூழ் உலகு உள்ளவரை வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
குப்பிழான் வாழ் மக்களும்,
மன்றங்களும்.
(C\8793) (6,7,10)

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
Care

முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு
எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.
வவுனியாவில் 12,13 ஆம் திகதியில்.... முன்பதிவுகளுக்கு - 021 - 4923416
V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 2220288.

EASY ENGLISH
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH A CADEMY
(யாழ் நகரில் : வகுப்பிட அனுசரணை)
புதிய உயர் கல்லூரி
விவரங்களுக்கு
077 3212711

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15 Sirambiyadi lane (off stanly road) jaffna. TP No 021 222 8250,077 490 7444
அதிரடிக் கட்டணக் கழிவு
Diploma in Microsoft Office 1000/= 3 Months
Diploma in Desktop Publishing 1000/= 4 Months
Diploma in Webpage Designing 1000/= 3 Months
Diploma in Graphic Designing 1000/= 3 Months
Diploma in Hardware Engineering 1000/= 3 Months
Diploma in Computerized Accounting 1000/= 3 Months
Diploma in Computer Science 1000/= 4 Months
Hon. Diploma in Computer Science 1000/= 4 Months
Hon. Diploma in Programming 1000/= 4 Months
Diploma in Auto CAD 1000/= 3 Months
Advance Courses
Diploma in Video Editing 4 Months 1000/=
Diploma in Multimedia 4 Months 1000/=
Batch I - 05-02-2012-9am or 3pm
Batch II - 08-02-2012-9am or 3pm
Batch III - 10-02-2012-9am or 3pm
Batch IV - 11-02-2012-9am or 3pm
Certificate in Multi IT
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்
மேலும் எமது நிறுவனத்தில்.........
Fast track Courses ஆக
1 Week Course/1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Acc Package
Course Fee 1000/=
Monday to Friday 9am to 3.30 pm
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்...
Tally Accounting Package புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
New Batch:- Saturday & Sunday 4pm to 5pm

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே
Care
DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic

தலைமுடி உதிர்தல். ஆண் பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புழுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.
தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!
எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது.
வவுனியா 12,13 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு- 021 - 4923416
V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 2220288.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி

இந்திய அணி தனது தொடர் தோல்விக்கு நேற்று முற்றுப் புள்ளி வைத்தது. ஆஸ்திரேலியாவுடனான இரண்டாவது 'ரி-20' ஆட்டத்தில் நேற்று 8 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றதன் மூலம் தொடர் தோல்விக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்திய அணி விளையாடி வருகின்றது. முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் தோல்வியடைந்த இந்திய அணி தொடரை சமப்படுத்த வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது. மெல்போர்னில் நடந்த நேற்றைய ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வோர்னர், வின்ஞ் களமிறங்கினர். அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்த போதும் அணி 19 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது இலக்கை இழந்தது. வோர்னர் 8 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த ஷோன் மார்ஷ் ஓட்ட மெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். வேகமாக ஓட்டங்களைக் குவித்த வின்ஞ்சுடன் இணைந்து டேவிட் ஹஸி ஓட்டங்களைச் சேர்த்தார். 7 பந்து பரிமாற்றங்களில் 49 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மூன்றாவது இலக்கை ஆஸ்திரேலிய அணி இழந்தது. சிறப்பாக ஆடிய வின்ஞ் 23 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 'ரன் அவுட்டானார்'.

- தொடர்ந்து நுழைந்த அணித்தலைவர் பெய்லியும் 3 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டாக', ஆஸ்திரேலிய அணி 54 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது. அதன் பின்னர் டேவிட் ஹஸி, மத்தியூ வேட் இருவரும் இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தை அமைத்தனர். அளவான அதிரடியுடன் நகர்ந்த இணைப்பாட்டம் 30 பந்துகளில் 39 ஓட்டங்களை பங்கிட்ட போது பிரிக்கப்பட்டது. டேவிட் ஹஸி 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த மிர்செல் மார்ஷ் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய வேட் 29 பந்துகளில் 32 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 'ரன் அவுட்டானார்.' பின்வரிசை வீரர்கள் நிலைத்து நிற்காததால் ஆஸ்திரேலிய அணி 19.4 பந்து பரிமாற்றங்களில் 131 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் பிரவீண் குமார், ராகுல் சர்மா தலா 2 இலக்குகளையும், வினய்குமார், ஜடேஜா தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர். ஆஸ்திரேலிய அணியின் நான்கு வீரர்கள் 'ரன் அவுட்டாகி' வெளியேறினர்.


இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய இந்திய அணிக்கு கம்பீர், சேவாக் ஜோடி சிறப்பான தொடக்கத்தை அளித்தது. சேவாக் அதிரடியில் முழங்க கம்பீர் அடக்கி வாசித்தார். 39 பந்துகளில் 43 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் சேவாக் 16 பந்துகளில் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த ஹோக்லி சிறப்பாக தனது ஆட்டத்தை தொடங்கினார்.

ஹோக்லி வேகமாக ஓட்டங்களைக் குவிக்க இந்தியாவின் வெற்றி வாய்ப்பு மெல்ல உறுதியானது. அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் ஹோக்லி 24 பந்துகளில் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஹோக்லியின் ஆட்டமிழப்பை தொடர்ந்து அணித் தலைவர் டோனி களம்புகுந்தார். ஆரம்பம் முதல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கம்பீர் 54 பந்துகளில் தனது 7 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார்.

இறுதியில் இந்திய அணி இரண்டு பந்துகள் மீதமிருக்கையில் 135 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது.

கம்பீர் 60 பந்துகளில் 56 ஓட்டங்களையும், டோனி 18 பந்துகளில் 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ஹொச் மிர்செல் மார்ஷ் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக இந்திய அணியின் ஜடேஜா தெரிவு செய்யப்பட்டார். இந்த வெற்றி மூலம் இரண்டு ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' தொடர் சமநிலையில் முடிவடைந்தது. (5)









## பரிசுத் தொகை அதிகரிப்பு

வருடந்தோறும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியை கணக்கில் கொண்டு டெஸ்ட் போட்டியில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிக்கு ஐ.சி.சி விருதுடன் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது. முதல் பரிசு பெறும் அணிக்கு சம்பியன் பட்டத்துடன் ரூ.85 லட்சம் பரிசு கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது இந்த பரிசுத்தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

முதலிடத்தை பிடிக்கும் அணிக்கு ரூ.2.2 கோடி வழங்கப்படும் என்று ஐ.சி.சி அறிவித்துள்ளது. 2 ஆவது இடத்தை பிடிக்கும் அணிக்கு ரூ.1.71 கோடியும், 3 ஆவது இடத்தை பிடிக்கும் அணிக்கு ரூ.1.2 கோடியும், 4 ஆவது இடம் பிடிக்கும் அணிக்கு ரூ.73 லட்சம் வழங்கப்படும். மேலும் இந்தப் பரிசுத்தொகை எதிர் வரும் ஆண்டுகளில் உயர்ந்து கொண்டே செல்லும் என்று ஐ.சி.சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## கொள்ளையடிக்க தென்னாபிரிக்கா திட்டம்

தற்பொழுது இங்கிலாந்து கிரிக்கெட் அணி டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அந்த அணி முதல் 2 டெஸ்டிலும் படுதோல்வியை சந்தித்தது. கடைசி டெஸ்ட் ஆட்டத்திலும் அந்த அணி தோல்வியை தழுவினால் முதலிடம் பறிபோகும் நிலை உள்ளது.

இதற்கிடையே தென்னாபிரிக்க அணி முதலிடத்தை பிடிக்க தயாராகி வருகிறது. அந்த அணி இந்த மாத இறுதியில் நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் போட்டியில் விளையாட உள்ளது. இந்தத் தொடரை தென்னாபிரிக்க அணி வெல்லும் பட்சத்தில் முதலிடத்திற்கு முன்னேற வாய்ப்புள்ளது, முதலிடத்தை பிடித்தால் ஐ.சி.சி விருதுடன் ரூ.2 கோடி பரிசையும் தட்டி செல்லலாம். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடிந்தது பாகிஸ்தான்




பாகிஸ்தான், இங்கிலாந்து இடையேயான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 99 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி நேற்றைய நாள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையே டுபா யில் டெஸ்ட் தொடர் இடம்பெற்று வருகின்றது. மூன்று ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணி 2-0 என்ற கணக்கில் ஏற்கனவே தொடரைக் கைப்பற்றியுள்ளது. இந்த நிலையில் இறுதி டெஸ்ட் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் அணி திண நியது. முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே பாகிஸ்தான்அணி யின் முதலாவது இலக்கு வீழ்த்தப்பட்டது. தௌபீக் உமர் ஓட்ட மெதனையும் பெறாத நிலையிலும்,அஷர் அலி 1, யுனிஸ் கான் 4, மொஹமட் ஹபீஸ் 13, மிஷ்பா உல் ஹக் 1, அட்னான் அக்மல் 6, அப்துர் ரெகிமான் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 21.2 பந்து பரிமாற்றங்களில் 44 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் இணைந்த அஷாட் சபிக், சயிட் அஜ்மல் இருவரும் கடுமையாகப் போராடினர். இவர்களது போராட்டத்தால் பாகிஸ்தான் அணி 50 ஓட்டங்களைத் தாண்டியது. மதியபோசன இடைவேளை வரை சமாளித்து நின்ற இந்த ஜோடி ஆட்டம் மீண்டும் ஆரம்பமாகியும் தனது இணைப்பாட்டத்தை நத்தை வேகத்தில் நகர்த்தியது.



இருப்பினும் 34 ஓட்டங்களை மட்டுமே இணைப்பாட்டமாகப் பெற்ற நிலையில் சயிட் அஜ்மல் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அஷாட் சபிக் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 85 ஓட்டங்களுக்கு ஒன்பதாவது இலக்கை இழந்தது.

அதன் பின்னர் உமர் குல் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணியின்ஆட்டம் முடிவுக்கு வந்தது. 44.1 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 99 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் இங்கிலாந்து தரப்பில் புரோட் 4, அண்டர்ஸன் 3, பனஷார் 2, சுவான் ஓர் இலக்கினையும் கைப்பற்றினர். பாகிஸ்தான் தரப்பில் 7 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணியும் பாகிஸ்தான் அணி போன்று ஆரம்பத்தில் தடுமாறியது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குக் 1, ரொரட் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 7 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதன் பின்னர் பீற்றர்ஸன், அணித்தலைவர் ஸ்ரோரஸ் ஜோடி இங்கிலாந்து அணியை மீட்டது.

மிக நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்து இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கையை ஐம்பதை தாண்ட வைத்தனர். சிறப்பாக 57 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் பீற்றர்ஸன் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த இயன் பெல் 5, மோர்கன் 10, பிரியர் 6 ஓட்டங்களுடன் வெளியேற இங்கிலாந்து அணி 98 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது.

இறுதியில் நேற்றைய ஆட்ட நேரநிறைவில் இங்கிலாந்து அணி 6 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஸ்ரோரஸ் 41, அண்டர்ஸன் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். (5)

## சதுரங்கப் போட்டி



யாழ்ப்பாணம்,பெப்.4
வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்கும் சதுரங்கப் போட்டி எதிர்வரும் 7ஆம், 8 ஆம் திகதிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இதில் 7 ஆம் திகதி ஆண்களுக்கான போட்டியும் 8 ஆம் திகதி பெண்களுக்கான போட்டியும் இடம்பெறவுள்ளது. (த-23)

# இரு பிரிவுகளில் செட்டிகுளம் சம்பியன்

யாழ்ப்பாணம்,பெப்.4
வவுனியா செட்டிகுளம் கோட்டமட்டப் பாடசாலைகளின் 17,19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்தவாரம் வவுனியா செட்டிகுளம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றன.

இதில் 17,19 ஆகிய இரு பிரிவுகளிலும் செட்டிகுளம் மகாவித்தியாலய அணி வெற்றி பெற்றது.

முதலில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் செட்டிகுளம் மகாவித்தியாலய அணியை எதிர்த்து வீரபுரம் மணிவாசகர் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் ஆட்ட நேரத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் செட்டிகுளம் மகாவித்தியாலய அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் செட்டிகுளம் மகாவித்தியாலய அணியை எதிர்த்து வீரபுரம் மணிவாசகர் வித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் செட்டிகுளம் மகாவித்தியாலய அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(த-23-400)

## வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம் ,பெப்.4
வவுனியா செட்டிகுளம் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15,17,19 வயது பிரிவுப் பெண் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

**15வயதுப் பிரிவு**
* செட்டி குளம் மகா வித்தியாலயம்- (முதலாமிடம்)
* முதலியார் குளம் வித்தியாலயம்- (இரண்டாமிடம்)
* அல் இக்பால் வித்தியாலயம்- (மூன்றாமிடம்)

**17 வயதுப் பிரிவு**
* வவுனியா அல் இக்பால் வித்தியாலயம்-(முதலாமிடம்)
* முதலியார் குளம் வித்தியாலயம்- (இரண்டாமிடம்)
* செட்டிகுளம் மகா வித்தியாலயம்- (மூன்றாமிடம்)

**19 வயதுப் பிரிவு**
* வவுனியா அல் இக்பால் வித்தியாலயம்-(முதலாமிடம்)
* வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயம்-(இரண்டாமிடம்)
* வவுனியா கணேஸ்வரா வித்தியாலயம்-(மூன்றாமிடம்). (த-23)

# இல்ல மெய்வன்மை போட்டிகள்

வடமராட்சி,பெப்.4
பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வே.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.செல்வக்குமரனும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் கா.சிவமும் கலந்து கொள்வர். (ம-8)

***

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற் றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு அதிபர் திருமதி செல்லமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்வார். திருமதி ஜமுனா நந்தகுமார் பரிசில்களை வழங்கி கௌரவிப்பார். (ம-8-190)

***

பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.1 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் கி.கிருஷ்ணானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கோட்டக் கல்வி அதிகாரி ச.சிவானந்தராசா பிரதம விருந்தினராகவும், பிரான் பற்று கிராம சேவையாளர் ம.தயானந்தன் சிறப்பு விருந்தினராகவும், வித்தியாலய நலன் விரும்பி த.பவளராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (த)

***

வடமராட்சி, பெப்.4
கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வண்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியையும் கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளைத் தலைவியுமாகிய திருமதி ராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (த-8)

## கெப்பிற்றிக்கொலாவ ம.வியுடன் சென்.ஜோன்ஸ் இன்று மோதல்



யாழ்ப்பாணம்,பெப்.4
அகில இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான பிரிவு 3 இற்கான கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் கெப்பிற்றிக்கொலாவ மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கெப்பிற்றிக்கொலாவ மகாவித்தியாலய அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (த-23)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்தலும்

தோற்றம்
10
01
1947



மறைவு
04
01
2012

**அமரர் சாந்தலிங்கம் சித்திரவேல் (சித்தி)**

கடந்த 04.01.2012 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவனின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (04.02.2012) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மான் பாடசாலை வீதி,
உடுவில்.

குடும்பத்தினர்.


## மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 7 மணியளவில் உடல் தகுதி காண் பரீட்சை இடம் பெறும் எனவும், அதனைத் தொடர்ந்து எழுத்துப் பரீட்சை இடம்பெறும் எனவும் யாழ். உதைபந்தாட்ட மத்திய ஸ்தர் சங்கத்தின் செயலாளர் அஜித்குமார் தெரிவித்தார். (த - 23)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*29-01-2012 (ஞாயிறு) அன்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலை மாணி (BA) பட்டம் பெற்ற*

**பரமநாதன் மோகனராஜா**

*அவர்களை மனமார வாழ்த்துவதுடன் மேலும் பட்டங்களை பெற வேண்டும் என எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.*

**வாழ்த்துவோர்:**
(13853) (6,7,10) **நகுலேஸ்வரன் கலைச்செல்வி (சுவிஸ்).**



## மரண அறிவித்தல்

### தெய்வேந்திரம் யோக மங்களநாயகி



புங்குடுதீவு, ஊரதீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் யோக மங்களநாயகி 02.02.2012 அன்று சிவபதமடைந்து விட் டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பார்வதி தம்பதியரின் மகளும், சித்திர வடிவேல்- காலஞ்சென்ற பரமேஸ்வரி தம்பதியரின் மருமகளும், சுஜீதனின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற பாலாம்பிகை காலஞ்சென்ற தில்லைவனம் மற்றும் நேசமணி, தர்மபூபதி, புஸ்பமலர், காலஞ்சென்ற கிருபாநிதி மற்றும் சாந்தாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயலட்சுமி, மகேந்திரன், காலஞ் சென்ற இராசலட் சுமி மற்றும் வீரலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-02-2012) சனிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேர தீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(13837) (6,7,10)

தகவல்:
சுஜீதன் (மகன்)



## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், பாவம் 18 உத்தராடம் முதலாம் பாதம், 1981 இல் பிறந்த, B.A (வெளிவாரி) இறுதி வருடம் கற்கும் பெண்ணுக்கு மணமகன் தேவை. உள்நாடு / வெளிநாடு விரும்பத்தக்கது சீதனம் பேசித் தீர்மானிக் கப்படும்.

தொடர்பு : 072 2694947



## வீடு வாடகைக்கு

யாழ் நகர மத்தியில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 078 9484194

(13830 )(6-7-8)



## தேவை

சைவ ஹோட்டலுக்கு சமையலாளர் ஒருவர் தேவை.

தொடர்பு : 077 3068835

(13838 )(6-7-8)


## பொது அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின்
மக்கள் பங்களிப்புடனான வீதி மின்விளக்குகள் பொருத்துதல்

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் ஏற்கனவே 450 வீதி மின்விளக்குகள் வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் பணிப்பின் பிரகாரம் பொருத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக வீதி மின்விளக்குகள் வீதிகளுக்கு பொருத்தும்படி மக்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் 15.12.2011 ஆம் திகதிய நகராட்சிமன்ற கூட்டத்தில் மக்கள் பங்களிப்புடன் வீதிவிளக்குகள் பொருத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைவாக நகராட்சிமன்றத்தினால் வீதிவிளக்குகள் பொருத்துவதற்காக அண்ணளவாக ரூ.3000.00 பெறுமதியான சிக்கன (energy) மின்விளக்குகள், அதற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்து மக்களின் கோரிக்கைகளுக்கேற்ப பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விளக்குகள் சிக்கன விளக்குகளாக இருப்பதனால் பயன்படுத்தப்படும் மின்சாரத்தினளவு குறைவாக இருக்கும்.

மக்களின் கோரிக்கைகளுக்கமைவாக பொருத்தப்படும் வீதி மின்விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணத்தை மக்களே செலுத்துதல் வேண்டும். இவ்வாறு மக்கள் மின்சாரக்கட்டணத்தை செலுத்த சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் மக்களுக்குத் தேவையான இடங்களில் வீதி மின்விளக்குகள் பொருத்தப்படும். எனவே வீதி மின்விளக்குகள் தேவையான மக்கள் நகராட்சிமன்றத்துடன் தொடர்புகொண்டு தமது சம்மதத்தினைத் தெரிவித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.
03.02.2012

இ.தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி வேலுப்பிள்ளை தங்கச்சிப்பிள்ளை

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தங்கச்சிப்பிள்ளை (01.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளையின் சகோதரியும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மைத்துனியும், திரவியம், சிவபாக்கியம், தவராஜா (ஜேர்மனி), கந்தசாமி (V.K.S மில்), சிவராஜா (V.K.S மில்), குணராஜா (V.K.K மில்) ஆகியோரின் அன்புமிகு தாயும், நல்லையா, சுப்பிரமணியம், சிவகாமசுந்தரி (ஜேர்மனி), கமலாசினி, இந்திராணி, கிருஷ்ணமலர் ஆகியோரின் அன்பு மாமியும், மகேஸ்வரன் - உதயகுமாரி (ஜேர்மனி), தர்மேஸ்வரன் - திருமகள், வித்தியா (கனடா), கோடீஸ்வரி - சர்வானந்தன் (சிறிகுமரன் Hardwares), கோடீஸ்வரன் - விக்னேஸ்வரி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் - சுதர்சினி (ஜேர்மனி), கௌரீஸ்வரன் - செல்வமலர் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி - காசி விஸ்வநாதன் (கனடா), லிங்கேஸ்வரன் - செல்வாம்பிகை (ஜேர்மனி), லிங்கேஸ்வரி - விஜிதன் (கனடா), சுதர்ஜன் - வனஜா (ஜேர்மனி), Dr. தாரணி (லண்டன்), ஸ்ரீநிவாசன் (ஜேர்மனி), செல்வக்குமார் - காயத்திரி, செல்வானந்தி -கஜரூபன், செல்வதர்சினி, வசீகரி, செந்தில்ரூபன், ஜெயப்பிரியா-சசிக்குமார், அச்சுதன் (ஜேர்மனி), வைகுந்தவாசன், சுகிர்தா, கோபிகிருஸ்ணா, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் உதயேஸ்வரன் - சர்மிளா (ஜேர்மனி), உதயதர்சினி - குணசிலன் (ஜேர்மனி), சதீஸ்வரன், தர்மி, தனேஷ்வரன், குணேஸ்வரன், தரனேஸ்வரன், கண்ணா, கிருஷ்ணா, சந்தோஸ், உஷாந்தினி - நந்தீஸ்குமார், செந்தில்குமரன், ஜெனனி, இளங்குமரன், சகீர்த்தனன், திலக்சன், இலக்கியா, திபிசன், அபிநா, கரிசன் (ஜேர்மனி), வசிக்கா, விவேக்கா, துவாரன், அபிஷேத், ஜெனியா, ஓவியா (கனடா), கவிநயா, அபிநாஸ், சுஜீஸ் ஆகியோரின் அன்புமிகு பூட்டியும் உதிர்ஸ்ரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புக் கொள்ளுப் பாட்டியும் ஆவார்.



அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**V.K.S. பிறதர்ஸ் அரிசி ஆலை**

**ஈஸ்வரன் பேக்கரி**

**(இணுவில் மானிப்பாய் வீதி)**

**ஈஞ்சடி,**
**வைரவர் கோயிலடி,**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

(13750)(45-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

# ஆச்சிமுத்து முருகப்பா



கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆச்சிமுத்து முருகப்பா நேற்று (03.02.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் – சின்னப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான சாவகச்சேரி பரிகாரி கார்த்திகேசு தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகப்பா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும் புவனேஸ்வரி (மட்டுவில்), கனகேஸ்வரி (ஓய்வுபெற்ற நூலகர் – சாவகச்சேரி நகரசபை), ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீதரன், மற்றும் ஸ்ரீ காந்தா (ஓய்வுபெற்ற அலுவலர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), ஸ்ரீ மோகன் (இத்தாலி), கேதீஸ்வரி (ஆசிரியை, யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), பகீரதன் (பிரான்ஸ்), சுதேஸ்வரி (ஆசிரியை, யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி), உமாகேஸ்வரி (அல்லாரை) ஆகியோரின் பாசமிகு தாயும், கிருஸ்ணபிள்ளை (ஓய்வுபெற்ற அலுவலர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), கணேசானந்தம் (உசன்), பாலசிங்கம் (விக்னேஸ்வரா அரைக்கும் ஆலை, அல்லாரை), காலஞ்சென்ற தவமணி மற்றும் மஞ்சுளா (இத்தாலி), காலஞ்சென்ற இ.து. சிவராசா (முன்னாள் விசேட ஆணையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை), மற்றும் சுஜாத்தா (பிரான்ஸ்), ஜெயபாலன் (ஆசிரியர், யா/ இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியும், கந்தவேள் (கலாசார அபிவிருத்தி அலுவலர், இணைப்பாளர் இலங்கை திறந்த பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்), சுகாசினி (கனடா), இளங்குமரன் (யாழ். பல்கலைக்கழகம்), ஜந்தூரி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜெகபவன் (உபதபாலதிபர், கச்சாய்), ஜெகப்பிரகாஸ் (சுவிஸ்), ஜெகமயூரன் (ஒப்பந்தகாரர்), சரண்ணியா (சா.இ.கல்.) வினோபவன் (சா.இ.கல்), விசாகன் (இத்தாலி), ஆர்த்திகா (இத்தாலி), சிந்துஜன் (புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி), விதுஷா (சுண்டுக்குளி ம.கல்.), விதுஜன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), சியானிசா (ஆ.ந.வித்.), மதுமிதன் (யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சுகன்யா (சா.இ.கல்.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கேசிகா, ரவிசங்கரன், சாகித்யன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2012) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, புதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியாற்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் வடக்கு,
கொடிகாமம்

தகவல்:
குடும்பத்தினர்

(13858)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாஹ சுப முகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ கணபதி துணையை முன்னிட்டு நிகழும் மங்களகரமான கர வருடம் தை மாதம் 23 நாள் (06.02.2012) திங்கட்கிழமை சதுர்த்தசி திதியும் புனர்பூச நட்சத்திரமும், அமிர்தசித்தயோகமும் கூடிய காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்

கோப்பாய், நீர்வேலி சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் அவர்களின் துவிதீய புத்திரன் **சிவஸ்ரீ சோ. சிவஜெயக்குருக்கள்** அவர்களுக்கு



வட்டுக்கோட்டை வடக்கு, சித்தங்கேணி சிவஸ்ரீ கணேசராஜக்குருக்கள் அவர்களின் புத்திரி சௌபாக்கியவதி **கணேசவேணி** அவர்களை

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்து வைக்க நீர்வை அரசகேசரிப் பிள்ளையார், சித்தங்கேணி கற்பகப் பிள்ளையார் அனுக்கிரகத்துடனும், பெரியோர்களின் ஆசியுடனும் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் மணமகள் இல்லத்தில் நடைபெறவ திருவருள் கைகூடியுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர பந்துகளுடன் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

05.02.2012 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு சமாவர்த்தனம் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
06.02.2012 திங்கட்கிழமை மாலை 03.00 மணிக்கு வதுவர கிரகப்பிரவேசம் நடைபெறும். மாலை 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு இடம்பெறும்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

சிவஸ்ரீ. சா. சோமதேவக்குருக்கள் குடும்பத்தினர்,
அரசகேசரிப் பிள்ளையார் கோயில்,
நீர்வேலி.
தொ. பே-0212230578

திருமதி வசிதாம்பாள் கணேசராஜக்குருக்கள் குடும்பத்தினர்.
வட்டுக்கோட்டை வடக்கு, சித்தங்கேணி.

இருவீட்டாரதும் தனிப்பட்ட அழைப்பு

# அடக்குமுறை என்ற பெயரில் மக்களின் சுதந்திரம் பறிப்பு

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.04

நாட்டின் சுதந்திரத்திற்காக 64 ஆண்டுகளுக்கு முன் அந்நிய சக்திகளுடன் போராடி சுதந்திரம் பெறுவதற்கு எமது மக்கள் முன்னின்று பாடுபட்டனர். ஆனால், இன்று அடக்குமுறை என்ற பெயரில் மக்களின் சுதந்திரம் பறிபோயுள்ளது. அனைத்துத் துறைகளிலும் எமக்கு சுதந்திரம் வேண்டும் - என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தனது சுதந்திரதின வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

இவ்வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நாட்டின் சுதந்திரத்திற்காக டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான எமது கட்சியே முன்னின்று உழைத்தது. சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த கட்சி என்ற அடிப்படையில் கிடைத்த சுதந்திரத்தை நிலைத்து நிற்கச் செய்வதற்கும், சர்வதேச நாடுகளிடையே இலங்கையின் நம்பிக்கையை முன்நோக்கிக் கொண்டுசெல்வதற்குமான கடமையும் எமது கட்சியின் வசம் உள்ளது.

64 ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டில் சுதந்திரம் உதயமாகுவதற்காக எமது கட்சி முன்வைத்த கொள்கை வகுப்புக்களில் ஐந்து சுதந்திர அம்சங்கள் தொடர்பான காரணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன. அவை யாவன - ஜனநாயக ஆட்சியின் கீழ் மக்களுக்கு வாழும் சுதந்திரம், வறுமையிலிருந்து சுதந்திரம், வேலையின்மையிலிருந்து சுதந்திரம், அறியாமையிலிருந்து சுதந்திரம் மற்றும் நோய்களிலிருந்து சுதந்திரம் என்பவையே.

இவ்வாறு அனைத்துத் துறைகளிலுமான சுதந்திரத்தை நாட்டில் மீள் நிலைநிறுத்துவதற்கு எமது கட்சி எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி-10)

**பிறீமா நம்ப 01கோழிக் குஞ்சு**

பிறீமா முட்டைக் குஞ்சு (வெள்ளை, சிவப்பு) இறைச்சிக் கோழிக் குஞ்சு. ஒரு குஞ்சு 100/= ஓடர்களை முன் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய

தொலை பேசி இல:
077 9337287 / 077 4164734

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திரு. அ.சா. அரிய குமார் அவர்களின் மைத்துனரும் உட்துறைமுக வீதி, திருகோணமலையில் வசித்த கப்பல் கப்டனுமாகிய

**ஞானநாயகம் ஞானதேவ் பெஞ்சமின்**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்,
பருத்தித்துறை.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் மயில்வாகனம்

**(ஓய்வுபெற்ற Electrical Forman யாழ். மாநகர சபை)**



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மயில்வாகனம் கடந்த (01.02.2012) புதன்கிழமை சிவ பதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னத்தங்கம் தம்பதியரின் ஏக புதல்வனும் மட்டுவில் வடக்கு சந்திர புரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஐயாத்தம்பி - தில்லை நாயகம் தம்பதியரின் மருமகனும் ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் திருக்குமரன் (I.T Consultant. U.K), கலைச்செல்வி (ஆசிரியை - ஜேர்மனி), இந்துமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் தவபாலனின் (ஜேர்மனி) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணைக்குழு பரிந்துரையை ஒரு வாரத்தில் பிரிட்டிஷ் நாடாளுமன்றில் விவாதிக்குக

1

பிரச்சினை பற்றி ஐக்கிய நாடுகள் சபை விசாரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு - இந்தப் பிரச்சினையை மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குக் கொண்டு செல்ல நாம் முயற்சிக்க வேண்டும். இலங்கையின் நடத்தையை மனித உரிமை சபை வெட்கப்படும்படியாக பாராட்டியதுடன் சர்வதேச விசாரணையையும் மறுத்தது.

இலங்கையில் மக்கள் இப்போதும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தீவின் வடபகுதியில் சனத்தொகைப் பரம்பலை மாற்றும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகளும் உள்ளன. இலங்கையில் தனிநபர் மனித உரிமை மீறல்கள் பற்றிக் கடுமையான விசனம் உள்ளது. தமிழ் தரப்பு மட்டுமன்றி சகல எதிர்ப்பாளர்களும் பல வகையில் மிரட்டப்படுகின்றனர். தமக்கு சர்வதேச ஆதரவும், தோழமை யும் அவசியம் என்றும் இதனால் பிரிட்டிஷ் அரசு உரத்து, தெளிவாக, முரண்பாடு இல்லாத வகையில் பல அரங்குகளில் - அதாவது ஐ.நா., மனித உரிமைகள் கவுன்ஸில், பொதுநலவாயம் ஆகியவற்றில் இப்பிரச்சி னையை தொடர்ந்து எழுப்ப வேண்டும் - என்றார் அவர்.

## கெஹலிய, படைத்தளபதிகள் உட்பட அறுவருக்கு நீதிமன்றம் அழைப்பு

1

பேருக்கு கொழும்பு, புதுக்கடை மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கடந்த 9ஆம் திகதி லலித், குகன் இருவரும் காணாமற்போயினர். இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனு, நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

லலித், குகன் ஆகியோர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படும் இடம்தொடர்பாக அரசு எதுவித தகவல்களையும் வெளியிடாததால் சம்பந்தப்பட்ட தரப்பினர் நீதிமன்றில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டுமெனக்கோரியே நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மற்றும் சாவகச்சேரி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டது. இருவரும் காணாமற்போனமைதொடர்பாக விளக்கமளிக்க வேண்டும் எனவும் பணித்துள்ளது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, லலித், குகன் ஆகியோர் காணாமல் போகவில்லை; அவர்கள் இருக்கின்றனர் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கருத்து வெளியிட்டார் என்பதை நீதிமன்றில் சுட்டிக்காட்டிய மூத்த சட்டத்தரணி துவான் ஹேமகே, இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நீதிமன்றில் ஆஜராகி விளக்கமளிக்கவேண்டும் என்றும் கோரினார். (உ-சி)

## இலங்கை விவகாரத்தில் ஐ.நா. பொறுப்புடன் நடக்க வேண்டும்

1

இதனை வலியுறுத்தி ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கும் அதன் உறுப்பு நாடுகளுக்கும் கண்காணிப்பகம் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் மார்ச்சில் நடைபெறவுள்ளது. இலங்கையில்இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு இதுவரை உரிய வகையில் பொறுப்புக் கூறப்படவில்லை என்பதை இந்தக் கூட்டத் தொடரில் உறுப்பு நாடுகள் முக்கிய விவாதமாக்கிக் கொள்ள வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

போர் நிறைவுற்றுக் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் ஆகின்ற நிலையிலும் இலங்கை அரசானது தனது சொந்த மக்களுக்குச் செய்ய வேண்டிய கடப்பாடுகளை நிறைவேற்றவில்லை என்றும், இதனால் ஐ.நா செயலாளர் நாயகமும் மனித உரிமைகள் சபையும் இலங்கை அரசு, போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறத்தக்க வகையில் நம்பகமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் இறுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டமை மற்றும் காயமடைந்தமை தொடர்பாக உரிய வகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தனித்துவமான அமைப்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபை உள்ளது'' என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஐ.நாவுக்கான பதில் பணிப்பாளர் பிலிப்பி டாம் தெரிவித்தார்.

''மனித உரிமை மீறல் சம்பவங்களில் மிக மோசமான அத்தியாயமாக உள்ள இலங்கையின் போர்க் கால மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையானது உரிய வகையில் பதிலளிக்கத் தவறியமையானது, இது உருவாக்கப்பட்ட நோக்கத்தை, அதன் மீதான நம்பகத்தன்மையைக் குழிதோண்டிப் புதைப்பதாக உள்ளது'' எனவும் பதில் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர் மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு அடித்தளமாக அமையும் என இலங்கை அரசு தெரிவித்த நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கையானது, இலங்கை அரச படைகள் செய்த மனித உரிமை மீறல்களை மூடி மறைத்துள்ளதுடன், ஐ.நா நிபுணர் குழுவால் உறுதிப்படுத்தப்பட்ட பல போர்க் குற்றங்களையும் கவனத்திற்கொள்ளத் தவறியுள்ளது எனவும், மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

''நீதி மற்றும் பொறுப்புக் கூறல் என்பன இலங்கை அரசிடம் இருந்து வரப்போவதில்லை என்பது தெளிவாகத் தெரியும் உண்மையாகும். பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களை சர்வதேசம் மட்டுமே வெளிக்கொணரும்'' எனவும் பதில் பணிப்பாளர் டாம் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (உ-த)

## ஐக்கியத்துக்கான நடவடிக்கையை எடுப்பதற்கு இனியும் தயங்கோம்

1

தோறும் வலிமையூட்டிக் கொண் டிருக்கின்றது.

அரசு வெளிச்சக்திகளுக்கு அடிபணியாது, நாட்டினதும் தேசத்தினதும் கரிசனைக்குரிய பிரச்சினைகள் குறித்து சுயாதீனமாக முடிவெடுக்கின்ற சுதந்திரம் எமக்கு இருக்கிறது. எமது தேசம் எம்மிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்திருக்கும் மிக முக்கியமான பொறுப்பு இதுவாகும் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

சமாதானம், நல்லிணக்கம் மற்றும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கான சந்தர்ப்பங்கள் விரிவாக்கப்படுகின்றபோதே நாட்டின் அடைவுகள் பாதுகாக்கப்படுகின்றன.

இந்த நோக்கங்கள் எதிர்காலத்திலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பல்வேறு தியாகங்கள் செய்யப்பட்டுள்ளன. ஒரு சுதேச செயற்றிட்டத்தின் ஊடாக தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் இனியும் தயங்கப்போவதில்லை.

அதீத பொறுமையுடன் நாடு எதிர்நோக்கிய பல்வேறு சவால்களை நாம் வெற்றிகொண்டுள்ளோம். நட்பு ரீதியான தொடர்புகளின் ஊடாக சர்வதேச சமூகத்துடன் பயனுறுதிமிக்க வகையில் பொருளாதார, அரசியல், பாதுகாப்பு, வர்த்தக மற்றும் கலாசாரத் தொடர்புகளைக் கட்டியெழுப்பியுள்ளோம்.

முன்னரை விடவும் நாம் மிகவும் அறிவுபூர்வமாகவும், நாட்டுப்பற்றுடனும் செயற்பட்டு இவற்றைப் பேணிப் பாதுகாக்கவேண்டும். அதேபோன்று நாட்டை அதன் பெறுமான முறைமை களை விருத்திசெய்து முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் ஓர் அமைதியான சூழலில் ஒரு சுபீட்சமான வாழ்க்கைக்கான வழியேற்படும்.

உயர் சுதந்திரத்திற்கான தேசத்தின் சவால்களை வெற்றிகொள்வதற்குத் தமது உயிர்களைக் கொடுத்து உன்னத தியாகம் செய்த எல்லா நாட்டுப் பற்றுடையவர்களுக்கும் தேசத்தின் மதிப்பும் கௌரவமும் என்றும் உரித்தாகும். ஒளிமயமான எதிர்காலத்திற்கு எனது வாழ்த்துகள். - என்றுள்ளது. (உ-சி)

## கணவருக்கு எதிராக இப்படியும் வழக்கு

1

முன்தினம் விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டது.

பிரஸ்தாப பெண் சட்ட உதவிமன்றம் மற்றும் கோப்பாய் பொலிஸார் ஊடாக இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். தனது கணவன், கணவனின் தாய், கணவனின் சகோதரி, வழிப்போக்கர் ஒருவர் மற்றும் கணவனின் நண்பரான மற்றொரு இளைஞர் என ஐந்து பேரின் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தியுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் இந்த வீடியோப் படப்பிடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும் கடந்த புதன்கிழமையே இது தொடர்பான வழக்கு யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் இது தொடர்பான விசாரணை நடைபெற்றது. சந்தேகநபர்கள் சார்பாக சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் முன்னிலையாகி இருந்தார்.

சந்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை முற்றாக மறுத்த எதிராளிகள் தரப்புச் சட்டத்தரணி, அங்கு நடந்த சம்பவம் முற்றிலும் வேறானது. நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்றார். அதனையடுத்து அந்த வழக்கு விளக்கத்துக்காக எதிர்வரும் 14ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஒ-4)

## தீர்வை மறுத்து மமதை காட்டினால் ஆசியாவின் 'அழிவு' ஆகும் இலங்கை

1

- இவ்வாறு எச்சரித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஜெனிவாவில் தமிழ்மக்களின் பிரச்சினைகள் இம்முறை விவாதிக்கப்படலாம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகத் தெரிவித்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடை பெற்று வந்த பேச்சுகள் தெரிவுக் குழு விவகாரத்தால் தடைப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு வுக்கு தமது பிரதிநிதிகளின் பெயர்களைப் பரிந்துரை செய்யும் வரையில் பேச்சைத் தொடரப் போவதில்லை என்று அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளதுடன், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாகவே தீர்வு வழங்கப்படும் என்றும் ஆணித்தரமாக அது இடித்துரைத்துள்ளது.

அரசு இவ்வாறு கூறினாலும், பேச்சில் இணக்கப்பாடு எட்டப் பட்ட பின்னரே தெரிவுக்குழு குறித்து பரிசீலிக்கப்படும் என்று ஆணித்தரமாகத் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ள கூட்டமைப்பு, பேச்சில் எட்டப்படும் இணக்கப்பாட்டைப் பரிசீலிப்பதாகவே தெரிவுக்குழு அமைய வேண்டும் என்றும் அடித்துக் கூறுகிறது.

இவ்வாறானதொரு நிலையில், கூட்டமைப்பின் பேச்சை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டுள்ள அரசு, தெரிவுக்குழு அமைக்கும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றது.

இந்நிலையில், தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்னவென்பது தொடர்பிலும், அது விடயத்தில் சர்வதேசத்தின் கரிசனை எவ்வாறுள்ளது எனவும் கேட்டபோதே கூட்டமைப்பின் பேச்சாளரான சுரேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்னவென்பது தொடர்பாக நாம் இன்னும் பரிசீலிக்கவில்லை. விரைவில் நாம் கூடி ஆராய்வோம். நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் காலப்பகுதியில் இந்த விடயம் தொடர்பாகக் கலந்து ரையாடப்படும்.

தமிழர்கள் இன்று எதிர் நோக்கும் பிரச்சினைகள் உட்பட பல்வேறு விடயங்களை இந்தியா உட்பட சர்வதேச சமூகமும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. எனவே, தமிழர் விவகாரத்தில் சர்வதேசம் கரிசனை கொண்டுள்ளது என்றே நாம் நம்புகின்றோம்.

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், அடக்குமுறை உட்பட தமிழர் தாயகப் பிரதேசங்களில் அரங்கேற்றப்படும் கொடூரங்கள் இன்று சர்வதேச அளவில் பேசப்படுவதுடன், உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளன.

தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சர்வதேசம் வழங்கிய சந்தர்ப்பத்தை இலங்கை அரசு தொடர்ந்தும் தட்டிக்கழித்து காலத்தை கடத்துமானால், உலகில் நிராகரிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை உள்ளடக்கப்பட்டு ஓரங்கட்டப்படலாம்.

இந்நிலை நீடிக்குமானால், முதலீடுகளை மேற்கொள்வதற்கு எவரும் முன்வரமாட்டார்கள். இதனால், பொருளாதார ரீதியான பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடலாம்.

ஜெனிவா மாநாட்டில் சர்வதேசம் தொடுக்கும் கேள்விகளுக்குப் பதிலடி கொடுக்கத் தயார் என இலங்கை அரசு மார்தட்டி வருகின்றது. தொடர்ந்தும் இவ்வாறு பேசிக் கொண்டிருக்க முடியாது. அவ்வாறு செய்யும் பட்சத்தில் சர்வதேச அழுத்தங்கள் குவிந்த வண்ணமிருக்கும்.

ஜெனிவா கூட்டத் தொடரில் இம்முறை தமிழர்களின் பிரச்சினைகள் விவாதிக்கப்படலாம். எனவே, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசு காலத்தை இழுத்தடிக்கும் கைங்கரியத்தைக் கையாண்டால், சர்வதேச அழுத்தங்கள் அதனை வாட்டி வதைக்கும்.

போர் முடிவடைந்து மூன்று வருடங்களானாலும், அரசு இன் னும் போர்வெற்றி மமதையிலேயே உள்ளது. கொடுப்பதை வாங்கிக் கொள்ளுங்கள் என்ற ஆணவப் போக்கிலேயே அது தமிழர்களுடன் நடந்து கொள்கிறது.

ஆணவத்தை ஒருபுறம் தள்ளி விட்டு, தமிழர்களுடன் பேச்சு நடத்தி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு முயற்சிக்காவிட்டால், ஆசியாவின் ஆச்சரிய மிக்க நாடாக அல்ல ஆசியாவின் அழிவுமிக்க நாடாகவே இலங்கை கருதப்படும் - என்று கூறினார் சுரேஷ். (உ-த)

## இராஜதந்திரிகள் 100 பேர் நாளை வருகை

1

யத்துக்கு வருகை தரும் ராஜதந்திரிகள் குழுவை அரசஅதிபர் மற்றும் ஆளுநர் வரவேற்கவுள்ளனர். தொடர்ந்து அரச அதிபர் மற்றும் ஆளுநருடன் இந்தக் குழுவினர் யாழ். பொதுநூலகத்தில் கலந்துரையாடவுள்ளனர்.

அதன் பின்னர் யாழ். மாவட்டத்தில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட இடங்களை நேரடி யாகச் சென்று பார்வையிடவுள்ளனர். அத்துடன் பி.ப. 2.30 மணிக்கு யாழ். ஆயரையும் சந்தித்து கலந்துரையாடுவர். நாளை மாலையே அவர்கள் கொழும்பு திரும்பிவிடுவர். (த-5)

தற்போது விற்பனையில் தரமான மின்பிறப்பாக்கிகள்
(650W - 5KV வரை பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய்)
தற்போது கிளிநொச்சியிலும் யாழ். நகரிலும் தரமான மின்பிறப்பாக்கிகளை குறைந்த விலையிலும் உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ள
Jaffna Electrical
Show Room
135, ஏ-9 வீதி, கிளிநொச்சி.
Tel: 021 228 0008.
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel:021 222 5766,Fax: 021 222 8378


Jaffna Electronic Mart
279, Stanley Road, Jaffna.
Tel:021 222 7657
(ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அபிவிருத்திக்கு சகல இன மக்களின் அர்ப்பணிப்பும் அவசியம்

## சுதந்திரதின வாழ்த்தில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.4

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமாயின், சகல இன மக்களதும் ஒத்துழைப்பு, முயற்சி மற்றும் அர்ப்பணிப்பு என்பன மிகவும் அத்தியாவசியமானவை - என்று பிரதமர் தி.மு.ஜயரத்ன விடுத்துள்ள சுதந்திரதின ஆசிச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையின் 64 ஆவது சுதந்திரதினத்தை நாம் எதிர்கால எதிர்பார்ப்புகள் பலவற்றை உள்ளத்தில் சுமந்தவண்ணம் கொண்டாடுகிறோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தூரநோக்குமிக்க வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தின் கீழ் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற எமது சகோதரத் தமிழ் மக்கள் உட்பட இந்த நாட்டின் அனைத்துப் பொதுமக்களும் அச்சமின்றி வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் யுத்தத்தினால் சீரழிந்துபோன பாதைகள், வீடுகள், கட்டடங்கள், மத வழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றைப் புனரமைத்தல் மற்றும் புதிதாக நிர்மாணித்தல், இடம்பெயர்ந்தோரை மீளக்குடியேற்றல் போன்ற நடவடிக்கைகளில் பெரும்பாலானவற்றை அரசு தற்போது நிறைவேற்றியுள் ளது.

வடக்கு, கிழக்கில் செயலிழந்துபோன பொருளா தாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பல்வேறு திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

முன்னைய அரசுகள் மேற்கொள்வதற்குப் பயந்த பெரும் திட்டங்களான நுரைச்சோலை அனல் மின்நிலையம், மேல்கொத்மலை நீர்மின் நிலையம் மற்றும் ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் போன்ற பல திட்டங்கள் தற்போது செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மஹிந்த சிந்தனை தொலைநோக்கின் பிரகாரம் சுற்றுலாத்துறையை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டு வரும் முகமாக வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்று நாட்டின் பல பிரதேசங்களில் ஓய்வு விடுதிகள், ஹோட்டல்கள் என்பன நிர்மாணிக்கப்படுகின்றன.

தெற்கு அதிவேகப் பாதையின் ஒரு பகுதி பூர்த்திசெய்யப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு திறந்துவிடப்பட்டுள்ளது. மாத்தளை விமான நிலையம், கொழும்பு தெற்குத் துறைமுகம், கொழும்பு - கட்டு நாயக்க அதிவேகப்பாதை போன்ற திட்டங் களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இந்த நாட்டின் விவசாயம், கைத் தொழில், மீன்பிடி மற்றும் சுற்றுலா போன்ற துறைகள் முன்னெப்போதும் இல்லாதவாறு வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளன.

இந்த வருட ஆரம்பத்தில் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிவீதம் 8% ஐ விடவும் அதிகரித்திருப்பதானது நாம் பெருமைப்பட வேண்டிய விடயமாகும். நகர மற்றும் கிரா மிய அபிவிருத்தி உட்பட சகல துறைகளி லும் முன்னேறிவரும் எமது நாட்டை மிகக் குறுகிய காலத்தில் ஆசியாவின் புதுமையாக மாற்றியமைப்பது ஒரு கடினமான விடய மல்ல.

தற்போது நாம் பெற்றுக்கொண்ட வெற் றிகளைத் தொடர்ந்தும் பேணிக்காப்பது மிக முக்கியமாகும். எதிர்காலத்தில் இந்த நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவேண்டுமாயின், சகல இன மக்க ளதும் ஒத்துழைப்பு, முயற்சி மற்றும் அர்ப் பணிப்பு என்பன மிகவும் அத்தியாவ சியமாகும். அதற்காக சகல இனத்தவர்க ளிடையேயும் ஒற்றுமை மற்றும் ஒத்து ழைப்பு என்பன முன்னரை விடவும் பலமிக் கதாக இருத்தல்வேண்டும்.

64ஆவது தேசிய சுதந்திரதினத்தைக் கொண்டாடும் இத்தருணத்தில் பலமிக்க சௌபாக்கியமிக்கதொரு தேசத்தின் மக்களாக மாறும் இலட்சியத்தை நிறைவேற் றும்வகையில் நாம் அனைவரும் சமாதானத் துடனும் சகவாழ்வுடனும் செயற்படுவதற்கு உறுதி பூணுவோம் - என்று அதில் தெரி விக்கப்பட்டுள்ளது.


**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

சனி, ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் - 4.02.2012 (இன்று)

ராஜமாணிக்கம் மண்டபம் அருகில்
அச்சுவேலி காலை 8 - 9

182, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
மாலை 3 - 4

NSB அருகில், கொடிகாமம் வீதி,
நெல்லியடி காலை 9 - 10

இலங்கை வங்கி மேல் மாடி,
சங்கானை மாலை 5 - 6

நகரசபை அருகில் ஸ்ரேசன் வீதி
சாவகச்சேரி
காலை 11.30 - 12.30

ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு
புத்தகம் இலவசம்

முதல் வகுப்புக்கான அனுமதி இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505



Multimedia துறையிலே நீங்களும்
வல்லுனராக விரும்புகின்றீர்களா?
உங்களுக்காகவே விஷேட கலந்துரையாடல்!




வடக்கிலே முதலாவது பிரிவு மாணவர்கள்
வெற்றிகரமாக வெளியேறிய நிலையில்

இந்தியாவிலே திரைப்படத்துறையில்
பணியாற்றிய ஆசிரியரின் நேரடி வழிகாட்டலில்

அனுமதி முற்றிலும்
இலவசம்

நீங்கள்......
- வீடியோ எடிட்டிங் துறையில் வல்லுனராக வேண்டுமா?
- உங்கள் Studio ல் நவீன தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்களா?
- குறும்படம் தயாரிக்கும் ஆர்வம் உள்ளவரா?
- கட்டிட நிர்மாணத்துறையில் 3D Animation Technology ஐ உட்புகுத்த விரும்புகின்றீர்களா?
- நீங்கள் எடுக்கும் வீடியோக்களை நீங்களே சிறந்த முறையில் Edit செய்ய விரும்புகின்றீகளா?
- ஊடகத்துறை சார்ந்த மாணவரா?
- O/L, A/L பரீட்சையின் பின் Multimedia துறையிலே வேலை தேடுபவரா?

நீங்கள் எத்துறை சார்ந்தவராக இருப்பினும் Multimedia துறையிலே உங்கள் திறமைகளை வளர்த்து கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

இடம் : IIS பிரதான மண்டபம்
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவிலுக்கு அருகில்)
காலம் :- 05.02.2012 மாலை 3.00மணி

மேலதிக விபரங்களுக்கு :- 0779688006

பங்குபற்றுங்கள் பயனடையுங்கள்



**வேலை ஆள்கள் தேவை**

தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்யக் கூடிய வர்யகள் உடன் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். (பழக விரும்புபவர்களும் ஏற்கப்படும்)
பல்கலைக்கழகம் முன்பாக- 0212220775, 0778548577



**உடன் விசா**

உத்தரவாதம் உள்ள LEAGAL வீசா
செனகன் வீசா உடனடியாக நீங்கள்
பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புக்கு 0715534361


## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு
26 . 03 . 1947



உதிர்வு
06 . 01 . 2012

### திருச்செந்தூர்நாதன் இராஜேஸ்வரி

இணுவில் கிழக்கு அங்களப்பாயை பிறப்பிடமாகவும் கல்மடு நகர் கோப்பாய் வடக்கு ஆகிய இடங்களில் வசித்து வந்து கடந்த 06.01.2012 அன்று இறைபதமெய்திய எங்கள் அன்புத் தெய் வத்தின் 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 04.02.2012 இன்று கோப்பாய் வடக்கில் உள்ள எமது இல்லத்தில் நடை பெறவுள்ளது. எனவே அனைவரையும் அன்னையின் ஆத்ம சாந் திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கயட்டைப்புலம்,
கோப்பாய் வடக்கு
(கோப்பாய் கருணை இல்லம் அருகில்)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினசபாபதி மகேஸ்வரி

புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி மகேஸ்வரி நேற்று (03.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், இரத்தினமகேசன், இரத்தினசோதி, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தாயும், சுகுந்தா, சாந்தா, முத்துக்குமாரசாமி ஆகியோரின் மாமியும், இராஜ்குமார், விஜிதா, மதிகிருஸ்ணன், சிவகாமி, அபிராமி, ராகவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரதீப்பின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2012) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரதநிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### நடராஜா தங்கராயா

கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும், குப்பிளான் தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தங்கராயா நேற்று (03.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - குணமணி தம்பதியரின் அன்பு மகனும் மற்றும் தேவவதனாவின் அன்புக் கணவரும், தவமணி, சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும், மைதிலி, மயூரி, செந்தில்குமார், ரன்னிதகுமார், செல்வகுமார், சுரேஸ்குமார், றஞ்சித்குமார், றாஜ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், துளசி, நிவாஷினி ஆகியோரின் மாமனும், வினோ, மதிவர்மன், விதுஷனா, டிஸானா ஆகியோரின் பேரனும், தர்மகுலசிங்கம், தியாகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கைதடி, நுணாவில் குச்சப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அற்வெளி முன்ஒழுங்கை,
கைதடி, நுணாவில், சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.



### முத்துச்சாமி ஆனந்தகுமார் (சின்னையா)

தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி ஆனந்தகுமார் நேற்று முன்தினம் 02.02.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சிவலிங்கம் (குகன்), நாகபூரணி (வசந்தி), யோகலிங்கம் (சுரேசன்), கணேசலிங்கம் (கண்ணா- மலேசியா), நாகராஜா (ராசன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரேணுகா, கணேசமூர்த்தி (ரஞ்சன்), சிவாஜினி, விஜயலட்சுமி (மலேசியா), சந்திரலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2012) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி.

தகவல்:
குடும்பத்தினர்.


அனைவரும் கற்கக்கூடிய கட்டணம் MCS இல்

**CIMA-UK**



CIMA-UK நிறுவனத்தின் Approved Listed College

Qualified Lectures panel
CIMA Passing Guarantee
12 Years Experience

MCS USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree

பதிவுகளுக்கு
5.Feb.2012 க்கு முன் நேரில்

Full Course fee Free All Computer Diploma courses, IELTS Diploma in Business English, TOEFL

Supported By UNDP/JRRP

324, Palaly Road, Parameswara Junction

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். SMS Your name & Course to 773395895 & Get Schol.



**விற்பனையாகிறது**

"புகழ்"

தரம் 5 புலமைப்பரிசில் வழிகாட்டி (புதிய பாடத்திட்டத்துக்கு அமைய பகுதி I,II, பாடப்பரப்பை முழுமையாக உள்ளடக்கியது)

இலவச மாதிரி வினாத்தாள், கூப்பன் கருத்தரங்கு விவரம், பரிசுக் கூப்பன் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்- L.விஜேந்திரன்.

விலை - 490/-

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
தொடர்புகளுக்கு- ஸ்ரீலங்கா புத்தகசாலை.
இல. 234, கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம்.
தொ-பே-0212222573



**விக்னா கல்வி நிறுவனம்** 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

A/L DAY CLASS mon to fri

| | |
|---|---|
| Tamகுழந்தை 8-9 | Eco சுதாகரன் 07-08 |
| Log வாகீசன்10-11 | H/C N.T தரன் 9-10 |
| Geo தினேஷ்11-12 | His தாஸ்12-1 |
| P/Sci ஸ்ரீரங்கநாத் Sat, Sun 9-10 | Chri அமலன் 9-10 |
| Drama கஜீதரன்12-01 | ஆரம்பம் 06.02.2012 திங்கள் 7மணி |

A/L 2014 கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.
தூரத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

எப்போது நீ வணங்கத் தொடங்குகிறாயோ அப்போதிலிருந்து நீ வளரவும் தொடங்குகிறாய்.
-ஸ்டார் பீல்டு.

# வார வசந்தம்

01

உதயன் | 04 பெப்ரவரி 2012 | சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு

# இயந்திர வாழ்வை இலகுவாக்க

முன்னொரு காலத்தில் ஒரு குருகுலம் ஒன்று இருந்தது. அதில் ஒரு மாணவர் 10 வருடங்கள் படித்து முடித்தால் அவர் அங்கிருந்து வெளியேறி வேறு குருகுலம் ஆரம்பித்து சுயமாக மாணவருக்குக் கல்வி போதிக்க முடியும்.

அன்று அந்தக் குருகுலத்தில் பத்து வருடங்கள் பயிற்சி முடித்து வெளியேறுவதற்கு ஒரு சிஷ்யர் காத்திருந்தார். கடைசியாகத் தன்னைப் படிப்பித்த குருமாரிடம் ஆசி வேண்டி வெளியேற வேண்டும். குருமார்கள் இருந்த இடத்திற்குச் செல்வதற்கு அவர் புறப்பட்டார். வெளியே மழை பெய்து கொண்டிருந்தது. குடையைப் பிடித்துக் கொண்டு இவர் குருமார்கள் இருந்த இடத்தை அடைந்தார். வெளியில் குடையையும், செருப்பையும் வைத்து விட்டு உள்ளே சென்று தன் குருவை வணங்கி, செல்வதற்கு அனுமதி கேட்டார். குரு சொன்னார், கடைசியாக ஒரு கேள்வி? கேளுங்கள் என்றார் இவர். குரு கேட்டார், 'வெளியில் உமது குடைக்கு எந்தப்பக்கத்தில் செருப்பை வைத்து விட்டு வந்தீர்.' சிஷ்யர் தடுமாறினார். குரு தனது கையைத் தூக்கித் தனக்குப் பின்புறம் காட்டி னார். இப்படிக் காட்டினால் இன்னும் பத்து வருடங்கள் பயிற்சி இருக்கு உள்ளே போ என்று அர்த்தம்.

குருவாக இருப்பவர் சாதாரண விடயத்திலும் விழிப்பாக - கவனமாக இருக்க வேண்டும். கவனமில்லாதவர் குருவாக இருக்க முடி யாது. அதுதான் அந்தக் குருகுலத்தின் கோட்பாடு.

எமது வாழ்க்கை சாதாரண விடயமா? எமக்கு அதில் கவனம் - விழிப்பு இருக்கிறதா? முழுமையாக - நிறைவாக எம்மால் வாழ முடிகின்றதா? இல்லை என்பதுதான் எங்களது விடையாக இருக்கின்றது.

எமது வாழ்க்கை விழிப்புணர்வில்லாமல் இயந்திரத்தனமானதாக வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்றது. உப்புச்சப்பில்லாமல் நிறைவில்லாமல் மாறிக்கொண்டிருக்கின்றது.

இதனால் வாழ்க்கை விழிப்புணர்வுடன் கூடியதாக முழுமையானதாக இருப்பது பற்றி நாம் தற்போது சிந்திக்க வேண்டியிருக்கின் றது.

இப்படி நாம் சிந்திக்கத் தொடங்கும் போது ஆன்மிகத்தை விட்டு எம்மால் சிந்திக்க முடிவ தில்லை. காரணம், நம்மைப் பொறுத்தவரை யில் - கீழைத்தேசத்தைப் பொறுத்தவரையில் வாழ்க்கை என்ற பாதை ஆன்மிகம் என்ற கலவையைச் சேர்த்தே போடப்பட்டிருக்கின்றது. வாழ்க்கை வேறு மதம் வேறு எனப் பிரித்துப்பார்க்க முடியாது.

ஆன்மிகத்தில் மனிதப்பிறப்பு என்பது ஒப்பற்ற ஒன்றாகக் கருதப்பட்டு வருகின்றது. ''கடவுள் மனிதனைத் தன்னுடைய சாயலில் படைத்தார்'' என்றும் ''அவனது பிறப்பின் உயர்வு கருதி அவனைத் தன்னுடைய இரண்டுகைகளாலும் படைத்தார்.'' என்றும். ''அண்டத்தில் உள்ளது இப்பிண்டத்திலும் - இவ்உடலிலும் உள்ளது'' என்றும் கூறுவதன் மூலம் ஆன்மிகமானது மனிதர்களாகிய எங்களது பிறப்பை உயர்வானதாகவும் சிறப்புப் பொருந்தியதாகவும் கருதிவந்திருக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

உனக்கு நீயே விளக்கு - உனக்குள் எல்லா மும் அடங்கியிருக்கின்றது என்ற தத்துவ வார்த்தையையும்நாம் இங்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆனால் எல்லாம் அடங்கிய உயர்ந்த பிறப்பை உடைய எங்களுக்கு வாழ்க்கையை விழிப் புணர்வுடன் அனுபவித்து முழுமையாக வாழத் தெரியவில்லை என்றால் இது சிரிப்பாக இல்லையா,,? விளக்கிருந்தும் அதை எமக்குக் கொளுத்தத் தெரியவில்லை என்றால் அந்த விளக்கை வைத்துக் கொண்டு நாம் என்ன செய்யப்போகின்றோம். ஆனால் நாம் ஏதோ செய்து கொண்டிருக்கின்றோம்.

அதற்குக் காரணம் எங்கள் இதயங்களை இழுத்து மூடிவிட்டு மூளையால் வாழ்வதற்குப் பழகியது தான். மூளைசெய்வது இதயத்திற்கு தெரியாது. இதயம் செய்வது மூளைக்குத் தெரியாது தொடர்பு அறுந்து விட்டநிலை. இங்கே நான் உணர்வு ரீதியான விடயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இதயம் இப்போது காதலர்கள் அம்பு விடுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. நல்ல வேளை அவர்கள் மூளையைக் கீறி அதற்கூடாக அம்புவிட்டு அனுப்புவதற்கு இன்னும் தெண்டிக்கவில்லை. என்றாலும் அன்புக்குப் பதிலாக இங்கு அம்பைத்தானே விடுகின்றோம். அன்புக்கு அம்பு குறியீடாக மாறி விட்டது.

ஏன் இந்த இடைவெளி - வாழ்க்கையில் எங்களுக்கு இரண்டு விருப்பந்தான் இருக்க முடியும். ஒன்று வாழ்க்கையில் வெல்ல வேண்டும் என்ற விருப்பம். மற்றது வாழ்க்கையை வெல்ல வேண்டும் என்ற விருப்பம். இந்த இரண்டிலும் எல்லாம் அடங்கிவிடும். ஆன்மிகம் வாழ்க்கையை வெல்வது பற்றித்தான் பேசுகின்றது என்றாலும், அதன் ஒரு பக்கம் வாழ்கையில் வெற்றி பெற்று வாழ்க்கையை வென்று நிற்பதற்கும் வழிகாட்டுகின்றது. எம்மைப் பொறுத்த வரையில் நாங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்றே விரும்புகின்றோம்.

இந்த எண்ணத்தோடு களம் இறங்கினால் போட்டியாக ஏராளம் பேரைச் சந்திக்க வேண்டி ஏற்படுகின்றது. வேகம் இல்லாவிட்டால் வேலையில்லை. வேகமாக இருந்தால் தான் ஜெயிக்க முடியும். ஓடுவோம், 'நேரமில்லை' என்பது எமது தாரக மந்திரம் ஆகிவிட்டது. எம்மைப்பற்றி யோசிக்க நேரமில்லை. இதில் மற்றவர்களைப் பற்றி எப்படி யோசிப்பது. இதனால் வாழ்க்கையை வெல்லப் புறப்பட்ட எமக்கு வாழ்க்கையே அந்நியமாகி விட்டது. இதயம் உறங்கி விட்டது.

பேசுகின்றோம் வார்த்தையில் ஈரமில்லை. வரட்சி தெரிகின்றது. அதில் எமக்குக் கவன மில்லை. நடக்கின்றோம் நடையில் கவன மில்லை. சாப்பிடுகின்றோம் அதிலும் கவன மில்லை. சிரிப்புக் கூடத் தன்னைச் சுருக்கிக் கழுத்துக்கு மேல் நின்றுவிட்டது. அதைக் கூடக் கவனிப்பதில்லை. உடுப்பதில் கவனமில்லை, குளிப்பதில் கவனமில்லை, வேகமாக இயங்கும் இயந்திரமாகி விட்டோம். ''வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க'' என்று பாடுகின்றோம் அதிலும் கவன மில்லை. மொத்தத்தில் அனுபவிப்பவர் இல்லாமல் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கின்றது. இதனால் எம்மில் பலர் எல்லாம் இருக்கின்றது. ஆனால்..... என்று புலம்புகின்றோம். ஏதோவொரு நிறைவின்மையை உணர்கின் றோம்.

இந்த இடைவெளியை எப்படி நிரப்புவது. நிறைவின்மையில் இருந்து நிறைவை எவ்வாறு அடைவது. அதற்கு ஒரே வழிதான் இருக்கின்றது. என்ன வழி நாம் எல்லோரும் திருடர்களாக மாற வேண்டும். பயப்படாதீர்கள். ஒரு துறவி தன்னிடம் சீடனாக வருபவனை அந்த ஊரில் இருக்கும் கைதேர்ந்த திருடனிடம் அனுப்புவது வழக்கம். காரணம் திருடர்களின் இயல்பு ஞானமடைபவனுக்கு இருக்க வேண்டுமாம். என்ன இயல்பு அது. விழித்திருத்தல், எப்போதும் எச்சரிக்கையாக இருத்தல், அச்சமில்லாமல் இருத்தல், சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு சமயோசிதமாக நடந்து கொள்ளுதல், எது எங்கே இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளுதல் இவை அவர்களுக்கு மட்டுமல்ல வாழ்க்கையில் முன்னேற விரும்புகின்ற எங்களுக்கும் முக்கியம்.



கடற்கரையில் கிரேக்க ஞானி டயோஜீனஸ் காலைச் சூரிய ஒளிபடும்படியாக படுத்திருந்தார். அலெக்ஸாண்டர் வந்து அவர் முன் நின்று ''நான் அலெக்ஸாண்டர் வந்தி ருக்கிறேன் உங்களுக்கு என்ன வேணும் கேளுங்கள் தருகிறேன்'' என்றார். அவர் ''சற்று நீங்கள் விலத்தி நில்லுங்கள் அந்தச் சூரிய ஒளி என்னில் படட்டும்'' என்றார். நாங்கள் என் றால் துள்ளி எழுந்திருப்போம் அதையிதைக் கேட்டு நாங்கள் நினைத்துச் சென்ற சூரியக் குளியலை இழந்திருப்போம். எனவே நாங்கள் எங்களுடைய நேரத்தை ஒழுங்காக வரை யறுத்துக் கொண்டு திட்டமிட்ட கருமத்தை அந்த வரையறைக்குள் நின்று கவனத்துடன் - விழிப்புடன் நிறைவாகச் செய்யப் பழக வேண்டும்.

சின்னச் சின்னக் காரியங்களையும் கவனத்துடன் - விழிப்புடன் செய்வோம். உணவை உண்ணும் போது முழுமையாக மென்று முழுமையாக ருசித்துச் சாப்பிடுவோம். ரொட்டி என்றால் அதன் வாசனையை முகர்ந்து பாருங்கள். நன்றாக மென்று விழுங் குங்கள். நடக்கிறீர்களா நடக்கும் போது பாதங் களில் ஒன்றை முன்னோக்கி வைக்கிறபோது கவனியுங்கள். பாதம் மண்ணைத் தொடுகிறது மண்ணின் ஸ்பரிசத்தை உணருங்கள். சிரிக்கின்றீர்களா நன்றாகச் சிரியுங்கள் அடிவயிறு குலுங்கச் சிரியுங்கள்.

ஹோட்டே என்ற ஞானி அவருக்கு வேலை சந்தை ஒன்றில் போய் நின்று வயிறு குலுங் கச் சிரிப்பது. அதைப் பார்த்து மக்கள் சிரிப் பார்கள். அவரிடம் ஏதாவது கேட்டால் சிரிப் புத்தான் பதில்.

தோட்ட வேலையா, சைக்கிளில் பிரயாணமா, வயல் வேலையா, தையல் வேலையா எந்த வேலையாக இருந்தாலும் கவனத் துடன் அனுபவித்துச் செய்யுங்கள். எதையும் அனுபவிப்பவராக நாம் இருக்க வேண்டும். அது எங்களுடைய மதிநுட்பத்தை வளர்க் கும். உணர்ச்சித் துடிப்புள்ளவராக எங்களை வைத்திருக்கும். அதில் தான் முழுமையிருக்கி றது.

ஒரு துறவி தனது சிஷ்யர்களிடம் கேட்டார் ஒரு மனிதனின் வாழ்நாள் எவ்வளவு காலம்?

சிஷ்யர்கள் சொன்னார்கள் அறுபதாண்டு, எழுபதாண்டு என்று எல்லாவற்றையும் அவர் மறுத்தார்.

அப்படியானால் விடை - ஒரே ஒரு மூச்சு என்றார் துறவி

வெறும் மூச்சுவிடும் நேரம் தானா என்றார்கள் சிஷ்யர்கள்

அப்படியல்ல வாழ்வு ஒரு கணமன்று. ஆனால் ஒவ்வொரு கணமாக வாழவேண்டும். ஒவ்வொரு கணப்பொழுதிலும் முழுமையாக வாழவேண்டும்.

சிலர் நேற்றில் வாழ்கிறார்கள். நேற்றைய நினைவில் மூழ்கி இறந்த காலத்தில் வாழ்கின்றார்கள்.

சிலர் அறியப்படாத எதிர்காலத் தில் வாழ்கின்றார்கள். எதிர்காலக் கனவில் வாழ்கின்றார்கள். இவ்வாறு வாழப்பழகிக் கொண்ட வர்கள் நிகழ்காலத்தை இழந்து விடுகின்றார் கள் என்றார் துறவி.

எனவே நாமும் நிகழ்காலத்தில் இருப்பதற்கும் நிறைவாக வாழ்வதற்கும் முயற்சிப்போமாக. அது எமது உள்ளத்தை உன்னத மாக்கி வாழ்வை வளப்படுத்தும். இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

நா.நவராஜ்
உளவளத்துணையாளர்
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (24)

**சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விபரங்கள் மேலும் தொடர்கின்றன.**

சுக்கிர ஆதிக்க எழுத்துக்களின் குணாதிசயங்கள்

U--- பெயரின் ஆரம்பத்திலும், இறுதியிலும் வந்தால் ஆன்மிக வாழ்க்கையும், உலக போகங்களும் இருபுறமிழுக்கும். தான் கற்ற விசயங்களை வாழ்க்கையில் உபயோகப்படுத்துவார்கள். தூய்மையான எண்ணமுடையவர்கள். ஆன்மிகத்தில் ஈடுபட்டு அளவு கடந்த சாதனைகள் செய்வார்கள். ஒரு முறைக்குப் பலமுறை யோசித்தே எந்தவொரு காரியத்தையும் செய்வார்கள். உழைப்பால் உயர்வார்கள். இவர்களிடம் செல்வம் குடிகொள்ளும். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்.

V--- அறிவைப் பொருளாக்கும் திறமைசாலிகள். தெய்விக விசயங்களில் தீவிரமான ஆர்வமிருக்கும். சுறுசுறுப்பு, திடமான நம்பிக்கை, ஆழ்ந்த நட்பு, சுயம் மாறாத தன்மை உண்டாகும். வாழ்வின் உன்னத நிலையை அடைவார்கள். தூய்மையான எண்ணமும், சுயமாக சிந்தித்துச் செயல்படும் ஆற்றலும் இருக்கும். நிறைய நண்பர்கள் இருப்பார்கள். பிறவியிலேயே நல்ல பண்புகளைப் பெற்றிருப்பார்கள். தன்னம்பிக்கையும், பிறர் நலன் பேணும் குணமுமிருக்கும். எதிலும் சாதனையும், நல்ல பெயரும், புகழும் இருக்கும்.

W--- வருமுன் காத்துக் கொள்வார்கள். விவேக மிக்கவர்கள். சுயமுயற்சியால் முன்னேறுவார்கள். முன்னேற்றத்தில் தீவிர ஆர்வமுடையவர்கள். பெரும் போராட்டத்துக்குப் பின்னர் வாழ்க்கையில் சிறப்படைவார்கள். எல்லோரிடமும் அன்பாகப் பழகுவார்கள்.

### பிறப்பு எண் 6 விதி எண் 1

சுக்கிரன் சூரியன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் அனைவரையும் பிரமிக்கச் செய்யும் பேராற்றலுடன் விளங்குவார்கள். கலைகளின் பிறப்பிடமாகத் திகழ்வார்கள். முயற்சியால் முன்னுக்கு வரத் துடிப்பார்கள். எவ்வளவு பிரச்சனைகள் வந்தாலும் அலட்டிக்கொள்ள மாட்டார்கள். சமாளிக்கும் திறனிருக்கும். மிகவும் நல்ல உள்ளமுடையவர்கள். உலக இன்பங்களை அனுபவிக்கவென்றே பிறந்தவர்கள். அயராத உழைப்பாலும், முயற்சியாலும் எதிலும் வெற்றி பெறுவார்கள். செல்வம், புகழ், கௌரவம் இவர்கள் வாழ்வில் என்றென்றும் கூடிக்கொண்டேயிருக்கும். இவர்கள் அதிர்ஷ்ட தேவதையின் அருளைப் பெற்றவர்கள். சுகபோகம் நிறைந்த வாழ்க்கை வாழ்வார்கள். பிறருக்குக் கட்டுப்பட்டு நடக்கமாட்டார்கள். எதிலும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வார்கள். எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்க விரும்புவார்கள். எதையும் சாதிக்கும் எண்ணமுடையவர்கள். காதல் வலையில் எளிதில் விழுவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1, 10, 19, 28, 6, 15, 24

அதிர்ஷ்ட நிறங்கள்
மஞ்சள், வெளிர்நீலம், சந்தனம், பச்சை, வெளிர் பச்சை



**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**
வைரம், ஓபல், அக்கோமரின், மரகதம், பெரில், சூரியகாந்தக்கல், டர்க்குவாஸ், ஜேட், டெரிடாட்

### பிறப்பு எண் 6 விதி எண் 2

சுக்கிரன் சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கருணை உள்ளமும், இரக்க சுபாவமும் உள்ளவர்கள்.

எதிலும் முன்னெச்சரிக்கை உடையவர்கள். பொது வாழ்வில் நாட்டம் இருக்கும். சமாதானப் பிரியர்கள். புகழை விரும்புவார்கள். பிடிவாதம் இருந்தாலும் இளகிய மனமுடையவர்கள். எடுத்த முயற்சியிலிருந்து பின்வாங்கவே மாட்டார்கள். முன்வைத்த காலைப் பின் வைக்க மாட்டார்கள். புகழுக்காகவும், சுயகௌரவத்திற்காகவும் நிறையச் செலவுகள் செய்வார்கள். மிகவும் கடினமாக உழைக்கக் கூடியவர்கள். தன்மீது அன்பு கொண்டவர்களுக்கு எவ்வளவு வேண்டு மானாலும் செலவு செய்வார்கள். நல்ல வாழ்க்கைத் துணை அமையும். குருபக்தி அதிகம் உடையவர்கள். தீவிரமான உழைப்பாளிகள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1, 10, 19, 28, 6, 15, 24, 7, 16, 25

**அதிர்ஷ்ட நிறங்கள்**
வெளிர்நீலம், பச்சை, வெளிர் பச்சை, வெள்ளை

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**
முத்து, மரகதம், சந்திரகாந்தக் கல், அக்கோமரின், டெரிடாட், பெரில், டைகர்ஸ் ஐ, ஜேட்.

### பிறப்பு எண் 6 விதி எண் 3

சுக்கிரன் குரு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் ஏதாவது ஒரு பிரச்சினைவாதியாகவே வாழ்கின்றனர். தீர்க்கமான யோசனை செய்யக் கூடிய மனிதர்கள்.

குருபக்தி, இறைபக்தி மிக்கவர்கள். ஒருவித மனப்பயமிருக்கும். செய்தொழிலில் நிகரற்ற லாபம் ஈட்டக் கூடிய நபர்கள்.

மனதுக்குப் பிடித்தவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர்கள் மீது அன்பு, கருணை, இரக்கம் காட்டுவார்கள்.

கலைசார்ந்த தொழிலை நிரந்தரமாகக் கொள்வார்கள்.ஒருபோதும் உணவு, உடை உறைவிடத்துக்குக் குறைவராது. கடினமாக உழைப்பார்கள். நாணயம் மிக்கவர்கள். படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறுவார்கள். தியாக மனப்பான்மை உடையவர்கள். பதவிக்காகப் பேராசைப்பட மாட்டார்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1,10,19,28,9,18,27,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**
வெளிர்நீலம்,வெள்ளை, பச்சை, நீலம்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**
மரகதம், மஞ்சள் புஷ்பராகம், தங்கபுஷ்பராகம், எமிதிஸ்ட், ஒபல், அக்கோமரின், பெரில், டெரிடாட்.

### பிறப்பு எண் 6 விதி எண்4

சுக்கிரன் இராகு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கலை அறிவு நிரம்பியவர்கள். சுதந்திரப் பிரியர்கள், பிறரைக் கவரும் பேச்சும், எழுத்தும் இருக்கும். தைரிய சாலிகள். தன்னம்பிக்கை அதிகம் உடையவர்கள். ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யும் சாமர்த்தியசாலிகள்.

இவர்களின் பேச்சில் வசீகரமிருக்கும். கற்பனை வளமிக்கவர்கள். பலருக்கு உதவும் மனப்பான்மை உடையவர்கள். எதிலும் நிதானத்துடன் செயற்படுவார்கள். மற்ற வர்களின் துயர்துடைக்க அரும்பாடுபடுவார்கள். காதல் நிறைந்த வாழ்க்கை வாழ்வார்கள்.

அரசியல், சட்டம் போன்றவற்றில் அதிக ஆர்வம் இருக்கும். ஆண், பெண் இருபாலாருக்கும் நட்பு சிறப்பாக இருக்கும். பலருக்கும் வழிகாட்டியாக விளங்குவார்கள்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1,10,19,28,6,15,24


**அதிர்ஷ்ட நிறங்கள்**
வெளிர்நீலம், மஞ்சள், பொன்னிறம், பச்சை

**அதிர்ஷ்ட நட்சத்திரங்கள்**
கோமேதகம், நீலக்கல், மரகதம், அக்கோமரின்.

(தொடரும்)

# காதல் காலங்கள்

நிஷாவதி



எண்ணிப் பார்க்க முடியாத இனந் தெரியாத இரு ஜீவனின் துடிப்பு. இனங்காண முடியாத பரிவு, பாசம், நேசம் எல்லாமே சொட்டிச் சொட்டி முட்டி மோதுவதுதான் காதல்.

நான் என்னை எண்ணிய நாள்களை விட உன்னை எண்ணி உனக்காகவே வாழ்ந்து உயிரை உறைய வைத்த நாள்கள்தான் காதல் காலங்கள்.

உள்ளுக்குள் இருக்கும் உன் நினைவுகள் ஒரு கணமல்ல ஒவ்வொரு கணமும் சிரிப்பை மூட்டும். காற்றில் மிதக்கும் இதயம். கால்கள் சக்கரம் பூட்டிச் சுற்றிவரும். இனம் புரியாத சந்தோசம் உள்ளூர ஓடும். இரத்தம் சொட்டுச் சொட்டாக இல்லை ஆறாகவே ஓடும் உடல் முழுவதும்.

உணர்வுகளால் கட்டி எழுப்பப்பட்ட உயிருள்ள பஞ்சு மிட்டாய்தான் காதல். தொட்டாலும் கசங்கிவிடும் சுவைத்தாலும் கரைந்து விடும்.

இந்தளவுக்கு மென்மையான பஞ்சுமிட்டாயைக் கையாள முடியாது போய்விட்டால் அவ்வளவுதான். அதனை மீட்டுவிட முடியாது.

அன்பால் அரவணைத்து பாசமெத்தையில் தூங்க வைக்கப்பட வேண்டியது. உள்ளுக்குள்ளேயே உறங்கி விட்டால் உன்னைவிட்டு வெகுதூரம் சென்றுவிடும். உதடுகள் திறந்தால் வெகு சீக்கிரமே கட்டு அணைந்துவிடும். உன்னருகே இருப்பவை உனக்கு இடையூறு பண்ணும். தனிமையைத் துணையாகத் தேடும் உன் மனம்.

கடிகார முட்கள் அசையாது. கண்ணாடி கூட உனைப் பார்த்துச் சிரிக்கும். உன் வீட்டு முற்றத்து ரோஜா உன்னையே பார்ப்பது போல் உணர்வு தோன்றும்.

ஒவ்வொருவரது கண்களிலும் இறங்கி இதயத்தில் போய் உறையும் காதல். ஒதுக்கி விடவும் முடியாது விலக்கி வைக்கவும் ஏலாது.

சொல்லாத கணத்தில் எண்ணாத நிமிடத்தில் ஓடோடி வந்து உணர்வுகளைச் சீண்டி மூழ் கடித்துவிடும்.

காதல் என்றால், காதலிக்காதவர்கள் இல்லை. காதலுக்கு அடிமையாகாது இருந்து விட்டால் அவன் ஞானிதான்.

காதல் இல்லாத உலகம் காற்று இல்லாத பூமி போன்றது. பூமியில் என்று காற்று இல்லாது போகின்றதோ அன்றுதான் காதலும் இல்லாது போகும்.

அதுவரை உயிரோடு உறைந்து உணர்வைக் குடைந்து உச்சக்கட்ட இன்பங் கொடுக்கும். உன்னதங்களும் அற்புதங்களும் நிறைந்ததுதான் காதல்.

இந்த நாள்கள் உண்மையிலேயே மனிதனுக்கு ஒரு கொடைதான். இந்த நாள்களில் இந்த நாள்களுக்காக வாழாதவர்கள் இருக்க முடியாது. இனியும் இருந்து விடாதீர்கள்.

உண்மைக் காதல் மௌனமொழியில் தான் ஆயிரம் கதைகள் பேசும். காதல் மொழிகள் காதலர்களுக்கு மட்டுமே வெளிச்சம். காதல் நாள்களும் அவர்களுக்கே சொந்தம்.




நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக விழாவின் போது புவனேஸ்வரி அம்பாள் கலையரங்கில் நாகாம்பிகை அந்தாதி நூல், அலையோசையும் அருளோசையும் இறுவட்டு வெளியீடு ஆகியன இடம்பெற்றன. நிகழ்வில் நூலாசிரியர் குலசிங்கம், இறுவெட்டு வெளியீட்டாளர் த.பாலமுருகன் ஆகியோரிடமிருந்து சி.ஜெகநாதன் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொள்கிறார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் வெட்டியும் தங்க ஊசியும்...





மரம்வெட்டி ஒருவர் அவர் பக்கத்தில் இருக்கும் காடுகளுக்குச் சென்று மரங்களை வெட்டித் தன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் பக்கத்திலிருக்கும் காட்டுக்கு மரம் வெட்டச் சென்றார். அந்தக் காட்டில் இருக்கும் பூஞ்ச மரம் அருகே சென்றார் மரம்வெட்டி. இதைப் பார்த்த பூஞ்ச மரம் ''எனக்கு மிகவும் சின்ன வயசு. ஆகவே என்னை நீங்கள் வெட்ட வேண்டாம். அப்படி என்னை வெட்டிவிட்டால் எனது குழந்தைகள் அனாதைகள் ஆகிவிடுவார்கள்'' என்றது. இதைக் கேட்ட மரம்வெட்டி சரி என்று சொல்லி அந்த இடத்தைவிட்டு அகன்று சென்றார். சிறிது தூரம் சென்ற பிறகு ஓக் மரம் ஒன்றைப் பார்த்தார். கையில் கோடரியுடன் தன்னை நோக்கி மரம்வெட்டி வருவதைப் பார்த்த ஓக் மரம், ''தயவுசெய்து என்னை வெட்டி விடாதீர்கள். நான் இப்போதுதான் காய் வைத்திருக்கிறேன். இந்தக் காய்கள் பழுத்து, கீழே விழுந்து புதிய மரம் வளர வேண்டும். நீங்கள் என்னை வெட்டிவிட்டால் புதிய மரங்கள் இந்தக் காட்டில் வளராது. ஆகவே, என்னை வெட்டிவிடாதீர்கள்'' என்று கெஞ்சியது. இதற்கும் அந்த மனிதர் தலையை ஆட்டியபடி அடுத்த மரத்தை நோக்கிச் சென்றார்.



காட்டு மரமான ஆஷ் குளிர் பிரதேசங்களில் மட்டுமே வளரக்கூடியது. அந்த மரத்தை வெட்டுவதற்காக அதனருகே சென்றார் அவர். அவரைப் பார்த்த ஆஷ் மரம், ''நேற்று என் மனைவிக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. அவளுக்கு என்னைவிட்டால் வேறு யாரும் இல்லை. ஆகவே நீங்கள் பெரிய மனசு வைத்து என்னை விட்டுவிடுங்கள்'' என்றது. அடுத்ததாக ஐந்துகூர் இலைகளைக் கொண்ட மரம் ஒன்று இருந்தது. அதனருகே சென்றபோது, அந்த மரம், ''எனக்குச் சின்னச் சின்ன கிளைகள் இருக்கின்றன. அவற்றிற்கு பாலூட்டிக் கொண்டிருக்கிறேன். அவர்களை வளர்த்துப் பெரியவர்களாக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கின்றது. அந்தக் கடமை முடிந்தபிறகு நீங்கள் என்னை வெட்டிக் கொள்ளலாம். அதுவரை என்னை விட்டு விடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டது. இதற்கும் சரியென்று சொல்லிவிட்டு, யோசித்தபடியே செர்ரி மரத்தை நோக்கிச் சென்றார் அந்த இரக்கமுள்ள மனிதர். அவரைப் பார்த்தவுடன் செர்ரி மரம், ''இங்குள்ள பறவைகள் எல்லாம் என்மீது உட்கார்ந்து பழங்களைச் சாப்பிட்டுவிட்டு, பாட்டுப்பாடி மகிழ்கின்றன. நீங்கள் என்னை வெட்டிவிட்டால் அவற்றுக்கு உணவும் கிடைக்காது, நீங்களும் அந்தப் பாட்டைக் கேட்க முடியாது'' என்றது.


(தொடரும்)

# உலகில் இடம்பெற்ற பெரிய விபத்துக்கள்

## டைட்டானிக் கப்பல் விபத்து




உலகின் மிகப் பிரமாண்டமான சொகுசுக் கப்பலாகக் கருதப்பட்ட டைட்டானிக் 1912 ஆம் ஆண்டு தனது வெள்ளோட்டத்திலேயே பனிப்பாறையுடன் மோதிக் கடலுடன் சங்கமமாகியது. 1500 பயணிகளை பலியெடுத்தது எனவும் கூறப்படுகிறது.



## செலன்ஜர் விண் விபத்து

அமெரிக்காவினால் 1986 ஆம் ஆண்டு ஏவப்பட்ட செலன்ஜர் விண்கலம் விண்ணில் 73 விநாடிகளில் வெடித்துச் சிதறியது.


## மெட்ரோ லிங்க் விபத்து




அமெரிக்காவின் கலிபோர்னியாவில் 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 12 இல் லொஸ் ஏன்ஜலிஸ் தொடரூந்து நிலையத்தில் எதிரும் புதிருமாக இரண்டு தொடரூந்துகள் மோதிக் கொண்டன. இதில் 15 பேர் பலியாகினர்.

## வீல்ட்ஹால் விபத்து

ஜேர்மனியில் 2004 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி வீல்ட்ஹால் பாலத்தின் மீது 32000 லீற்றர் எரிபொருள் கொண்டு சென்ற எரிபொருள் தாங்கி காருடன் மோதி 90 அடி உயரமான பாலத்திலிருந்து கீழே ஓட்டோ என்றழைக்கப்படும் பிரதான பாதையில் வீழ்ந்து எரிபொருள் தாங்கி தீப்பிடித்து எரிந்தது. அந்த வெப்பம் தாங்க முடியாமல் பாலம் வெடித்தது.





## B-2 பொம்பர்கள் விபத்து


குவாவில் உள்ள அமெரிக்க விமானப்படைத்தளத்தில் இருந்து மேலெழுந்த அமெரிக்க விமானப் படையின் B-2 குண்டு வீச்சு விமானம் சமிக்ஞை கோளாறு காரணமாக தலை குப்புறமாக வீழ்ந்தது.

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.



நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளி கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இதில் முன்பள்ளி மாணவர்கள் குழு நடனம், காவடி ஆட்டம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

# பாடசாலைச் சமூகமும் நாமும்



மாணவர்களாகிய நாம் எமது பாடசாலையோடு அதிகளவு தொடர்பு கொண்டுள்ளோம். எமது பாடசாலைச் சமூகம் பரந்து பட்டதாக காணப்படுகின்றது.

அதிபர், பிரதி அதிபர்கள், உபஅதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள், மாணவர்கள் எனப் பலர் காணப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் பாடசாலையின் வளர்ச்சிக்காக சேவை வழங்குகின்றனர்.

பாடசாலையின் பாரம்பரியத்தையும் பெருமையையும் பேணும் பொறுப்பு மாணவர்களுக்குரியதாகும். மாணவர்களாகிய நாம் பாடசாலைச் சட்ட திட்டங்களையும், பாடசாலையில் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றியும் அறிந்திருப்பது நல்லது.

பாடசாலையின் சின்னங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டியது அவசியமானதாகும். முக்கியமாகக் கழுத்துப் பட்டி, காலுறை, பாடசாலைச் சின்னம் என்பவற்றுக்கு முதலிடம் கொடுக்கும் போது எமது பாடசாலையில் உள்ளப்பற்று மென்மேலும் வளர்வடையும். பாடசாலைக்கொடி, பாடசாலைக் கீதம் என்பவற்றுக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும்.

பாடசாலைக்கீதம் பாடும் போது அமைதியாக நிற்க வேண்டும். பாடசாலைக் கீதம் பாடத் தொடங்கினால் நிச்சயம் அதை பாடி முடிக்க வேண்டும். பாடசாலைக்கீதம் பாடும் போது சரியான மெய் நிலையை கடைப்பிடிக்க வேண்டும். பாடசாலைக் கொடி ஏற்றும் போது அதற்கு தகுந்த மரியாதை கொடுக்க வேண்டும்.

காலை பாடசாலைக்கு வந்ததும் நாம் காணும் அதிபர், ஆசிரியர்களுக்கு காலை வணக்கம் செலுத்துதல் சிறந்த பண்பாகும்.

அத்துடன் எமது பாடசாலைக்கு வரும் விருந்தினர்களுக்கும் வணக்கம் செலுத்தி உரிய மரியாதை செலுத்த வேண்டும். இவ்வாறு செய்வதன் ஊடாக ஆசிரியர், மாணவர்களுக்கிடையேயான தொடர்பை சிறந்த முறையில் பேணலாம்.

பாடசாலைச் சூழலை சுத்தமாக பேணவேண்டியது மாணவர்களது முக்கிய பொறுப்பாகும்.

பாடசாலைச் சூழலை சுத்தமாக பேணுவதால் மாணவர்களுடைய கல்விச் செயற்பாடுகளையும் இணைப் பாடவிதான செயற்பாடுகளையும் அதிகரிக்கலாம்.

ச.மதுசா
யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடநம்பிக்கை



ஆண்டவன் மீதும் சாஸ்திரங்கள் மீதும் நாம் வைக்கும் நம்பிக்கையே 'மூட நம்பிக்கை' என்று சொல் லும் பகுத்தறிவாளர்கள் இருக்கிறார்கள்.

அவர்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் 'கெட்டிக் காரத்தனம்' என்றும் எம்முடைய நம்பிக்கைகள் மட்டும் 'மூடத்தனம்' என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

நான் சொல்கிறேன், நம்பிக்கையில் மூடநம்பிக்கை, குருட்டு நம்பிக்கை, கெட்டிக்கார நம்பிக்கை என்று எதுவும் கிடையாது. சொல்லப்போனால் நம்பிக்கை என்பதே ஒரு மூடத்தனம். அதிலே தனியாக ஒரு மூடநம்பிக்கை ஏது?

நாட்டு மக்கள் எல்லாரையுமே நாத்திகர்களாக ஆக்கிவிட முடியும் என்று நம்பித்தான் பெரியார் பிரசாரம் செய்தார்; அந்த நம்பிக்கை எப்படி முடிந்தது? திராவிட நாடு கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் அந்தக் காலத்தில் பலர் தி.மு.க.வில் சேர்ந்தார்கள்; அதன் கதி என்ன?

தனுஷ்கோடி எக்ஸ்பிரஸில் போனவர்கள், ஊர் போய்ச் சேரலாம் என்ற நம்பிக்கையில்தான் போனார்கள்.

அந்த நம்பிக்கை மூடத்தனம் என்பதை அரியலூர் நிரூபித்தது.

நம்பிக்கை என்பது, இப்படி நடக்கும் என்று ஆசைப்படுவது. அப்படி நடக்காமலும் போய்விடலாம்; அப்போது அது மூடத்தனமாகி விடுகிறது.

மகன் கல்லூரிக்குப் பணம் கட்டப் போகிறான் என்று நம்பித்தான் தகப்பன் பணம் அனுப்புகிறான்; அவன் அதை எப்படியும் செலவழிக்கலாம்.

அழகான ஹோட்டல்; அருமையான சாப்பாடு ஆரோக்கியமான முறையில் சமைக்கப்பட்டிருக்கும் என்று நம்பித்தான் சாப்பிடுகிறோம். சமையற்கூடத்தில் என்ன என்ன நடந்திருக்குமோ யார் கண்டது?

'இவர் நமது ஒழுங்கான பிரதிநிதியாக இருப்பார்' என்று நம்பித்தான் மக்கள் ஒருவருக்கு வாக்களிக்கிறார்கள்; அவர் எப்படியெப்படியோ மாறிவிடுகிறார்!

நம்பிக்கை வெற்றி பெறும்போது மட்டுமே கெட்டிக்காரத்தனம் போல் காட்சி அளிக்கிறது; ஏனைய நேரங்கள் அனைத்திலும் அது மூடத்தனம்தான்!

ஆண்டவனை நம்புவதிலும் அதே நிலைதான்.

அது தோல்வியுற்றால் மூடத்தனம்; வெற்றிபெற்றால் கெட்டிக் காரத்தனம்.

ஆகவே, நம்பிக்கை என்ற மூடத்தனம் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு.

அதில் ஆஸ்திகன் மட்டுமென்ன தனி ஜாதி!

இதுவரை எந்த நம்பிக்கை எல்லா நேரங்களிலும் பலித்திருக் கிறது? ஆனால், நம்பிக்கை என்ற மூடத்தனத்தை ஏன் எல்லாருமே மேற்கொள்கிறார்கள்?

அதிலே மனத்துக்கு ஒரு சாந்தி.

தெய்வ நம்பிக்கை நிம்மதிக்கும், மகிழ்ச்சிக்குமாகவே ஏற்பட்டது.

விஞ்ஞான நம்பிக்கையைப் போல் ஒரு கட்டத்தில் தோல்வியுற் றாலும், மறு கட்டத்தில் வெற்றி பெறுவதுதான் தெய்வநம்பிக்கை.

'ஒரு சூத்திரதாரியின் கைப் பொம்மைகள் நாம்' என்பது மறக்க முடியாதது.

மரணம் என்ற ஒன்று, அதைத் தினசரி வலியுறுத்துகிறது.

இவ்வளவுக்குப் பிறகும், தெய்வ நம்பிக்கையைச் சிலர் மூடநம்பிக்கை என்று சொல்வார்களானால், 'நான் ஒரு மூடன்' என்று சொல்லிக் கொள்வதிலே பெருமைப்படுகிறேன்.

முட்டாள்த்தனத்தில் இருக்கிற நிம்மதி, கெட்டிக்காரத்தனத்தில் இல்லை.

உடம்பிலோ எல்லா நோயும் இருந்தும், 'ஒன்றுமே இல்லை' என்று நம்புகிற முட்டாள் ஆரோக்கியமாகவே இருக்கிறான்.

ஒரு நோயும் இல்லாமலேயே ஒவ்வொரு மயிர்க்காலையும் பார்த்து, 'இது அதுவாக இருக்குமோ? என்று ஆராய்ச்சி செய்கிற அறிவாளி, நித்திய நோயாளியாகச் சாகிறான்.

'சுடு' என்று சொன்னவுடனேயே யாரைச் சுடுகிறோம் என்று பார்க்காமலே சுடுகின்ற படைகள் தான் நாட்டுக்கு வெற்றி தேடித் தந்திருக்கின்றன.



அந்த நேரத்தில் படைகள் பகுத்தறிவை உபயோகிக்கத் தொடங்கினால், பகுத்தறிவு மிஞ்சும்; நாடு மிஞ்சாது.

போரில் தயக்கம் காட்டிய அர்ஜுனனைப் பார்த்துக் கண்ணன் அதைத்தான் சொன்னான்.

'போர் என்று வந்த பின் உறவினர்கள் என்ற ஆராய்ச்சி வெற்றிக்கு உதவாது' என்றான்.

கடைசியில் கண்ணன் மீது மூடநம்பிக்கை வைத்து அர்ஜுனன் காண்டீபத்தைத் தூக்கினான்; முடிவு வெற்றியாகக் கனிந்தது.

கீதையில் கர்மயோகம் மானிடக் கடமைகளை வலியு றுத்துகிறது. பக்தியோகம், தியானத்தை வலியுறுத்துகிறது.

கடமையும் நம்பிக்கையுடன் தான் நடைபெறுகிறது; தியானமும் நம்பிக்கையுடன் தான் நடைபெறுகிறது.

'மனம் உண்டானால் வழி உண்டு' என்பது பெரியார் வாக்கு.

அது மானிட தர்மத்துக்கும் பொருந்தும்; தியான தர்மத்துக்கும் பொருந்தும்.

ஆகவே, தெய்வ நம்பிக்கையை மூட நம்பிக்கை என்று சொல்வதைப் பற்றி நான் வருந்தவில்லை.

''இந்த மூடனும், அந்த அறிவாளியும் நம்மிடம்தான் வரப் போகிறார்கள்'' என்ற நம்பிக்கை தெய்வத்துக்கு இருக்கிறதே, யார் என்ன செய்ய முடியும்!

*[நன்றி: கண்ணதாசனின் கடைசிப்பக்கம்]*

# " யாருக்கும் பயப்பட மாட்டோம் "

*தொல்புரம் சி.கதிர்காமநாதன்*

என்னுடைய நண்பர் வழமை போல் சாவகாசமாய் கதைத்துக் கொண்டு இருக்கும் போது, ஒரு விசயத்தை சொல்லி வருத்தப்பட்டார். அவர் தனியார் துறையில் வேலை செய்து கொண்டிருந்தார். அது சமூகத்தின் பல திட்டங்களுக்கு உதவி செய்யும் நிறுவனம். அவர் அமைதியான சுபாவத்தோடு பொறுமைமிக்கவர். தானுண்டு தன் வேலையுண்டு என்ற நிலையில் உள்ளவர். யாரோடும் முட்டி மோத மாட்டார். மோத வேண்டிய சந்தர்ப்பங்கள் பல வேலைத் தளத்தில் இருந்தும் சண்டை பிடிக்க மாட்டார். சரி அவனுடன் பேசி என்ன பயன்? அவனுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் ஏன் வீணாக அவனோடு மல்லுக் கட்டுவான்? என்று தொந்தரவு கொடுக்காமல் ஒதுங்கிப் போகும் தன்மை அவருக்கு

மொத்தத்தில் தமிழ்ப்பட கதாநாயகர் களுக்கு இருக்க வேண்டிய பட்டங்கள், தகுதிகள் இல்லாதவர். வேலைத் தலத்தில் நடக்கும் பிரச்சினைகள் பற்றி கதைப்பார். சில நேரங்களில் கேட்கும் எனக்கே கோபம் வந்துவிடும். ''என்ன இந்த மனுசன் இப்படி கோழையாக உள்ளாரே'' என நான் நினைப் பேன். இப்படி ஏன் நடந்து கொள்கிறார்? நான் யோசிப்பதுண்டு ஒரு தடவை என்னிடம் கேட்டார் நான் இப்படி எதுக்கும் எதிர்த்துக் கதைக்காமல் அடங்கிப் போவதை பலவீனமாகக் கருதுகிறீர்களா?'' எனக்கு நண்பரது கேள்வி யோசிக்க வைத்தது. தனது நடந்தைபற்றி என்னுடன் கதைப்பதற்கு தேவையொன்று ஏற்பட் டுள்ளது. ஏதாவது இவ் விடயத்தில் பாதிப்படைந்து விட்டாரா? ''ஏன் இப்படி கேக்குறீங்கள்?''

''இல்ல இப்போது என்னைப்பற்றிக் கொஞ்சம் அதிகம் சிந்திக்க வேண்டிய நிகழ்வு ஏற்பட்டுள்ளது. மற்றவர்களுடன் ஒப்பிடும் போது எனக்கே என்னிடம் கோபம் வருகிறது. தேவையில்லாத பயம், ஒரு வேலையைச் செய்து முடிக்கும் போது அதனை சரியாகச் செய்தாலும், பிழை சொல்லி விடுவார்களோ? என்னைச் சார்ந்த எல்லாமே சரியாக நடக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நான் தான் இப்படி நடந்து கொள்கிறேன் போல் எனக்குத் தெரிகின்றது. சிலபேரைப் பார்த்தால் இப்படி இருக்காமல்


அவர்கள் யாரை
எந்த விதமான
வேலையில் ந
எப்படி இவர்க
முடிகின்றது'' இ
ளும் நண்பர் 
விடயத்தை இப்
அரச சேவையி
போகும் போது
அதிகமாகக் கதை
எதுவும் செய்
யாருக்கும் ப
என்கிறார்கள்.

பாவம் நண்ப
வேலை, அதுவும்
பற்றாக்குறையா
லாம் இதனை அ
நிரந்தர ஊதியம்
கிறார்களோ தெ
போது தான் ''நா
கோஷம் போடு
நாங்கள் இப்ப
ஆகிவிடுகின்றோ

சில வேலை
இணையும் போ
க்ளை எழுதிக்
களா என நான் நி
அப்படியில்லை
தங்களது சொந்
பேசுகிறார்கள். இ
எப்படி வந்தது?
நடத்தையோடு
பேசுபவர்களோ
கொண்டு போவ
பொறுத்த வரை 
இப்படியான நிலை
ஆரம்பிப்பது.

நண்பரையும்
களை யாரும் அ
வசனம் பேசச்
எல்லோரும் வசன
மாறினால் மற்
என்ன செய்வது
கஷ்டமானதாகப்
யான நடத்தைக
நண்பர் தன்னை
தோன்றிற்றா? - ம

## அறிவு என்பது அனைத்திலும் உண்டு!





### செய்தி

*சுற்றத்தே என்ன*
*நடக்கிறது என்பதை*
*அறிந்து இசைவாய்*
*எம்மைத் தயார்படுத்த*
*சுழலுமிப்புவியில் பரந்து*
*கிடக்கும் பகுதிகளிலிருந்து*
*சுடச் சுடக் கிடைப்பது*

### தகவல்கள்

*பகுத்தறிவதற்கும்*
*தொகுத்தறிவதற்கும்*
*அடிப்படைக் கற்களாய்*
*இருப்பது தகவல்கள்*
*தகவல்களே அக்*
*கருத்தை தீர்மானிக்கும்*
*காரணிகளுமாகும்*

### விளம்பரம்

*வியாபாரமென்றாலும்*
*விற்பனையென்றாலும்*
*அவரவர்க்கு அவசியமான*
*தேவைகளை அறிந்து*
*கொள்ள அனுசரனையாய்*
*அமைவது - இடைத்*
*தரகரைக்கூடக் குறைப்பது*



### அறிவிப்பு

*அறியத்தரப்பட*
*வேண்டியது அடிப்படை*
*மனித உரிமை யென்பதால்*
*தனித்தனியே தரப்பட*
*முடியாதவிடத்து, பல்*
*இடங்களின் வாயிலாக*
*அறிந்து கொள்வது!*

இ.ஜெயபாலன்,
தொட்டிலடி, சங்கானை

அவன
இன்ற
அவன
தாழ்த
அரிது

- மணி




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

...கள் யாரைப் பற்றியும் பயமில்லாமல், ...விதமான அவசரமும் இல்லாமல் ...லையில் நடந்து கொள்கிறார்கள். ...டி இவர்களால் இப்படி நடக்க ...ன்றது" இப்படியாக பேசிக் கொள் ...நண்பர் வருத்தத்துடன் சொன்ன ...த்தை இப்போது சொல்கின்றேன். ...சேவையில் வேலை சம்பந்தமாக ...ம் போது அங்குள்ளவர்கள் சற்று ...மாகக் கதைத்து "எங்களை யாரும் ...ம் செய்ய முடியாது. நாங்கள் ...க்கும் பயப்பட மாட்டோம்" ...றார்கள்.

...வம் நண்பர் இவரோ தனியார்துறை ... அதுவும் நிரந்தரமற்ற தன்மை நிதி ...க்குறையால் ஆள்குறைப்பு செய்ய ...இதனை அறிந்து தான் அரசசேவை, ... ஊதியம் பெறுபவர்கள் கதைக் ...களோ தெரியாது. கூட்டம் போடும் ... தான் "நாங்கள் தமிழர்கள் என்று ...ம் போடுகின்றோம். இறங்கினால் ...ள் இப்படி சிறுபான்மையினராக ...டுகின்றோம்."

... வேளையில் அரச சேவையில் ...யும் போது இப்படியான வசனங் ... எழுதிக்கொடுத்து அனுப்புகிறார் ...ன நான் நினைப்பேன். உண்மையில் ...டியில்லை எல்லாம் இவர்கள் ...து சொந்த வசனங்களைத்தான் ...றார்கள். இப்படியான மனோபாவம் ... வந்தது? நண்பரின் இயல்பான ...தயோடு இப்படியாக வசனங்கள் ...வர்களோடு வேலை செய்து ...டு போவதென்டால் அவரைப் ...ந்த வரை கஷ்ரமானதாக இருக் கும் ...யான நிலையில் மாற்றத்தை எங்கே ...ப்பது.

...பரையும் அவர்கள் போல் "எங் ...யாரும் அசைக்க முடியாததென்டு ... பேசச் சொல்வதா?" அப்படி ...ரும் வசனம் பேசி கதாநாயர்களாக ...ால் மற்றைய பாத்திரங்களுக்கு ... செய்வது? நிலைமை ரொம்பக் ...னதாகப் போய்விடும். இப்படி ...நடத்தைகளைப் பார்த்துத் தான் ... தன்னை கோழையாக நினைக்கத் ...திற்றா? மற்றவர்களுடன் ஒத்துப் போய், பணிந்து மதிப்புக் கொடுத்து வேலை செய்வது கோழைத்தனமான செயலாகத் தெரிகிறதா? வெறுமனே மற்றவர்களுடன் சண்டைபிடிப்பது வீரமான செயலாகக் கருத முடியுமா? அல்லது மௌனமாக இருந்து காரியம் ஆற்றிக் கொண்டு போவது வீரமாகத் தெரியவில்லையா? தண்ணீரில் விழுந்த தேளைக் காப்பாற்றுவதற்கு குருவானவர், தனது கையால் அதனை வெளியே எடுத்துவிட, தேளானது அவர் கையில் கொட்டியது. குருவானவர் அதன் செய்கையைப் பொறுத்து, கொட்டுப்பட்டதால் ஏற்பட்ட வலியையும் மறந்து அதனை மீண்டும் மீண்டும் காப்பாற்ற முயற்சித்தார்.

இதனைப் பார்த்த குருவின் நண்பர், "நண்பரே ஏன் இப்படித் தேளால் கொட்டு வாங்கிக் கஷ்ரப்படுகின்றீர்கள், அதனை அப்படியே தண்ணீரில் விட்டுவிட வேண்டியதுதானே?" அதற்குக் குருவானவர் பதில் சொன்னார். "ஒரு சாதாரணமான தேளுக்கு தனது சுபாவத்தை மாற்ற முடியாத தன்மை இருக்கும்போது அறிவுள்ள மனிதனுக்கு இருக்க வேண்டிய உதவும் சுபாவத்தை ஏன் நான் மாற்றிக் கொள்ள வேண்டும்."

நமது சமூகத்தில் எத்தனை தேள்கள், பூரான்கள், மயிர்க்கொட்டிகள், பாம்புகள் உள்ளன. இவர்களுக்குப் பயந்து நேர்மையான விசுவாசமான ஒழுக்கம் நிறைந்த பலர் தமது வேலைகளைக் கைவிட்டு ஓடியே போய் விட்டார்கள். இன்னும் சிலர் இவற்றையெல்லாம் எதிர்த்து, சமாளித்து வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். நண்பரிடம் சொன்னேன் "நீங்கள் உங்கள் மேலதிகாரியைக் கண்டு பயப்படவில்லை. தந்த வேலையைச் சரியாகச் செய்திருக்கிறேனோ என்ற பயம்தான். இது, தேவையானது. மேலும் உயர்வுக்கு வழிசமைக்கும் நீங்கள் கோழையல்ல". அந்தநேரம் எனது மகன் தொலைக்காட்சியைப் போட திரையில் பாட்டு ஓடியது. "நல்லவன் எனக்கு நானே நல்லவன், சொல்லிலும் செயலிலும் நல்லவன்" இது எந்தப் படம் நண்பர் கேட்டார். நான் கூறினேன் 'படித்தால் மட்டும் போதுமா?' உண்மைதான் படித்தால் மட்டும் போதுமா? நண்பரோ அர்த்தத்துடன் சிரித்தார். ✱

# வெற்றியின் எல்லைகள்

பாஷோ தனது மாணவர்களைப் பார்த்துக் கேட்டார்:

"வெற்றி என்பது என்ன?"

ஒரு மாணவர் பதில் சொன்னார்.

"வீடு, கார் போன்ற விடயங்களை அடைவது..."

இரண்டாவது மாணவர் சொன்னார்.

"ஏதாவது ஒரு விடயத்தை மையமாக வைத்துக் கொண்டு அதை அடைவது..."

மூன்றாவது மாணவர் சொன்னார்.

"ஒன்றை அடைந்தவுடன் ஏற்படுகிற திருப்தி... சந்தோஷம்..."

நான்காவது மாணவரைப் பார்த்து பாஷோ கேட்டார்.

"வெற்றி என்பது உங்களைப் பொறுத்தவரை எது?.."

அவர் பதில் சொன்னார்.

"வெற்றி என்றே ஒன்றும் இல்லை.... நான் வாழ்க்கையை வருவது மாதிரி எதிர்கொள்கிறேன்.."

பாஷோ அவர்கள் எல்லோரையும் பார்த்துச் சொன்னார்.

"நான் உங்களை ஐந்து வருடம் கழித்துச் சந்திக்கிறேன்..." என்று ஐந்து வருடங்கள் கழிந்தன.

நான்கு மாணவர்களும் பாஷோவைச் சந்திக்க வந்தார்கள்.

முதல் மாணவரைப் பார்த்து பாஷோ கேட்டார்.

"நீங்கள் வெற்றியடைந்து விட்டீர்களா?.."

"இல்லை.. நான் நினைத்த கார் வாங்கி விட்டேன்... இப்போது வேறு கார் மேல் ஆசை வந்து விட்டது. அது கிடைக்கிறவரை நிம்மதி இல்லை..."

பாஷோ இரண்டாவது மாணவரைக் கேட்டார்.

"நீங்கள் வெற்றியடைந்து விட்டீர்களா?"

"ஒரு விடயத்தை அடையும்போதே இன்னொரு விடயத்திற்கு மனசு ஏங்க ஆரம்பித்து விடுகிறது. எனக்கும் முதல் மாணவர் நிலை தான்."

பாஷோ மூன்றாவது மாணவரைக் கேட்டார்.

"நீங்கள் வெற்றியடைந்து விட்டீர்களா?"

"ஒன்றை அடைந்தவுடன் நான் சந்தோஷம் அடைகிறேன்... அந்தத் திருப்தி ஐந்து நிமிடம் தான்... மறுபடியும் அந்தத் திருப்திக்காக இன்னொன்றைத் தேடுகிறேன்... இப்படியே போய்க் கொண்டு இருக்கிறது..."




பாஷோ நான்காவது மாணவரைப் பார்த்தார்.

அவர் ஐந்து வடங்களுக்கு இருந்ததைவிட தளர்ந்து இருந்தார்.

"உங்களுக்கு வெற்றி என்ற ஒன்றே இல்லை. பொதுவாக உங்கள் வாழ்க்கை ஐந்து வருடங்களுக்கு முன்பு எப்படி இருந்தது? இப்போது எப்படி இருக்கிறது?.."

அந்த மாணவர் தளர்ச்சியாகப் பதில் சொன்னார்.

"எனக்கு வாழவே பிடிக்கவில்லை. என்னுடைய வாழ்க்கைத்தரம் முன்பு இருந்ததைவிட சற்றுக் குறைந்து விட்டது..." பாஷோ புன்னகைத்தார்.

தனது கரும்பலகையில் எழுதினார்.

வெற்றி என்பது எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. அதை வரையறை செய்து கொள்ளுங்கள்.

வரையறை செய்து கொள்ளும் போதே ஒரு வெற்றி அதை அடைவதைத் தொடக்கி வைக்கிறது.

பொருள்களை அடைகிற வெற்றி மாறிக் கொண்டே இருக்கும். வெற்றி என்ற ஒன்றே இல்லை என்று சொல்கிறவன் வாழ்க்கை மிகச் சாதாரணமாக இருக்கும்.

நீங்கள் வெற்றிகரமான மனிதராக இருக்க வேண்டுமென்றால் உங்களுடைய வெற்றி எது என்பதைத் தீர்மானம் செய்யுங்கள்.

# ...னருள் ...ன்றி ...வனடி ...ழுதல் ...ரிது

மணி





தீபாவளியின் பின்னர் குறிப்பிட்ட ஒரு தினத்தில் மூலஸ்தான தீபத்திற்கு வேண்டியளவு நெய் ஊற்றப்பட்டு, இறைவனுக்கு மலர்மாலைகளும் அணியப்பட்டு, ஆலயக் கதவுகள் மூடப்படுகின்றன. பின்னர் சித்திரை மாதப் பிற்பகுதியில் குறித்த ஒரு தினத்தில், ஆலயதத்தை மூடியுள்ள பனிக்கட்டிகளை கோடரி போன்ற ஆயுங்கள் மூலம் அகற்றப்பட்ட திருக்கதவுகள் திறக்கப்படுகின்றனவாம், அப்போது அங்கே விளக்குகள் முன்னர் போலவே பிரகாசமாக எரிந்து கொண்டிருப்பதாகவும், மலர்மாலைகள் வாடாமல் இருப்பதாகவும் கூறினார்கள். இக்காட்சியைப் பார்ப்பதற்காக அன்றைய தினம் பெருந்தொகையான பக்தர்கள் அங்கு வருவதாகவும் கூறினார்கள்.

இங்கு அல்கநந்தா மற்றும் ரிஷி கங்கை ஆகிய நதிகள் ஓடுகின்றன. நாம் அலகநந்தா நதியில் நீராடுவதற்காகச் சென்றோம். நீரானது பனிக்கட்டி போல இருந்தது. கடுங்குளிர், செம்பின் மூலம் அள்ளி ஊற்றினாலும் பனிக்கட்டி உடம்பில் பட்டு விழுவது போலவே இருந்தது.

ஆற்றுக்குப் பக்கத்தில் உள்ள சப்த குண்டத்தில் நீர் சூடாக இருந்தது. இந்நீரில் மிகவும் சந்தோஷமாக நீராடினோம், இந்தச்சுடு நீரானது நாராயணப் பெருமானின் திருவடிகளில் இருந்து வருவதாகக் கூறினார்கள்.

ஒருதடவை ஹோம குண்டங்களில் அக்கினி பகவானுக்கு ஆகுதி செய்யப்பட்ட நெய் மற்றும் ஹோமத்திரவியங்கள் அதிகமானதால் அவருக்கு ஜீரணிக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும், அவர் விஷ்ணு பகவானை நோக்



கித்தவம் செய்ததாகவும், பகவான் அக்கினியை நீர்வடிவமாக மாற்றம் செய்து, அந்த நீரில் பக்தர்கள் ஸ்நாணம் செய்தால் அவர்களின் பாவங்கள் யாவும் கரைந்து விடும் என்றும், அதே வேளை அக்கினி பகவானின் அஜீரணமும் நீங்கிவிடுமெனவும் வரமளித்தாகவும், அன்று தொடக்கம் இவ்வாறாக நடைபெறுவதாகவும் கூறினார்கள்.

நீண்ட வரிசையில் ஏறக்குறைய மூன்று மணிநேரத்திற்கு மேல் காத்திருந்து ஆலய வாயிலை அடைந்தோம். ஆலயமானது பொற்தகடுகளால் வேயப்பட்ட கூரைகளைக் கொண்ட மூலஸ்தானம், பூஜைகள் முதலிய நிகழ்வுகள் நடைபெறும் தரிசன மண்டபம் பக்தர்கள் நின்று தரிசனம் பெறும் சபாமண்டபம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இங்கு எழுப்பப்படும் வேத மந்திரங்கள் எம்மைச் சொர்க்கலோகத்திற்கே அழைத்துச் செல்வது போல இருந்தது.

மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் நாராயணப் பெருமானை நாம் எந்த இறைவனின் வடிவத்தில் பார்க்கின்றோமோ அந்த வடிவம் எம் மனக்கண்ணில் காட்சி தருகின்றது. அதாவது சிவனாக நினைத்தால் சிவனாகவும், விஷ்ணுவாக நினைத்தால் அவராகவும், ஆஞ்சநேயராக நினைத்தால் அவராகவும், அம்பாளாக நினைத்தால் அம்பாளாகவும் காட்சி தந்து அருள்பாலிக்கின்றார். எல்லாம் நானே என்ற தத்துவத்தை விளக்குவதே இவ்வடிவங்களின் வெளிப்பாடு என்று கூறப்படுகின்றது. மற்றும் கருடபகவான், இலக்குமி தேவி, நாராயணர், குபேரன், சுதர்சனர் ஆகியோரையும் வழிபட்டு வணங்கினோம்.

பின் ஆலயத்தின் அருகேயுள்ள பிரம்ம கபாலம் என்ற இடத்திற்குச் சென்று, அங்கு பிண்டதானம் செய்வது சிறந்தது என்பதால் எமது மூதாதையர்களுக்கு பிண்ட சிரார்த்தம் நிறைவேற்றியதுடன், எமக்கும் ஆத்ம பிண்டம் இட்டுக் கொண்டோம்.

பிரம்ம கபாலம் என்பது சிவனுக்கும், பிரம்மாவுக்கும் ஐந்து தலைகள் இருப்பதால் ஏற்பட்ட குழப்பம் காரணமாக உமாதேவியாரின் வேண்டுகோளுக்கிணங்க சிவபெருமான் பிரம்மாவின் ஒரு தலையைக் கிள்ளியதனால் அவருக்குஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் காரணமாக, தலை அவருடைய கையைவிட்டு கீழே விழாததால் மகாவிஷ்ணுவிடம் சென்று கேட்டபோது, அவர் பூலோகத்தில் பதிவிரதையிடம் பிச்சை ஏற்றுக் கொண்டால் இத்தோஷம் நீங்குமென்று கூறியதனால் இறைவன் கைலயங்கிரியிலிருந்து பூலோகத்திற்கு வந்தார். அவ்வேளை பத்ரி நாத்தில் தாரக மந்திரத்தை உபதேசித்துக் கொண்டிருந்த லஷ்மியிடம் சிவன் பிச்சை கேட்டதும் நாராயணப் பெருமானுக்கு தொண்டாற்றிக்கொண்டிருந்த லக்ஷ்மி தேவி பிச்சை இட்டதும், சிவனின் கையிலிருந்த பிரம்மாவின் தலை இந்த இடத்தில் விழுந்து விட்டதாம். இந்த இடமே பிரம்ம கபாலமாகும். இங்கு பிண்டமிடுவது சிறப்பு.

இங்கு பிண்டம் இட்டபின்னர் பின் எப்போதும் சிரார்த்தம் செய்யத் தேவையில்லை என்று பெரியவர்கள் கூறினார்கள்.

ஆலயத்தின் பின்புற வீதியால் சென்ற போது வெண்பனி நிறங் கொண்ட வெள்ளியை ஒத்த மலையொன்று தென்பட்டது.

(யாத்திரை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## வீடு ஒரு பாடசாலையாக...!




ஆரம்பப் பிள்ளைப் பருவச் சிறுவர்களின் உடல், உள விருத்தியில் அக்கறை கொண்டதோர் சமூகம் இன்று எங்கள் மத்தியில் உருவாகியுள்ளது. பெற்றோர் தமது பிள்ளைகளை முன்பள்ளிகளில் சேர்த்து மிகவும் விருப்போடு அவர்களின் கற்றல் செயற்பாடுகளில் ஊக்கம் செலுத்தி வருகின்றனர். வீட்டிலே தமது பிள்ளைகளை விருப்போடு பராமரித்துவ ரும் அதே வேளையில் அவர்கள் தமக்குக் கிடைத்துள்ள வீட்டுச் சூழலைப் பயனுடைய மகிழ்ச்சிதரும் இடமாக அனுபவிக்கச் சந்தர்ப்பங்களை உருவாக்கும் வகையிலே பெற்றோருக்கான வழிகாட்டி நூலாக ''வீடு ஒரு பாடசாலையாக'' எனும் நூல் உருப்பெற்றுள்ளது.

கற்றலுக்கு உகந்த இடமாக நாம் பாடசாலையைத் தேர்ந்து எடுத்திருப்பினும் பிள்ளைகள் வளரும் சூழலும் கற்றலுக்கு ஏற்ற இடமாக மாற்றப்படுவதனூடாகப் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தலாம் என் பதை ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளரான திருமதி அ.வேதநாயகம் இந்நூலின் மூலம் வலியுறுத் தியுள்ளார்.

பெற்றோர் தமது வீடுகளைப் பிள்ளைகள் கற்கும் பாடசாலையாக மாற்றுவதற்குப் பொருத்தமான வழிகாட்டல்களை இந்நூல் விரித்துரைக்கின்றது.

பிள்ளையின் மொழிவிருத்தி, திறன்கள், பழக்க வழக் கங்கள், சுகாதாரமான ஒழுக்கம் என்பவற்றைப் பிள்ளைகள் தமது வீடுகளில் கற்றுக்கொள்ள பெற்றோர் வழிகாட்டுதல் இயலும் என்பதை ''வீடு ஒரு பாடசாலையாக'' என்னும் நூல், பல செயலொழுங்குகள் மூலம் வழி காட்டுகிறது. ''காலைக் கடன்களைமுடிப்போம்'' என்ற செயற்பாட்டு ஒழுங்குடன் நீருடன் விளையாடுவோம் என்ற 32ஆவது செயற்பாடு வரையிலான செயல் விளக்கம் இந்த நூலில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

''வீடு ஒரு பாடசாலையாக...'' மாற்றம் பெறுவதன் மூலம் அதில் வாழும் பிள்ளைகள் தம்மைக் கல்வியில் ஈடுபடுத்துவது இலகுவாகும். ஒவ்வொரு பெற்றோரும் இதனைக் கருத்திற்கொள்வதன்மூலம் எமது சமூகம் சிறந்த பிரஜைகளை எதிர்காலத்தில் பெற்றுயரும் என்பது நிச்சயமாகும்.

''வீடு ஒரு பாடசாலையாக..!'' பிள்ளைகள் வளரும் ஒவ்வொரு வீட்டிலும் இந்த வழிகாட்டி நூலை வாங்கிப் பயன்பெறுவது நலந்தருவதாகும்.

- மகேஷ்.

## சுக்குப் பக்கு கூ


சுதந்திர தின கவிதை

மண்ணில் மலரும்
மகிழ்வு ஒன்று .
மடியில் விடியும்
மழலை நன்று
எட்டுத் திக்கும்
எம்மின வாழ்வு
எழுச்சியற்ற நிகழ்வு...
கொல்வந்த மேன்மையே
கொன்றுவிட்ட தன்மையே
கொப்பில் தூங்கும் குரங்காய்
கொடியவர் கையில் ஏங்குவோ
சுத்தப் பொய் நடக்கும்
சுமையின் மையம் நடுவே
சும்மாவும் வேண்டாம்
சுமந்தும் வேண்டாம்
சுதந்திரநாள்...
தந்துவிட்டுப் பறந்தனர்
தன்னம்பிக்கை என்போரிடத்தில்
தவிடுபொடியாகக் கிடக்குது பாரு
தாகமாய் தவிக்குது சேரு
தந்தவர் இன்றில்லை அதனால்
தங்கத் தமிழனுக்கு நீதி சரிவதில்லை
தந்திட மனமில்லாதோர்
தட்டிப் பறித்து
தட்டில் போடு இலஞ்சம் என்கிறார்
தரமாட்டேன் என்று
குரல்கொடுப்போர்
தரையோடு சாய்கின்றார்
தன்மானம் மிக்கவராய்க்காட்டி
வருமானம் சேகரிக்கிறார்
புலிமானம் காப்பதற்கு ஏது
செய்கிறார்
உயிருள்ள தமிழரை
மயிரென நினைக்கிறார்
தயிர் தரும் விலங்கோடு சேர்த்து
பயிர்தனைக் கொடுக்கிறார்
கானகம் துடிக்கும்
வானகம் கண்ணீர் வடிக்கும்
தானமதாய் தந்த சுதந்திரம்
தமிழனுக்கு இல்லையேன்று
மானமதாய் நிற்கின்றான்
சுற்றிப் பார் தாய்வீட்டை
பற்றிப் பார் உறவை
அப்போது தெரியும்
சுதந்திரம் தமிழனுக்கு
சுக்கு பக்குகூ
விளையாட்டு என்று.....

ஆக்கம்:
ஜெயம்ஜெகன், புதுக்குடியிருப்பு.

## தென் இந்தியக் கலை

இணுவில் தயாளினி பதிப்பகம்




தென் இந்திய சிற்பக் கலையின் சிறப்புக்குச் சான்றாக தென்னிந்தியக் கலைநூல் விளங்குகிறது. மகாபலிபுரம் தஞ்சைப் பெரிய கோயில் பற்றிய தெளிந்த விளக்கங்களோ வெளிவந்துள்ளன. '' தென் இந்தியக் கலை'' எனும் அரிய நூலை நாகையா செந்தில் நாதன் எழுதி அச்சேற்றியுள்ளார். தயாளினி பதிப்பகத்தின் வெளியீடாக வெளியாகி உள்ள இந்நூல் சிற்பக் கலையினதும் சிற்பக்கலை பொதிந்த கட்டடக் கலையினதும் உணர்வு வெளிப்பாட்டுக்கும் அழகின் ஒளியேற்றத்திற்கும் ஆதாரமாகின்றது.

மாமல்லபுரம் சிற்பங்களில் காணப்படும் கலைச் சிறப் புக்களை திறந்த வெளிப் பாறைச் சிற்பம், பஞ்ச பாண்டவர் குகை, கிருஷ்ண மண்டபம், திரிமூர்த்தி குகை, வராககுகை, மகிஷாசுரமர்த்தனி குகை, ஆதி வராக மண்டபம், பஞ்ச பாண்டவர் ரதம், கடற்கரைக் கோயில் என்ற தலைப்புகளில் ஆசிரியர் விவரித்துள்ளார் அவற்றின் அமைப்பு, அழகு, வடிவம், என்பவற் றுடன் அவை கூறும் புராண வரலாற்றுக் கதைகளும், சிற்பங்களைக் காட்டும் புகைப்படங்களும் நூலுக்கு மேலும் வலிமை சேர்க்கின்றன.

சோழர் காலக் கட்டடக் கலைக்குச் சாட்சியாகி நிற்கும் தஞ்சைப் பெரியகோயில், பிரகதீஸ்வரர் கோயில் பற்றிய விளக்கமும், அவற்றின் கறுப்பு வெள்ளை நிழற்படங்களும் கட்டிடக்கலையின் மகிமையைக் கண்முன் நிறுத்துகின்றன. யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய ஆசிரியராகப் பணி தொடரும். நா.செந்தில்நாதன் சிற்பக் கலையின் எழிலுக்கு முதலிடம் தந்து ஆக்கியுள்ள இந் நூலில், கோயிலின் அழகையும் சிற்பங்களின் கலைத் துவத்தையும் மேலும் மெரு கூட்டிக் காட்டும் வகையில் படங்கள் வர்ணத்தில் அச்சிடப்பட்டிருப்பின் காட்சிக்கு மாத்திரமல்ல அவை கருத்துக்கும் இனியதோர் தூண்டு கோலாய் அமைந்திருக்கும். எனினும் இந் நூல் மாணவர் தம் பாடத்துணை நூலாக அல்லாது பலரும் வாசித்துக் களிக்கும் கலைப் படைப்பாக அச்சேறியுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

வரலாற்றைக் கற்போருக்கும், தென் இந்தியக் கலைச் சிறப்பை அறிய விழைவோருக்கும் இது பயன் தரவல்லதொரு நூலாகும்.

- மகேஷ்.

## ஆன்மீக பணியில் மாதாஜி

ஈழவளநாட்டை சிவபூமி எனப் போற்றுகின்றார் மா முனிவர் திருமூலர். இராவணன் காலத்தில் இருந்து சிவவழிபாடும் சைவமும் வேரூன்றிய பூமி. அன்னியர் ஆட்சிக் காலத்தில் எமது மண் ணில் சைவம் சீர் குலைந்தது. இறைவழிபாடு செய்து விபூதி பூசுவதற்கே மக்கள் அஞ்சினர். பக்தர்கள் விரதம் அனுஸ்ட்டிக்க முடியாத நிலையிருந்தது. அற்ப சலுகைகளைக் காட்டி எமது மக்களை அந்நியர்கள் கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றினர்.

எமது இனத்தின் விடிவெள்ளியாக இக்காலத்தில் நாவலர் பெருமான் தோன்றினார். தன் நாவன்மையாலும் ஆளுமையாலும் எமது சைவ சமயத்தை புனர்நிர்மாணம் செய்து வைத்தார்.

அவர் வழியில் பலர் தோன்றி வாழ்ந்தனர். நாவலரின் சைவசமய மறுமலர்ச்சியுடன் எமது இனத்தின் விழிப்புணர்வு ஏற்பட்டது நாவலரும் 1879 ஆம் ஆண்டு மார்கழி மக நட்சத்திரத்தில் இறைவனின் திருவடியை அடைந்தார்.

நல்லூர் மாநகரில் எழுந் தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் முருகன் தேரடியில் மோனத் தவம் இருந்தார். தன்னை ஒரு பைத்தியம் போலப் பொது மக்களுக்குக் காட்டிக் கொண்டிருந்த சுவாமிகளின் அருட்பார்வையால் எம்மவர்களுக்கு சிவயோக சுவாமிகள் என்னும் மகாஞானி கிடைத்தார்.

**இன்று அவரது முத்துவிழா**

மார்க்கண்டு சுவாமிகள், சுப்பிரமுனிய சுவாமிகள், சாந்தன் சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள், ஆத்ம ஜோதி முத்தையா சுவாமிகள் ஆகியோர் உட்பட மாதாஜி சி.விசாலாட்சி அம்மையாரும் சுவாமிகளின் திருவடி தீட்சையின் வலிமையால் பூரண துறவியாக வாழ்ந்து வருபவர். இன்றும் ஞானவாழ்வு பெற்றுள்ளார். குப்பிளான் கிராமம் அவரைப் பெற்றெடுத்தது. சைவத்திலும் தமிழிலும் பற்றுடையவர். தீட்சை பெற்று சைவ அனுட்டானங்களைக் கடைப்பிடித்தார்.

சிவயோக சுவாமிகளை ஆத்மீக குருவாகவும் நாவலர் பெருமானை மானசீகக் குருவாகவும் ஏற்றார். தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் ஆர்வத்தால் பிரமச்சரியையாக வாழ்வதெனத் தீர்மானித்தார். ஒரு பெண் திருமண பந்தத்தில் ஈடுபடாமல் வாழ்வதற்கு எமது சமுதாயம் அனுமதிக்காது. பெற்றோர் சகோதரங்களுக்கும் இந்தநிலைப்பாடு பெரும் துன்பத்தை ஏற்படுத்தும்.

அன்னையின் குடும்பத்தினருக்கு சிவயோகசுவாமிகளின் அருள் வாக்கு ஆறுதல் அளித்தது. வாரம் தோறும் சுவாமிகளைத் தரிசிக்க வரும் தந்தையாருக்கும் சகோதரருக்கும் சுவாமிகள் 'அவளை அவள் பாட்டில் விடுங்கோ' என்று அருளினார். அதனைக் கேட்டு அவர்கள் அமைதி அடைந்தார்கள்.

அன்னை பிரமச்சரியை நிலையில் இருந்து துறவி நிலைக்கு உயர்ந்தார். தன் இளவயதிலேயே வெண்ணாடை அணிந்தார். ஆசிரியராகக் கடமையாற்றிய தன் சகோதரரின் உதவியால் அண்ணாமலை பல் கலைக் கழகத்தில் புலவர் பட்டம் பெற்றார். இந்தியாவிலும் இலங்கையிலும் கவியரங்கம், பட்டிமன்றம், சொற்பொழிவுகளில் பங்குபற்றித் தன் ஆற்றலை வெளிப்படுத்தினார்.

இன்று தன் குல தெய்வமான சொக்கர்வளவு சோதிவிநாயகர் ஆலய மடத்தில் சிவபூசையும் தியானமும் நாமஜெபமும் செய்கிறார்.


வயது முதிர்ந்த நோயுற்ற பொழுதும் நோக்கத்தை நிறைவேற்றப் பாடுபடுகின்றார். சைவசித்தாந்தசிகாமணி செந்திநாதையர் தவழ்ந்த பூமியில் ஞானதபோதினியான மாதாஜி வாழுவது திருவருட் பயனாகும். மாதாஜி ஆத்மீக அலை ஆலய சுற்றாடல் எங்கும் வீசிக் கொண்டிருக்கின்றது. ஞானிகள் வாழ்ந்த பூமி போற்றுதலுக்குரியது. ஞானிகளின் திருவடி பட்ட இடம் வணக்கத்துக்குரியது.

ஞான தபோதினியான மாதாஜி வாழ்ந்து வருவது குப்பிளான் கிராமம் பெற்ற தவப்பயனாகும்.

திருமுறைச் செல்வர் சிவ.முத்துலிங்கம்.

## அஞ்ஜைனாவுடன் வாழ்வது எப்படி?

நூலாசிரியர் கா.வைத்தீஸ்வரன்




இதயத் தசைக்குப் போதிய அளவு இரத்தம் விநியோகிக்கும் வகையில் இயங்கும் பகுதிகளில் தடைகள் ஏற்படும் நிலையில் நெஞ்சுவலி அசௌகரியம் என்பன தோன்றலாம் இதனையே அஞ்ஜைனா எனக் குறிப்பிடும் நூலாசிரியரும் சுகநலக் கல்வியாளனுமான கா.வைத்தீஸ்வரன் அதனுடன் வாழ்தல் பற்றிய விளக்கங்களுடன் '' அஞ்ஜைனாவுடன் வாழ்வது எப்படி?'' என்ற நூலைத் தந்துள்ளார்.

நெஞ்சு வலிக்கான காரணிகளை வினாவெழுப்பி விடை பகர்ந்து தெரிவித்துள்ளதுடன் நோயை இனம் காணும் வழிகளையும் அதனுடன் வாழ்தல் எவ்வாறு எனவும் அவற்றை நீக்கும் சிகிச்சை முறைகளையும் விளக்கியுள்ளார். அதற்கான மருந்து, வைத்தியம் என்பவற்றைப் பெறும் தெளிவான அறிவுரைகளுடன் உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்படுத்தப்பட வேண்டிய ஆரோக்கிய வழிகள் பற்றியும் எடுத்துரைத்துள்ளார். அஞ்ஜைனா மாரடைப்புக்கு முந்திய தான நிலையாகக் கொள்ளப்படுவதும் அது அதிகரிக்கும் போதே மாரடைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

நலமுடன் வாழவும் இதய வலியை இனங்கண்டு முன்னதாகவே ஆலோசனை பெறுவது குறித்தும் விளக்கம் தந்துள்ளார். புகைத்தல், மதுப்பழக்கம், உடலுறவு, நீரிழிவு போன்றவற்றால் இதயவலி மாரடைப்பு என்பன ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளமை குறித்தும் அவற்றைத் தடுக்கவும் நம்மைப் பாது காக்கவும் தகுந்த வழிகாட்டல்களும் அறிவுரைகளும் நூலில் உள்ளன.

சுக நலக் கல்வியியலாளனான கா. வைத்தீஸ்வரன் தனது அனுபவத்தின் வாயிலாகவும் கற்றறிந்த சுகநல அறிவு சார்ந்தும் எழுதப்பட்ட இந்நூல் இதயம் உள்ள ஒவ்வொருவரும் வாசித்துப் பயன் கொள்ள வேண்டிய நல்வழிகாட்டி நூலாகும்.

- வேதாரண்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியம்

எமலோகத்தில் ஒரு மனிதனைக் கொண்டு போய் நிறுத்தினார்கள். எமதர்மராஜா தன்னுடைய சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தார். அவர் எமலோகப் பரிதாபமாக எமராஜன் முன் நின்று கொண்டிருந்தார். பக்கத்தில் பதிவேட்டை புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான் சித்திரகுப்தன்.

"என்ன தப்புச் செய்தான் இவன்?" என்று எமதர்மன் கர்ஜித்தார். சித்திர குப்தன் அந்த ஆசாமியின் கணக்கைப் பார்க்கிறான். அவனுக்குத் தலை சுற்ற ஆரம்பிக்கிறது. செய்த பாவம் ஒன்றா, இரண்டா! அப்படி என்றால் பட்டியல் போட்டுச் சொல்லலாம். பஞ்சமா பாதகம் அத்தனையும் செய்திருக்கிறான். அதனால் சித்திரகுப்தன், "கணக்கு வழக்கு இல்லாமல் இவன் தப்பு செய்திருக்கிறான். இந்தப் பதிவேடு முடிந்து அடுத்த பதிவேட்டுக்கும் போய்விட்டது. அதையெல்லாம் தேடி எடுக்க வேண்டும் என்றால் என்னுடைய ஆயுள் அதற்குள் முடிந்தாலும் முடிந்துவிடும்; ஆச்சரியப்படுவதற்கு இல்லை" என்றான். இதைக்கேட்ட எமதர்மன் இவனைக் கொண்டு போய் நரகத்தில் தள்ளு என்று உத்தரவு போட்டான். அந்த நேரம் பதிவேட்டில் ஒரு வரி மட்டும் பளிச் சென்று தெரிந்தது. உடனே சித்திரகுப்தன், "இவன் இத்தனை பாவங்களைச் செய்திருந்தாலும் கூட ஒரே ஒரு புண்ணியம் மட்டும் செய்திருக்கிறான்" என்றான்.

"என்ன அது?" என்று கேட்டான் எமதர்மன். "ஒருவர் கோயிலுக்குப் போவதற்கு வழி கேட்டபோது அதோ அந்தப் பக்கமாகப் போ என்று ஒரு விரலாலே வழிகாட்டியிருக்கிறான்" என்று சித்திரகுப்தன் கூறினான். எமதர்மன் தான் முதலில் வழங்கிய தீர்ப்பில் மாற்றம் செய்தார். "அப்படி என்றால் இவனுடைய அந்த ஒரு விரலுக்கு மட்டும் பன்னீர் தெளித்து சந்தனம் பூசி சொர்க்கத்துக்கு அனுப்புங்கள் மற்றபடி இவனை நரகத்தில் தள்ளுங்கள்" என்று உத்தரவு போட்டான்.

பாவம் செய்து நரகத்துக்குப் போவர்களுக்கு மட்டும் தான் இதைப் போன்ற பிரச்சினைகள் உண்டு என்றில்லை. புண்ணியம் செய்து விட்டு சொர்க்கத்துக்குப் போகின்றவர்களுக்கும் கூட சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

கர்ணன் சிறந்த கொடையாளி. யார் எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்வதில்லை. அவன் கூட பொன்னையும் பொருளையும் தான் தானமாகக் கொடுத்தான். 'பசி' என்று வந்தவர்களுக்கு 'புசி' என்று எதையும் கொடுத்ததில்லை.

ஒருவேளை பசித்தவர்கள் யாரும் கர்ணனிடம் போகாமல் இருந்திருக்கலாம். யாரும் பசி என்று தேடிப் போகாததனால் அன்னதானம் செய்யக் கூடிய வாய்ப்புக் கர்ணனுக்கு கிடைக்காமல் போயிருக்கலாம். அத்தகை கொடையாளி கர்ணன் இறந்த பின்னர் சொர்க்கத்துக்குப் போனான். சொர்க்கத்துக்குப் போகும் யாருக்கும் பசிக்காது. ஆனால் கர்ணனுக்குப் பசித்தது. "ஏன் எனக்கு மட்டும் பசிக்கிறது?" என்று சொர்க்க வாசலில் நின்று கொண்டிருந்த ஒருத்தரைப் பார்த்துக் கர்ணன் கேட்டானாம்.

"பூலோகத்தில் நீ யாருக்குமே அன்னதானம் செய்யவில்லை. அதனால்தான் உனக்குப் பசிக்கிறது." என்றார் அந்த ஆள். "அப்படியென்றால் இப்போது என்ன செய்வது? பசி வயிற்றைக் கிள்ளுதே" என்று கவலைப்பட ஆரம்பித்தான் கர்ணன்.

உடனே அந்த ஆள் ஒரு யோசனை சொன்னான் கர்ணனுக்கு. அது என்ன தெரியுமா?

"கர்ண! உன்னுடைய ஆள்காட்டி விரலை வாயில் வைத்துக் கொண்டிரு; பசி சரியாகி விடும்" என்று கூறினார். உடனே கர்ணனும் அவ்வாறே செய்தான். பசி மறைந்துவிட்டது. இதற்கு என்ன காரணம்? ஒரு சமயம் கர்ணனுடைய தேர்ப்பாகர்களுக்கு கர்ணன் சாப்பிடுகின்ற இடத்தை தன்னுடைய ஆள்காட்டி விரலாலே சுட்டிக் காட்டினான். அதுவே ஒரு பெரிய தர்மமாகக் கர்ணன் கணக்கில் சேர்த்து விட்டது. இது எப்படி இருக்கிறது.

மனிதப் பிறப்பின் மகத்துவத்தை மனிதராகப் பிறந்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அதற்காகத்தான் இதைப் போன்ற கதைகள். இதைத்தான் ஒரு பெரியவர் "உண்ணவும் உறங்கவும் பிறந்தன மிருகங்கள்; எண்ணவும் இரங்கவும் பிறந்தவன் மனிதன்" என்றார். இரக்கப்படத் தெரியாதவன் மனிதனே இல்லை. எனக்குத் தெரிந்த பேச்சாளர் ஒருத்தர், அவர் எந்த ஊருக்குப் பேசப்போனாலும் 25 ரூபாய்க்கு மேல் யாரும் கொடுப்பதில்லை. கூட்டம் நடத்துபவர்களுக்கு கொஞ்சம் கூட இரக்கமே இல்லை என்று அவர் குறைபட்டுக் கொள்வார்.

ஒரு நாள் அவர் ஒரு கூட்டத்துக்குப் போய் பேசினார். வழக்கம் போல் 25 ரூபாதான் கொடுத்தார்கள். அதை வாங்கிக் கொண்டு முணுமுணுத்துக் கொண்டே வந்து கொண்டிருந்தார். சிறிது தூரத்தில் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர் கையை நீட்டிக் கூப்பிட்டுக் கொண்டு ஓடிவந்தார்.



இவருக்கு கொஞ்சம் ஆறுதல்; 'பரவாயில்லை இப்போதாவது அவர்களுக்கு புத்தி வந்திருக்கிறதே. இன்னும் ஒரு 25 ரூபாவை கொடுப்பதற்காகத்தான் வருகிறார் போல் இருக்கிறது' என்று நினைத்தார்.

ஓடிவந்தவர் "ஐயா; தவறுதலாக உங்களிடம் 10 ரூபா அதிகமாகக் கொடுத்துவிட்டேன். அதை வாங்குவதற்காகத்தான் ஓடி வந்தேன்" என்றார் இவர்கள் சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போனால் என்னதான் நடக்குமோ?"

**கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## கண் வைத்திய நிபுணரின் வியத்தகு சீரிய பணி

சில நாளேடுகளில் வெளியாகும் செய்திகள் இந்த செய்திகளைத் திரட்டுபவர்களின் பொது நலம் விளையா வரட்டு மனங்களின் பிரதிபலிப்பாக இருக்கின்றன. அவை உண்மைக்குப் புறம்பாக இருப்பது மட்டுமல்ல தீய உள்நோக்கம் கொண்டனவாகவும் இருக்கின்றனஎன்பதில் அணுவளவு ஐயமும் இல்லை.

யாழ். பொது மருத்துவமனை ஒரு போதனா மருத்துவமனை மட்டுமன்றி வடமாகாணம் அடங்கலான நோயாளிகள் நிபுணத்துவ சிகிச்சை பெறும் நிலையமாகவும் விளங்குவது கண்கூடு. நீண்ட காலமாக உள்நாட்டில் பட்டமும் பயிற்சியும் பெற்ற கண் சிகிச்சை மருத்துவர்கள் பணியாற்றுகின்ற இந்த போதான மருத்துவ மனையில் ஒரு சிறிது காலம் உள்ளூரில் பெற்ற பட்டங்கள் பயிற்சியோடு வெளிநாட்டிலும் குறிப்பாக இங்கிலாந்து, அஸ்திரேலியா போன்ற நாடுகளில் நிபுணத்துவ பயிற்சியும் தொழிற் தகைமையும் பெற்ற மருத்துவர் நிர்மலானந்தன் சிறிது காலம் யாழ்.போதனா மருத்துவமனையில் கண் அறுவைச் சிகிச்சை நிபுணராக பணியாற்றினார். அவருடைய பணி நீடிக்கவில்லை. அதன் பிறகு வெளிநாட்டில் பட்டமும் பயிற்சியும் பெற்ற கண் அறுவைச் சிகிச்சை நிபுணரின் வெற்றிடம் தொடர்ந்த வண்ணமே இருந்தது. கண் அழுத்த நோயால் பீடிக்கப்பட்டிருந்த நான் யாழ்.போதனா வைத்திய சாலையிலுள்ள கண் சிகிச்சை நிலையத்திற்கு பரிசோதனைக்காக அடிக்கடி சென்று வருகின்ற வழக்கத்தை உடையவன். நான் பெற்று வருகின்ற அனுபவத்தின் சில கீற்றுக்களை இங்கே விளம்புவதை அவசியம் எனக் கருதுகிறேன்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு கண் அறுவைச் சிகிச்சை நிபுணர் மருத்துவர் எஸ். சந்திரகுமார் யாழ்.போதனா மருத்துவ மனையில் தற்போது அறுவைச் சிகிச்சை நிபுணராகப் பணியாற்றி வருகிறார்.

மிகவும் இனிமையான, மென்மையான இயல்புடைய வெளிநாட்டில் பட்டமும் பயிற்சியும் பெற்று கண் அறுவைச் சிகிச்சையில் அனுபவ முத்திரையையும் ஆழப் பதித்த அவருடைய வியத்தகு பணியையும் அவரோடு இணைந்து பணியாற்றுகின்ற ஏனைய சிறப்பும், செம்மையும், மென்மையும் கொண்ட மருத்துவர்களின் பணியையும் அதற்குரிய பெறுமதியை வழங்காது அந்த சீரிய பணியின் சிறப்பைக் குன்றிடச் செய்யும் வகையில் செய்திகளில் பிரசுரிக்கப் படுகின்றன. மனச்சாட்சிக்கு விரோதமானவையாக இவை அமைகின்றன.

-ந. ஆவுடை அப்பன்-

## 769 பேரூந்து சேவை

769 பாடசாலை பஸ் சேவையானது கடந்த நான்கு மாதங்களாக இடம் பெறுவதில்லை. இதனால் இப் பஸ்ஸில் பயணம் செய்யும் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்காக 770 பஸ்ஸிலும், தனியார் பஸ்ஸிலும் பயணம் செய்து வந்தோம். எனினும் 770 பஸ் பாடசாலைக்கு (புனித பரியோவான் கல்லூரி) 8.20 மணிக்கே செல்வதனால் மாணவர்கள் பாடசாலையில் கடுமையான தண்டனைக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

இது தொடர்பாக மாணவர்கள் கையெழுத்திட்டு கடிதம் ஒன்றை யாழ்.அரச அதிபருக்கும், வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச்சபை முகாமையாளருக்கும் கடிதங்களை வழங்கியுள்ளனர். இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள்.

ஆனாலும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தயவு செய்து இதற்குரிய நடவடிக்கையை விரைந்து எடுத்து பாடசாலை மாணவர்களாகிய நாங்கள் பாடசாலைக்கு விரைவாக செல்ல உதவுமாறு கேட்கிறோம்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள்

## கவனிப்பார்களா எம்மையும்

யாழ். குடாநாட்டில் இருந்து முல்லைத் தீவு செல்வது என்பது நான்கு நான்கரை மணித்தியாலங்களுக்குப் பின்னர் தான் சாத்தியமாகின்றது.

இதில் சிறார்கள், முதியோர், கர்ப்பவதிகள் என அனைவருமே பயணம் செய்கின்றனர். இந்த நிலையில் இந்தப் பாதைக்கான பஸ்சேவை என்பது எண்ணிப்பார்க்க முடியாத அளவிலேயே உள்ளது. கடகடா கடகடா என்று ரயிலில் பயணம் செய்வது போன்ற ஒரு உணர்வு தான் இதில் பயணம் செய்தால் ஏற்படுகின்றது. நிறை மாதக் கர்ப்பிணிப் பெண்கள் இதில் பயணம் செய்தால் நிலைமை எப்படியிருக்கும் என்று எண்ணிப்பார்க்க வேண்டிய தேவையே இல்லை. இதற்கு ஏற்றால்போல்தான் இந்தப் பகுதிகளில் உள்ள வீதிகளும். அடிகு மேல் அடிவாங்கி அல்லற்பட்டுப் போயுள்ள மக்கள் நிம்மதியாகப் பயணம் செய்ய ஒரு பஸ் கூட இல்லாத நிலைமை தான் உள்ளது.

நிம்மதியான பயணத்துக்கு ஒரு சிறந்த பஸ்ஸையாவது இந்தப் பகுதிக்கு சேவையில் ஈடுபடுத்தலாம் என்று பயணிகள் பலரும் அங்கலாய்க்கின்றனர்.

எத்தனையோ துன்பங்களின் மத்தியில் இருந்து மீண்டு வாழ்வை வளம்படுத்த சிரமம் அடையும் மக்களுக்கு சீரான அமைதியான போக்குவரத்துக் கிடைக்குமா என்பது தான் அவர்களின் அவாவாக உள்ளது. கவனம் எடுப்பார்களா உரிய அதிகாரிகள்.

கி.சாமுவேல், முள்ளியவளை

## மீளக்குடியேறிய மக்களுக்கான வாழ்வாதாரக் கொடுப்பனவு

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தங்களுடைய 28.01.2012ம் திகதிய பத்திரிகையில் வாசகர் திருமுகப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக பின்வருவனவற்றை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

1.UNHCR ரூபா 20000 கொடுப்பனவு மீள்குடியேறிய அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

2. UNHCR ரூபா 5000 கொடுப்பனவு மீள்குடியேறிய அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

3. மேலதிகமாக NECORD நிறுவனத்தால் வழங்கப்பட்ட ரூபா 25000 கொடுப்பனவு அரச உத்தியோகத்தர் எவருக்கும் வழங்கப்படவில்லை.

நல்லூர் பிரதேச செயலர்

## எங்களையும் திரும்பிப் பாருங்களேன்...!
## "மின்சார வசதி" செய்து தாருங்களேன்...!

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட முறிப்பு முள்ளியவளை என்னும் கிராமம் எமது கிராமம். இந்தக் கிராமம் சுமார் 200 வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு மின்சார வசதி இல்லாததன் விளைவாக விவசாயத்தை நம்பி வாழ்வை நடத்துகின்ற குடும்பங்கள் ஒரு புறம் கல்விக்காக ஏங்கும் கல்விச் சமூகத்தின் அவல நிலை இன்னொரு புறம்.

கடந்த காலங்களில் நடைபெற்ற அனர்த்தங்களில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த மக்கள் இன்னும் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். எமக்கு அன்றும் இன்றும் என்றும் இந் நிலைதானா? எங்களைத் திரும்பிப் பார்ப்பார் யாருமில்லையா? வடக்கின் வசந்தத்திட்டத்தினூடாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தச் செயற்பாட்டுக்கு முறிப்பு வாழ் மக்கள் மாத்திரம் விதிவிலக்கானவர்களா? உரிய பொறுப்பு அதிகாரிகளே..,! எமது குரலுக்குச் சற்று செவி சாய்த்து எமது வேண்டுகோளான மின்சாரவசதியை பெற்றுத் தருவதற்கு உதவுங்கள் என்று வேண்டி நிற்கிறோம்.

முறிப்பு கிராம
அபிவிருத்திச் சங்கத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணப்பெண்ணுக்கு செய்யவேண்டிய அலங்காரங்கள்



'கல்யாணம் என்பது ஆயிரங்காலத்து பயிர்' என்று சொல்வார்கள். அதனால்தான் அந்தநாளை மங்களகரமாக கொண்டாடுகிறார்கள். திருமண வீட்டிற்கு சென்றால் அனைவருடைய கண்களும் மணமகளையே பார்க்கும். மணப்பெண்ணுக்கு அலங்காரம் செய்வது என்பது மிக முக்கியமானது. மணப்பெண்ணுக்கு என்னென்ன அலங்காரம் செய்வது என்று பார்ப்போமா...

### திருமணத்திற்கு முன்

* அழகாகவும், மிடுக்காகவும் தோன்ற எளிமையான உடற்பயிற்சிகளை செய்து வரவேண்டும். நடப்பது கூட சிறந்த உடற்பயிற்சிதான். தினமும், காலை மாலை அரைமணிநேரம் நடந்து செல்லுங்கள். இது ரத்த ஓட்டத்தை சீராக்குவதுடன், உடல் எடையையும் குறைக்கிறது. ரத்த ஓட்டம் சீராக இருக்கும் போது அதிகம் களைப்பு ஏற்படாது.

* உடற்பயிற்சி செய்த பின் அதிகமாக பசி ஏற்படும். அதற்காக நிறைய சாப்பிட்டு விடாதீர்கள். தினமும் அளவுடன் சாப்பிடுங்கள். தினமும் 2 பழங்களாவது சாப்பிடுங்கள். பப்பாளி பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி சாப்பிடலாம். அதன் மீது மிள குப் பொடி தூவினால் பசி அடங்குவதுடன் சரும மும் பளபளப்பாக மாறும்.

* முகத்திற்கு தரமான ப்ளீச்சிங், ப்ரூட் பேஷியல் செய்துகொள்ளலாம். கை, கால்களுக்கு மெனிக்யூர் மற்றும் பெடிக்யூர் செய்து வந்தால் திருமண சமயத்தில் அழகு கூடும்.

* திருமணத்திற்கு ஒருமாதத்திற்கு முன்பு கோல்ட் பேஷியல், தலைமுடி பராமரிப்பு ஆகியவற்றை செய்யலாம். முகப்பரு உள்ளவர்கள் இரண்டு வாரத்திற்கு முன்பே அழகுக் கலை நிபுணரிடம் சென்று சரிசெய்துகொள்ளுங்கள்.

* தலைமுடியை உறுதியாகச் சுத்தமாக வைக்க சூடான எண்ணையைத் தேய்த்து மசாஜ் செய்து கொள்ளுங்கள். நல்ல தூக்கம் அவசியம். தினமும் 8 மணிநேரம் தூங்குங்கள். தூக்கமும் அழகைக் கூட்டும்.

* கண்ணுக்கு கீழ் கருவளையங்கள் தோன்றினால், முட்டையின் வெள்ளைக்கருவை எடுத்து அந்த இடத்தில் தேய்த்து, உலர்ந்ததும் கஞ்சித் தண்ணீர் கொண்டு கழுவி விடுங்கள்.

* திருமணத்திற்கு இரண்டு நாள்களுக்கு முன் கை, கால்களில் மருதாணி போட்டுக்கொள்ளலாம். ராஜஸ்தானி மெகந்தி, கறுப்பு மெகந்தி, அரபிக் மெகந்தி என்று பலவகையான டிசைன்கள் உள்ளன.

* மூன்று நாள்களுக்கு முன்பே புருவத்தை ட்ரிம் செய்துகொள்ளுங்கள்.

### மேக் அப் போடுவது எப்படி?

* மாலையில் நடைபெறும் ரிசப்ஷனுக்கு சற்று அதிகமாகவும், காலையில் மிதமாகவும் மேப் அப் போட்டுக்கொள்ளுங்கள். திருமண நாளன்று அதிகமாக வியர்த்துக் கொட்டும். அதனால், கிரீம் பேஸ் மேக் அப்பை விட, பவுடர் மேக் அப் போடுவது நல்லது. மேக் அப் போடுவதற்கு முன் ஐஸ்கட்டி களைக் கொண்டு முகத்திற்கு ஒத்தடம் கொடுங்கள்.

* அவரவர் நிறத்திற்கேற்ப பவுண்டேஷன், பவுடர், லிப்ஸ்டிக் போட வேண்டும்.

* கண்களைச் சுற்றி ஐ-லைனர் வரையும் போது கலைநயத்துடன் வரைய வேண்டும். நிறத்திற்கேற்ப 'ஐ-ஷடோ'வைத் தேர்ந்தெடுங்கள்.

* மேக்அப் போடும்போது கழுத்து, கைகள்வரை ஒரே சீராகப் போடப்பட்டுள்ளதா என்று கவனிக்க வேண்டும்.


* கன்னத்திற்கு போடப்படும் 'ரூஜ்' தனியாக சிவப்பாக தெரியாமல் முகத்தோடு ஒன்றிப் போக வேண்டும். இதைச் சரியாக செய்தால் பள்ளமாக உள்ள கன்னங்களைக் கூட சரிசெய்திட முடியும்.

* மரூன் அல்லது பிரவுண் நிறத்தில் பொட்டு வைத்தால் போட்டோவில் பளிச் சென்று தெரிவீர்கள். மேலும் அழகூட்ட பொட்டைச் சுற்றி கற்களால் டிசைன்கள் செய்து கொள்ளுங்கள்.

* மேக் அப் செய்யும் போது முகத்தில் உள்ள கரும்புள்ளிகள், தோலில் உள்ள சுருக்கங்கள் மறைந்து விட வேண்டும். நல்ல தரமான மேக் அப் பொருட்களையே பயன்படுத்துங்கள். இல்லாவிட்டால், திருமண நேரத்தில் தோலில் அலர்ஜி ஏற்படும்.

(வளரும்)

# ஆண்களுக்கான அழகுக் குறிப்புகள்



அழகுபடுத்திக் கொள்வதும், அழகாகத் தோற்றமளிக்க வேண்டுமென்று எண்ணுவதும் ஆண், பெண் இருபாலருக்கும் உரியவை. எனினும், நம் நாட்டைப் பொறுத்தவரை, அழகுபடுத்திக்கொள்வது என்பது பொதுவாக பெண்கள் சமாசாரமாக உள்ளது. 'இல்லை எங்களுக்கும் தேவை' என்று கேட்கிற ஆணா நீங்கள்..? இதோ உங்களுக்காக சில குறிப்புகள்

### சிகை அழகு

கருமையான தலைமுடியே முக அழகுக்குக் காரணம். முடிந்தவரை நரை அதிகமாகும் முன்னரே கடைக்குச் சென்று ஆண்களுக்குரிய 'டை' வாங்கி நரையை மறைத்துக் கொள்ளுங்கள்! உச்சந்தலையில் முடி குறைய ஆரம்பித்தால், நீங்கள் கூடிய விரைவில் வழுக்கையாவது உறுதி! மனம் தளராதீர்கள்.

உங்கள் தலைமுடியைக் குட்டையாக வெட்டிக் கொள்ளுங்கள். சீப்பைப் பயன்படுத்தித் தலைமுடி படியவைத்து வாரிக்கொள்ளுதலைத் தவிர்த்து, உங்கள் வயதான தோற்றத்தைத் தள்ளிப் போடுங்கள். மேலும், வழுக்கை ஏற்படும் போது மூக்கு, காது மற்றும் தலையின் பின்புறம் உள்ள முடிகளை சீராக வெட்டி அல்லது நீக்கி உங்கள் தோற்றத்தைச் 'சிக்' கென்று வைத்துக் கொள்ளுங்கள்.

### சரும பளபளப்பு

ஆண்கள் தங்களுடைய சருமத்தைப் பாதுகாப்பது மிக அவசியமாகும். அதுவும் தினந்தோறும் முறையாக செய்ய வேண்டும். முதலில் சருமத்தைக் குளிர்ந்த நீரினால் சுத்தம் செய்து கொள்ளுங்கள். பின்னர் கடைகளில் கிடைக்கும் சரும வறட்சியைக் குறைக்கும் கிறீம்களையும், சூரிய வெப்ப தாக்கத்தில் இருந்து காக்கும் கிறீம்களையும் பூசிக் கொள்ளுங்கள். சில நாள்களிலேயே உங்கள் சருமம் வழவழப்பாகவும் பளபளப்பாகவும் ஆவதை உணர்வீர்கள்.

சருமம் மென்மையாவதால் முகச்சவரம் செய்து கொள்வது எளிமையாகி விடும். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். இந்த பளபளப்பு, வழவழப்பு என்பதெல்லாம் முகத்தோடு நின்று விடக்கூடாது. கைகள் கால்கள் என்று உடல் முழுவதுமான பராமரிப்பாக இருக்க வேண்டும்.

மேலும் பெண்கள் செய்வது போல் வாரத்துக்கு ஒரு முறை, கடைகளில் கிடைக்கும் பியூமைஸ் (pumice stone) கல்லினைப் பயன்படுத்தி உடலின் சொரசொரப்பான பகுதிகளை வழவழப்பாக்கிக் கொள்ளலாம்.

### ஆள் பாதி.. ஆடை பாதி

நீங்கள் உங்கள் உடைகளை ஸ்திரி(Iron) செய்ய கள்ளப்படுபவரா? கவலை வேண்டாம். எளிய வழி! துணிகளைத் துவைத்தவுடனேயே தாமதிக்காமல் அவற்றை நன்றாக உதறிக் காய வைத்தால் சுருக்கம் ஏற்படாது. ஸ்திரியும் தேவையில்லை.

வெப்ப நிலைக்கேற்ப ஆடைகளைத் தேர்ந்தெடுங்கள். வெயில் காலங்களில் வெளிர் நிற பருத்தி ஆடைகளை அணியுங்கள். இவ்வகை ஆடைகள் குறைவான வெப்பத்தையே உள்வாங்கும். எனவே வியர்வையினால் ஏற்படும் கறைகள் குறைந்து விடும். மேலும் முழுமையாக வியர்வைக் கறைகள் தொலைய, அக்குளில் இருக்கும் முடிகளை நீக்கி விடுங்கள். இதன் மூலம் துர்நாற்றம் குறைந்து நிம்மதியாக இருப்பீர்கள்.

### முகச்சவரத்திற்கு

முகச்சவரம் செய்யும் உங்கள் ரேசர் நீண்ட நாள்கள் செயல்பட இதோ ஒரு எளிய வழி. கடைகளில் கிடைக்கும் மினரல் எண்ணையையும், ரப்பிங் அல்கஹோலையும் (Rubbing alcohol) வாங்கிக் கொள்ளுங்கள். முகச்சவரம் முடித்த பின் ரேசரைக் காய வையுங்கள். பின் அதை மினரல் எண்ணையில் மூழ்க விடுங்கள். சிறிது நேரம் கழித்து ரேசரை வெளியே எடுத்து, ரப்பிங் அல்கஹோலால் எண்ணெயைத் துடைத்து எடுங்கள். இன்னும் உங்கள் ரேசர் நீண்டகாலம் உழைக்கும்!

# முகம் பொலிவு பெற...



* ஒரு வாழைப்பழம், ஒரு மேசைக்கரண்டி தேன், இவையிரண்டையும் நன்கு குழைத்து முகத்தில் தடவி 10 நிமிடம் ஊறவிடவும். உலர்ந்த சருமம் மிருதுவாகும்.

* வெள்ளரிச் சாறு, பன்னீர், எலுமிச்சைச் சாறு மூன்றும் சம அளவு கலந்து முகத்தில் தடவவும். சிறிது நேரம் கழித்து முகம் கழுவி விடவும். இவ்வாறு தொடர்ந்து செய்து வர முகப்பரு குறையும்; முகம் பொலிவடையும்.

* 50 மி.லீ. பால், சிறிது உப்பு, எலுமிச்சைச் சாறு கலந்து முகம் கழுவினால் சருமத்தில் உள்ள துவாரங்கள் சுத்தமாகும்.

* மஞ்சள், கோதுமை மா, நல்லெண்ணை சம அளவு கலந்து முகத்தில் தடவினால் ரோமங்கள் உதிர்ந்துவிடும்.

* ஒரு தேக்கரண்டி உளுந்துடன் 4 பாதாம் பருப்புகளை சேர்த்து தண்ணீரில் ஊற வைத்து அரைக்கவும். முகத்தில் தடவி 30 நிமிடம் கழித்துக் கழுவினால் முகம் பொலிவடையும்.

* ஒரு மேசைக்கரண்டி பால்பவுடர், ஒரு தோல் நீக்கிய வெள்ளரிக்காய், ஒரு தேக்கரண்டி தயிர் ஆகியவற்றை மிக்ஸியில் நன்கு அரைத்து, அதன் பசையை முகத்தில் தடவவும். 15 - 20 நிமிடம் கழித்து இளம் சூடான நீரில் கழுவினால் முகம் பொலிவடையும்.

* ஒரு முட்டையை நன்கு அடித்து, அதனுடன் ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தேக்கரண்டி பாதாம் எண்ணை கலந்து உலர்ந்த சருமம் உள்ளவர்கள் முகத்தில் தடவினால், சருமம் மிருதுவாகும்.

* அரைத் தேக்கரண்டி தேன், அரைத் தேக்கரண்டி எலுமிச்சைச் சாறு மற்றும் 3 மேசைக்கரண்டி தயிருடன் ஒரு முட்டையின் வெள்ளைகரு சேர்த்து அடிக்கவும். முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து இளம் சூடான நீரில் முகம் கழுவவும்.

* ஒரு முட்டையின் மஞ்சள் கரு, ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தேக்கரண்டி விற்றமின் E எண்ணை மற்றும் ஒரு தேக்கரண்டி பாதாம் எண்ணை கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைக்கவும். பின் இளம் சூடான நீரில் கழுவவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org